# முல்லை

(முல்லைப்பாட்டு ஒரு விளக்கம்)

புலவர். கா. கோவிந்தன்

# முல்லை

## (முல்லைப்பாட்டு விளக்கம்)

★

ஆசிரியர் :
புலவர் கா. கோவிந்தன், எம். ஏ.,

★

திருநெல்வேலி தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
154, டி. டி. கே. சாலை, ஆள்வார்பேட்டை,
சென்னை-18.
1990

© கா. கோவிந்தன் (1915)

1990 THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS PUBLISHING SOCIETY, TINNEVELLY, LIMITED

கிளைகள் :

சென்னை-108 திருநெல்வேலி-6 மதுரை-1
கோயமுத்தூர்-1 கும்பகோணம்-1
திருச்சிராப்பள்ளி-2 சேலம்-1

கழக வெளியீடு : கஅஅக

முதற்பதிப்பு : ஆகஸ்ட் 1990

O31,1B391
N90

MULLAI
(MULLAIP PATTU VILAKKAM)

அப்பர் அச்சகம், சென்னை-108.

# பதிப்புரை

தமிழர் தம் பெரும் இலக்கியச் செல்வம் தங்கத் தமிழான சங்கத் தமிழே. பாட்டும் தொகையுமென விரிந்து கிடக்கும் சங்க இலக்கியத்தில் தோய்ந்து இலக்கிய இன்பத்தைத் துய்க்க விரும்பாதவர் யாரும் இல்லையெனக் கூறலாம்.

இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் சங்க நூல்கள் உரையுடன் வெளிவந்து மக்களை மகிழ்வித்தன. சங்க நூல்களுக்கு வாய்த்த பழம்பெரும் உரையாசிரியர்களின் நுண்மாண் நுழைபுலம் வாய்ந்த யரந்து விரிந்த உரைகள் முறையாகத் தமிழ் இலக்கியம் பயில்வார்க்கு மட்டுமே பயன்படுவனவாம்.

பழைய உரையாசிரியர்களின் உரைகள் சில இடங்களில் மூல நூலுடன் ஒத்து அமையாதும் நின்றன; எனவே இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் சங்க நூல்கள் புதிய உரையாசிரியர்களின் உரையைக் கண்டன. தனித்தமிழ்த்தந்தை மறைத்திரு: மறைமலையடிகளார் முல்லைப்பாட்டிற்கும் பட்டினப்பாலைக்கும் புதிய ஆராய்ச்சியுரை இயற்றினார். ந. மு. வேங்கடசாமி நாட்டார், உரைவேந்தர் ஔவை. அ. துரைசாமிப் பிள்ளை, பெருமழைப் புலவர் பொ. வே. சோமசுந்தரனார் போன்ற பேருரைகாரர்களும் சங்கப் பாடல்களுக்குப் புத்துரை கண்டனர். வரிக்குவரி உரையெழுதாது மூலத்தின் செம்பொருளை எளிய நடையில் இனிய வகையில் படைத்து சங்கப் பாடல்களை

மக்களுக்கு இனிக்கும் வகையில் அளிக்க வேண்டுமென்ற நோக்குடன் முதற்கண் கலித்தொகை நூலை எளிய நடையில் வடித்துத் தந்தவர் பெரும்புலவர் கா. கோவிந்தன் எம். ஏ. அவர்கள். சங்க கால அரசர், புலவர் வரலாற்றைத் திறம்படப் படைத்த புலவர் அவர்கள் கால்டுவெல் பெருமகனாரின் திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணத்தையும் பி. டி. சீனிவாச அய்யங்காரின் தமிழர் வரலாற்றையும் தமிழில் தந்து தமிழன்பர்களுக்குப் பெருந்தொண்டாற்றியுள்ளார்கள்.

தற்போது பத்துப்பாட்டு நூல்களுக்கு விளக்கம் எழுதத் தொடங்கி முதற்கண் முல்லைப்பாட்டின் விளக்கத்தினை 'முல்லை' என்ற இந்த நூலில் தந்துள்ளார். படிப்போர் பயன்பெற மூலமும் நூலில் சேர்க்கப்பட்டுள்ளது.

தமிழ் மக்கள் வாங்கிப் படித்துப் பயன் பெறுவார்களென நம்புகிறோம்.

—சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.

# முன்னுரை

தமிழ்மொழி இனிமை வாய்ந்தது. ''இனிமையால் இயன்ற இளமகளிர்'' என்ற பொருள்படவந்த ''தமிழ் தழீஇய சாயலவர்'' என்ற தொடரில் வரும். ''தமிழ்'' என்ற சொல்லே, இனிமை எனும் பொருள் தருவதாகும் எனக் கூறித், தமிழ் மொழிக்குப் பெருந்தொண்டு புரிந்துள்ளார், சீவகசிந்தாமணி என்னும் பெருங் காப்பியப் பேராசிரியர் திருத்தக்க தேவர்.

இனிய சொற்களைத் தேர்ந்து, இனிமையாகச் சொல்லாட விரும்பிய தமிழர், தாம் கூற விரும்பும் ஒவ்வொரு கருத்தும் இனிமையுடையவாதல் வேண்டும்; இனிக்கும் வகையில் உரைக்கப் பெறுதல் வேண்டும் எனவும் விரும்பினார்கள். அவ்வாறே உரைத்தும் வந்தார்கள். செந்தமிழ் இலக்கியங்கள் அனைத்தும் இச் சிறப்புடையவாம்.

''உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின் வாக்கினிலே ஒளி உண்டாகும்'' என்றார் ஒரு பெரியார். தமிழர் வாக்கு இனிமை வாய்ந்தது என்றால், அவர் உள்ளமும், அவ்வுள்ளம் உந்த உளவாகும் அவர் செயல் பாடும் இனிமை வாய்ந்தனவே ஆகும். இது, உண்மை என்பதைப் பழந்தமிழ் இலக்கியங்கள் காட்டும் படப் பிடிப்பினைக் காணும் வாய்ப்பினைப் பெற்றார் அனைவரும் உணர்வர்.

பலநூறு ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த நம் பழப்பெரும் மூதாதையர் தம் பண்பாட்டுப் பெருமை யினை, இற்றைத் தமிழரும், பிறரும் அறிந்துகொள்ளு தல் வேண்டும் என்ற அவாவின் விளைவாக, அக்காலப் புலவர் பெருமக்கள், ஆயிரம் ஆயிரம் பாக்களைப் பாடிச் சென்றார்கள். ஆனால் அவர்கள் பாடிச் சென்ற அப் பாக்களின் களஞ்சியத்தைக் காக்கத் தவறி

விட்டார்கள். விழிப்புணர்வு அற்ற சிலர் என்றாலும், நம் மூதாதையருள், விழிப்புணர்வோடு இருந்தவர்கள். அழிந்தன போக அழியாதிருந்த அப்பழம் பாக்களை யெல்லாம் அரிதின் முயன்று தேடிக் கொண்டார்கள்.

அவ்வாறு தேடிப் பெற்ற அப்பாக்களை ஊன்றிப் பயின்ற புலமைசால் பெரியார்கள் பலரும் ஒன்றுகூடி இருந்தும், அப் பாக்களில் பொதிந்து கிடக்கும் பொருள் வளம், அப் பாக்களின் அடிஅளவு ஆகியவற்றை அளவு கோலாகக் கொண்டு, அப்பாக்களையெல்லாம், பத்துப் பாட்டு, எட்டுத் தொகை என்ற தலைப்புக்களில் தொகுத்து நமக்கு அளித்துச் சென்றனர். அவ்வாறு தொகுக்கப்பெற்ற தொகை நூல்களில், இரண்டாவது வரிசையில் நிற்பதான எட்டுத் தொகை நூல்களில், இடம் பெற்றிருக்கும் பாக்களின் நலங்களை, நம் கால மக்களும் உணர்ந்து மகிழ வேண்டும் என்ற அவாவினால் உந்தப்பட்ட காரணத்தால், அவ்வரிசையுள் முதற்கண் வைத்துப் பெருமை செய்யப் பெற்றதான நற்றிணை யினை, ''நற்றிணை விருந்து'' என்ற தலைப்பிலும், ''நல்ல குறுந்தொகை'' எனச் சிறப்பிக்கப்பெற்றதான குறுந்தொகையினை, ''குறுந்தொகைக் கோவை'' என்ற தலைப்பிலும், ஆறாவது இடம் அளிக்கப்பெற்றது ஆயினும், ''கற்றறிந்தார் போற்றும் கலி'' என்ற சிறப் பினைப் பெற்றதான கலித்தொகையினைப், ''பாலைச் செல்வி'', ''குறிஞ்சிக்குமரி'', ''மருதமலை மங்கை'', ''நெய்தற் கன்னி'' என்ற ஐந்து தலைப்புகளிலும், முப்பது ஆண்டுகளுக்கு முன்பே விளக்கி வெளியிட்டேன்.

பழந்தமிழர் தொகுத்தளித்த வரிசையிலேயே, அவ் வெட்டுத் தொகை நூல் விளக்கங்களையும் அளிக்க வேண்டும் என, என் உள்ளம் விரும்பினாலும், சிலபல காரணங்களால், அவ் வரிசை வழிச் செல்ல இயலாமல் போய்விட்டது. அண்மையில், அவ்வரிசையுள், நான்காவ தாக நிற்பதம் ''ஒத்த பதிற்றுப்பத்து'' என்ற

பாராட்டினைப் பெற்றதுமாகிய பதிற்றுப்பத்தின் விளக்கத்தினை அளிக்க முன் வந்து, முதலும் ஈறும் இல்லாமல் போக, இடையில் எஞ்சி நின்ற எட்டுப் பத்துக்களில், முதல் ஐந்து பத்துக்களை, முறையே, ''புண் உமிழ் குருதி'', ''அடுநெய் ஆவுதி'', ''கமழ்குரல் துழாய்'' ''சுடர்வீ வேங்கை'', 'வடுஅடு நுண்ணுயிர்'' என்ற தலைப்புகளில் வெளியிட்டேன். எஞ்சிய பத்துக்களின் விளக்கங்கள் எட்டாய் உள்ளன. விரைவில் வெளி வரும்.

கரந்தைத் தமிழ்ச் சங்க வெளியீடாகிய ''தமிழ்ப் பொழில்'', தென் இந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழக வெளியீடாகிய ''செந்தமிழ்ச் செல்வி'' ஆகிய திங்கள் வெளியீடுகளில் நான் எழுதி வந்த பதினேழு கட்டுரைகளை ஒரு நூலாகத் தொகுத்து, 1935இல் எழுதப்பட்ட முதல் கட்டுரைத் தலைப்பாகிய, ''காவிரி'' என்ற பெயரில் ஒரு நூல் வெளியிட்டேன்.

''நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம்'' என்ற பெருமைக்குரிய நூலை, வரலாற்றுக் கண்ணோடும், இலக்கியக் கண்ணோடும், பாட்டுடைத் தலைவர்களின் பெருமை ' சிறுமைகளின் கண்ணோடும் திறனாய்வு செய்தாரும், செய்வாரும் பலர். அத்தகைய திறனாய்வுகள் சிலவற்றைப் படிக்கும்வாய்ப்புக் கிடைக்க அவர்கள் எடுத்த முடிவுகளில் சில. இளங்கோ அடிகளின் படைப்போடு முரண் படுவதாகத் தெரிய வந்தமையால், அம் முரண்பாடுகளைத் தக்க காரணம் காட்டி விளக்கம் அளித்தேன். அவ்வாறு பதினோரு தலைப்புகளில் அளிக்கப்பட்ட விளக்கங்களின் தொகுப்பை ஒரு நூலாக்கிச் ''சிலம்பொலி'' என்ற தலைப்பில் வெளியிட்டேன்.

திருவாளர் பி. டி. சீனிவாச அய்யங்கார் அவர்களின் ''தமிழர் வரலாறு'' என்ற ஆங்கில நூலைத் தமிழாக்கம் செய்தும், இடைஇடையே, அவர் கூறும் சில கருத்துக்கள்

முரண்பட்டனவாகப் புலப்பட, அவற்றைத் திறனாய்வு செய்து பின் இணைப்பாக வைத்தும், "தமிழர் வரலாறு மொழி பெயர்ப்பும் திறனாய்வும்" என்ற தலைப்பில், "திருமாவளவன்", "புலவர் வரிசை" "அரசர் வரிசை" என்ற 23 நூல்களை வெளியிட்டு, 1951லேயே என்னையும் ஓர் எழுத்தாளனாகத், தமிழ் இலக்கிய உலகிற்கு அறிமுகம் செய்துவைத்த பெருமைக்குரிய கழக வெளியீடாக, என் ஐம்பதாவது படைப்பாக வெளியிட்டேன்.

சங்க இலக்கியப் பாக்களின் தொகுப்புகளாகிய பத்துப்பாட்டு, எட்டுத்தொகை வரிசையில், எட்டுத் தொகையில் சில நூல்களின் திறனாய்வு செய்து வெளியிட்ட எனக்கு அவ் வரிசையில் முதற்கண் வைத்துப் போற்றப்படும் பத்துப்பாட்டுப் பாக்களின் திறனாய்வும் செய்ய வேண்டும் என்ற வேட்கை எழுந்தது இயல்பே. அவ் வேட்கையால் உந்தப்பட்ட நான் 782 அடிமுதல் 103 அடிவரை உள்ள அவ்வரிசையுள், அடியளவால் சிறியதாய, "முல்லைப் பாட்டினை" முதற்கண் திறனாய்வு செய்து, "முல்லை" என்ற தலைப்பில், கழக வெளியீடாக வெளியிட முன் வந்துள்ளேன். என் படைப்புகளில் பெரும்பாலனவற்றை வெளியிட்ட இனியும் வெளியிட இருக்கும் கழகம், இந் நூலையும் வெளியிட முன் வந்தமைக்குக் கழகத்தினர்க்கும், அவர் தம் தலைவர். என் இனிய நண்பர். உயர்திரு, முத்துக் குமாரசுவாமி அவர்களுக்கும் என் நன்றிப் பெருக்கினைச் செலுத்தக் கடமைப்பட்டுள்ளேன். என் முந்தைய படைப்புகளுக்கு நல்லாதரவு தந்த, தந்துவரும தமிழ் கூறும் நல்லுலகம் "முல்லை"யின் நறுமணத்தினையும் நுகர வேண்டுகின்றேன்.

அன்புள்ள,

கா. கோவிந்தன்

# முல்லை

## முல்லைப்பாட்டு

### ஒரு விளக்கம்

திருமுகாற்றுப்படை முதலாக, மலைபடுகடாம் ஈறாக உள்ள பத்துப்பாட்டு என்னும் இலக்கிய வரிசையில் ஆறாவதாக இடம் பெறுவது முல்லைப்பாட்டு, கூறிய பத்துப்பாக்களில் அடியளவால் இறுதியில் வைக்கப்படும் என்றாலும், அவற்றுள் அகத்திணைப் பொருள் பற்றிக் கூறும் நான்கனுள், முதற்கண் வைத்துப் பயிலப்படுவது.

ஒருவனுக்கு ஒருத்தி, ஒருத்திக்கு ஒருவன் என்ற உயர்ந்த ஒழுக்க நெறியோடு வாழ்க்கையைத் தொடங்குமிடத்துப் பிறந்த பேரின்பம், இத்தகையது எனப் பிறர்க்குப் புலனாக எடுத்துரைக்க மாட்டாததாய், அவ்விருவர் உள்ளத்து உணர்வே நுகர்ந்து மகிழ்தற்குரிய ஒருபொருள் ஆதலின், அக்காதலின்ப வாழக்கையை அக ஒழுக்கம் என்றும், அவ்வின்ப வாழ்விற்குத் துணை நிற்கும் பொருளீட்டல், புகழீட்டல் போலும் செயல்களைப் புறஒழுக்கம் என்றும் பழந்தமிழச் சான்றோர் வகுத்துக் காட்டினர்.

அகத்திணைப் பொருள் பற்றிய செய்யுள் ஒவ்வொன்றும், முதல், கரு, உரி ஆகிய முப்பொருள்களையும் உடையவாதல் வேண்டும். "முதல், கரு, உரிப்

பொருள் என்ற மூன்றே நுவலுங்காலை முறை சிறந்தனவே'' என்பது தொல்காப்பியம்.

முதல், கரு, உரி ஆகிய முப்பொருளும் இடம்பெற வேண்டும் என்ற விதிக்கு மாறாக, முதற்பொருள் இடம் பெறாதிருக்க வருவனவும், கருப்பொருள் இடம் பெறாது போக வருவனவும், முதற்பொருள், கருப் பொருள் ஆகிய இருபொருள்களும் இடம் பெறாதிருக்க வருவனவும், அகத்திணைச் செய்யுட்களாகவே மதிக்கப் படும் என்றாலும் அவை, முப்பொருளும் இடம்பெற வரும் செய்யுட்களைப் போலச் சிறப்புடையனவாக மதிக்கப்படமாட்டா.

முல்லைப்பாட்டு, அகத்திணைச் செய்யுட்களுக் குரிய முதல், கரு, உரி ஆகிய முப்பொருளையும் குறை வறக்கொண்டிருககும் பெருமைக்கு உரியதாகப் படைத் துள்ளார் புலவர், காவிரிப்பூம் பட்டினத்துப் பொன் வாணிகனார் மகனார் நப்பூதனார்.

திணைக்குரிய நிலம், பெரும்பொழுது, சிறுபொழுது ஆகிய இவை முதற் பொருள் எனப்படும். ''முதல் எனப்படுவது நிலம் பொழுது இரண்டின் இயல்பு என மொழிப'' என்பது தொல்காப்பியம்.

காடும், காடுசார்ந்த பகுதியும் முல்லைக்குரிய நிலம். கார்காலமும், அக்காலத்து மாலையும், முறையே அந்நிலத்துக்குரிய பெரும்பொழுதும் சிறுபொழுதும் ஆம். ''மாயோன் மேய காடுறை உலகம்''; ''காரும் மாலையும் முல்லை'' என்பன தொல்காப்பியம்.

''கான்யாறு தழீஇய அகனெடும்புறவு'' (24) ''கானம் ஒன்றிய நந்திய செந்நிலப் பெருவழி'' (97) ''முதிர்காய் வள்ளியங்காடு'' (101) என்ற வரிகளில் நிலமும்; ''எதிர்செல் வெண் மழை பொழியும் திங்கள்'' (100) என்ற வரியில் பெரும்பொழுதும், ''பெரும் பெயல் பொழிந்த சிறுபுன் மாலை'' (6) என்ற

தொடரில் சிறுபொழுதும் கூறப்பட்டிருக்கும் வகையில், முல்லைத் திணைக்குரிய முதற்பொருள், முல்லைப் பாட்டில், முழுமையாகக் குறைவறக் கூறப்பட்டிருப்பது காண்க.

அந்தந்த நிலங்களுக்குரிய மரம், செடி, கொடிகள், நடப்பனவும், பறப்பனவும் ஆகிய உயிரினம், வாழும் மக்கள், அவர் வணங்கும் தெய்வம், உண்ணும் உணவு, கொட்டும் பறை, நுகரும் யாழிசை, மேற்கொள்ளும் தொழில் முதலாயின அத்திணைகளின் கருப்பொருள் களாம். ''தெய்வம் உணாவே, மாமரம், புள், பறை செய்தி, யாழின் பகுதியொடு தொகைஇ அவ்வகை பிறவும், கருவென மொழிப'', என்பது தொல்காப்பியம்.

''செறியிலைக் காயா அஞ்சனம் மலர, முறியிணர்க் கொன்றை நன்பொன் காலக், கோடல் குவிமுகை அங்கை அவிழத், தோடார் தோன்றி குருதி பூப்ப'', (93-96) என்ற வரிகளில் மரம், செடி, கொடிகளும், ''சிறுதாம்பு தொடுத்த பசலைக்கன்று'' (12) ''கோவலர் பின்நின்று உய்த்தர இன்னே வருகுவர் தாயர்'' (15-16) ''திரி மருப்பு இரலையொடு மடமான் உகள'' (99) என்ற வரிகளில் உயிரினங்களும், ''சிறுதாம்பு தொடுத்த பசலைக்கன்றின் உறுதுயர் அலமரல் நோக்கி ஆய்மகள், நடுங்கு சுவல் அசைத்த கையள், கைய கொடுங்கோல் கோவலர் பின் நின்று உய்த்தர இன்னே வருகுவர் தாயர், என்போள் (13-16) என்ற வரிகளில், அந்நிலத்து மக்களாம், ஆயர், ஆய்ச்சியர்களும், அவர் மேற்கொள்ளும் ஆனிரை ஓம்பும் தொழிலும், 'வானம் வாய்த்த வாங்கு கதிர்வரகு' என்ற வரியில் (98) வரகு விளைத்தல் எனும் தொழிலும், ''நனந்தலை உலகம் வளைஇ நேமியொடு வலம்புரி பொறித்த மாதாங்கு தடக்கை நீர்செல நிமிர்ந்த மாஅல்'' (1-3) ''அருங்கடி மூதூர் மருங்கில் போகி, யாழிசை இனவண்டு ஆர்ப்ப நெல்லொடு நாழிகொண்ட நறுவீ முல்லை அரும்பவிழ்-

அலரி தூஉய்க் கைதொழுது, பெருமுது பெண்டிர் விரிச்சி நிற்ப'' (7-11) என்ற வரிகளில் அவர்கள் வணங்கும் தெய்வமும், வழிபாட்டு முறையும், 'நெல்லொடுநாழி கொண்ட'' (8-9) 'வானம் வாய்த்த வாங்கு கதிர் வரகு' (98) என்ற வரிகளில் அவர்தம் உணவும், 'நறுவீ முல்லை' (9) 'சேண்நாறுபிடவம்' (25) செறிஇலைக் காயா (93) 'முறி இணர்க்கொன்றை' (94) ''கோடல் குவிமுகை'' (95) ''தோடார் தோன்றி'' (96) என்ற வரிகளில் அந்நிலத்து மலர்களும், ''கான்யாறு தழீஇய அகன் நெடும் புறவு'' (24) என்ற வரியில் அந்நிலத்து நீரும் கூறப்பட்டு, முல்லைத்திணைக்கு உரியவாகிய கருப்பொருள்கள் அனைத்தும் குறைவற இடம்பெற்று இருப்பது காண்க.

மணங்கொண்டு இல்லற வாழ்க்கையை இனிதே நடத்திக்கொண்டிருக்கிற நாட்களில், வீட்டிற்கும் நாட்டிற்கும் ஆற்றவேண்டிய கடமைகளை முன்னிட்டு, இல்லறத்தலைவன், இல்லறத் தலைவியை விடுத்துப் பிரிந்துசெல்ல, அவன் மீண்டு வருவதாகக் குறித்துச் சென்ற கார்காலம் வரும்வரை, இல்லறத்தலைவி, தனிமைத் துயர்தாங்கி ஆற்றியிருத்தல் முல்லைத் திணைக்குரிய உரிப்பொருள் ஆகும்.

''நெஞ்சாற்றுப் படுத்த நிறைதபு புலம்பொடு, நீடு நினைந்து தேற்றியும் ஒடுவளை திருத்தியும், மையல் கொண்டும் ஒய்யென உயிர்த்தும், ஏவுறு மஞ்ஞையின் நடுங்கி இழை நெகிழ்ந்து, பாவை விளக்கிற் பரூஉச்சுடர் அழல, இடம் சிறந்து உயரிய எழுநிலை மாடத்து, முடங்கிறைச் சொரிதரும் மாத்திரள் அருவி, இன்பல் இமிழிசை ஓர்ப்பனள் கிடந்தோள்!-(81-88) என்ற வரிகளில் தெளிவாக இடம் பெற்றிருப்பது காண்க.

இம்முல்லைப்பாட்டைக் கார்ப்பருவத்து மாலை வரவுகண்டு வருந்திகிடக்கும் தலைவியது நிலைவிளக்கும்,

'நனந்தலை உலகம் வளைஇ நேமியொடு' என்பது முதல் ''பூப்போல் உண்கண் புலம்பு முத்துறைப்ப'' என முடியும் வரையுள்ள இருபத்தி மூன்றாவது வரியோடு நிறுத்திக்கொண்டு, அவ்வாறு வருந்திக்கிடப்பவள் மகிழ, தலைவன் மீண்டுவந்து சேர்ந்ததை விளக்கும், ''நெஞ் சாற்றுப்படுத்த நிறைதபு புலம்பொடு'' எனத் தொடங்கும் 81-வது வரிமுதலாக 'வினைவிளங்கு நெடுந்தேர் பூண்டமாவே' என்ற இறுதிவரி வரையான 23 வரிகளை அடுத்து, இணைத்து 46 வரிகளைக் கொண்ட சிறிய பாட்டாகக் கொண்டிருக்கலாம்.

'கான்யாறு தழீஇய அகன் நெடும்புறவு' முதலாக 'இன்துயில் வதியுநள் காணாள் துயர் உழந்து' வரையுள்ள 57 வரிகள் இல்லாமலே, முல்லைத் திணைக் குரிய முதல், கரு, உரி பொருள்களைக் குறைவறக் கொண்ட முல்லைத்திணைப்பாட்டாக அது அமைந் திருக்கும். ஆனால், அவ்வாறு கொண்டிருந்தால், முல்லைத் திணையை முழுமையாகக் கொண்டதாகாது; முல்லைத் திணை குறித்த அகப்பொருள் கூறியதோடு, அம்முல்லைக்குப் புறனான புறப்பொருளையும் கூறினால் தான் முல்லைத்திணை நிறைவு பெறும் என்பதை உணர்ந்தவர் புலவர்; ஆகவே அதுகூறும் அப்பகுதிகளை, இடையில் அமைத்துள்ளார்.

முல்லை என்ற அகத்திணையின் புறத்திணை, வஞ்சித்திணை என்றும், அது மண் ஆசை கொண்டு படைதொடுத்து வருவானை வென்று பணியவைப்பது என்றும் கூறுவர்.

''வஞ்சி தானே முல்லையது புறனே''

''எஞ்சா மண்நசை வேந்தனை, வேந்தன்
அஞ்சுதகத் தலைச்சென்று அடல்குறித் தன்றே''

என்பன தொல்காப்பியம். ஆகவே முல்லைத்திணையின் அகப்பொருள் பற்றிப் பாடவந்த புலவர், பாவின் இடையே, வஞ்சித்திணையைக் கூறத்தொடங்கி, அவ்வஞ்சிப் பொருளாம் மண்ணாசை கொண்ட வேந்தனை வெற்றிகொண்ட ''வேந்தன் செயலைக் கூறு முகத்தான்'' அவன் இருந்த காட்டுப்பாசறை இயல்பைக் கூறவேண்டியது இன்றியமையாததாயிற்று.

# பாடிய புலவன்

இத்துணைச் சிறப்பும் அமைய முல்லைப்பாட்டைப் பாடி அளித்த புலவர், கந்தரத்தனார், செங்கண்ணனார், காரிக்கண்ணனார் போலும் புலவர்கள் வாழ்ந்த காவிரிப்பூம்பட்டினத்தில் வாழ்ந்தவர். அறுவை வாணிகன் இளவேட்டனார், கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார், பண்ட வாணிகன் வெண்ணாகனார் போலவே வணிகக் குலத்தில் வந்தவர். அவர் தந்தை மேற் கொண்டிருந்தது பொன் வாணிகம். காவிரிப் பூம்பட்டினத்தில், நாற்சந்தியில் இடங் கொண்டு, "மனத்தது பூவாக மாண்டாரின் நீராடி மறைந்து ஒழுகுவார்" போலும் மாபாவிகளைக் கொன்று தின்று அறம் காக்கும் காவல்பூதத்தின் பெயரையே தம்முடைய பெயராகக் கொண்டவர்களுள் தலை சிறந்து விளங்கிச் சிறப்பிக்கப் பெற்றவர். இச் சிறு வரலாற்றுக் குறிப்பைக் "காவிரிப் பூம்பட்டினத்துப் பொன் வாணிகனார் மகனார் நப்பூதனார்" என்ற தம் பெயர் மூலம் வெளிப் படுத்துவதல்லது தம்மைப் பற்றி விளம்பரப்படுத்திக் கொள்ளா விழுமிய பண்பாளர் நம் புலவர். இனி அவர் பாடிய முல்லைப் பாட்டினுள் நுழைவோமாக.

# பாநலம்

காவிரிப்பூம் பட்டினத்துப் பொன்வாணிகனார் மகனார் நப்பூதனார், முல்லைப்பாட்டை நவில்தொறும் நயம் பயக்கும் வகையில் பாடியுள்ளார்.

ஒரு நூலை இயற்றப்புகும் புலவன், நூலின் தொடக்கத்தில், தான்பழிபடு கடவுளையாதல், நூலுக்கு ஏற்புடைக் கடவுளையாதல் வாழ்த்தி வணங்குதல் மரபு என்பதையொட்டி, முதல் மூன்று வரிகளில், தாம்பாட எடுத்துக்கொண்ட முல்லைத் திணைக்குரிய கடவுளாம் திருமாலின் திருவுருவை, அதிலும், தாம்பாடும் முல்லைப் பாட்டு அடியளவால் குறுகியதேனும், பொருள் விளக்கத்தில் வானினும் உயர்ந்தது என்பதை உரையாமல் உரைக்கும் வகையில், தொடக்கத்தில் வாமனனாம் குறள் உருவில் தோன்றி, இறுதியில் ஈரடியால் உலகை அளக்கவல்ல நெடிதுருவமாய் உயர்ந்த திருமால் வடிவைக்கூறி, அதை அடுத்து முல்லை நிலத்தை வாழவைக்கும் கார்ப்பருவ மழைவரவையும், அது பெய்யும் மாலைப்பொழுதையும் கூறி, கார்காலமும், அக்காலத்து மாலைப்பொழுதும் வரக்கண்டு ''அந்தோ ; மகளின் கணவன் வருவதாகக்கூறிச்சென்ற கார்காலத்து மாலை வந்துவிட்டதே, அவள் கணவன் வந்திலனே; இவள் நிலை என்னாம்?'' என்ற கவலைமிக, மகள் வருத்தத்தைப் போக்கவல்ல மாமருந்தாம் அவன் வருகை, எப்போது நிகழும்? இவள்நோய் எப்போது தீரும் என்பதை அறியத்துடிக்கும் பெருமுதிர் பெண்டிரையும், அவர்கள் அதுஅறிந்துகொள்வான் வேண்டி, விரிச்சி கேட்க, ஊர்ப்புறம் நோக்கி விரைவதையும் கூறி, அடுத்து, ஆங்கு அவர் கேட்ட நற்சொல் இதுவெனக்கூறுவதன் முன்னர், அது கூறிய ஆய்மகள்

ஆயர்களின் செல்வமாக மதிக்கப்படும் ஆனிரைக் கன்றுகள்பால் அவள் காட்டும் அன்பு, ஆகியவற்றைக் கூறி, அது கேட்பவர் உளத்தில், கன்றின் துயர் இது, அக்கன்றின்பால் ஆய்மகள் காட்டும் அன்பு இதுவாயின், ஆயர்குல ஆடவர் இயல்பு யாதோ? கன்றீன்ற காராவின் இயல்பு யாதோ? என்ற வேட்கை எழும் என்பதறிந்து, அடுத்து அவற்றைக்கூறி, அடுத்து, நற்சொல் கேட்ட பெருமுது பெண்டிர், மனைபுகுந்து தாம் கேட்டுவந்த விரிச்சியின் நலம் கூறி, அவன் விரைவில் வந்து சேர்வன் எனக்கூறும் ஆறுதல்உரைகூறி, அவர் கூறுவ எதுவும் காதில் புகமாட்டா அளவு, கணவனைக் காணாக் கடுந் துயரில் கண்ணீர் சுரந்தது வீழ்ந்துகிடக்கும் இளையோள் இயல்புகூறி, அடுத்து அது கேட்டவர் உள்ளத்தில், இத்துணை இளையோளை இத்துணை அழகுடையோளை இத்துணைப் பேரன்பினாளை, இவ்வாறு வருந்த விடுத்துச் சென்றிருப்பவனின் இயல்பு யாதாக இருக்கும்? இவளையும் மறத்துபோக அவன், ஆங்கு மேற்கொண்டிருக்கும் பணிதான் யாதாக இருக்கும்? என்ற கேள்விகள் எழும் என்பதறிந்து, அவன் இயல்பு கூறத்தொடங்கி, முதற்கண், அவன் ஆங்கு அமைத்திருக்கும் பாசறையின் அமைப்பு நலம்கூறி, அடுத்து ஆங்கு வெற்றிக்குத் துணைநின்ற வீரர்களுக்கு ஏற்பட்ட இழப்பை எண்ணி வருந்தியும், இழப்பு நேர்ந்தாலும் எடுத்து வந்த வினை இனிதே முடிவுற்றது என்ற மகிழ்ச்சியால் சிறிதே கண்உறங்கியும் கிடக்கும் அவன் நிலையைக்கூறி, அதிலும் இக்காட்சிகள், மனையகத்தே வீழ்ந்துகிடப்பவள் மனத்திரையில் புலப்படும் வண்ணம் விளங்கக்கூறி, அடுத்து அம்மனக்காட்சிதரும் மனநிறைவால், தன் துயரை ஒருவாறு தாங்கி இருப்பதே, அறமாம் என உணர்ந்து, அது மறக்க இசையில் சிந்தனையைப் போக்கிக் கிடக்கும் அவ்விளையோள் நிலையை, மறுபடியும்கூறி, அடுத்து ஆற்றியிருப்பது தனக்கு அறம் என்பதை இவள் உணர்ந்தாள் என்றால் வினை முடிந்த

நிலையில் விரைந்து வீடடைதல் அவன் கடன் அன்றோ? அது அவன்பால் உளதா? என வினாவுவார்க்கு விடை அளிப்பார் போன்று, அடுத்து அவன் மீட்சியைக் கூறத் தொடங்கி அவன்வரும் காட்டின் வனப்பு, ஆங்குவாழ் மாவினம் காதலிற்களித்து உலாவும் இன்பக்காட்சி, அவற்றைக்காணும் அவன் உள்ளம், காதலியைக் காணத் துடிக்கும் என்பதறிந்து, இயல்பாகவே விரைந்து ஓடும் குதிரைகளை மேலும் விரைந்து ஓட்டும் தேர்ப்பாகன், அவன் குறிப்பறிந்து விரைந்துஓடி மனை முற்றத்தே நின்று, நம்பணி முடிந்துவிட்டது என்ற மனநிறைவைக் காட்டிலும், நீ காணத்துடிக்கும் உன்கணவனை உன்பால் கொண்டு சேர்த்துவிட்டேன் என்பதை உரைக்கும் ஆர்வமிகுதியால், கனைத்து ஆரவாரிக்கும் தேர்க்குதிரைகள் ஆகியவற்றைக் கூறிமுடித்துள்ள முறை, மிகமிகப் பாராட்டிற்குரியது.

இக் காட்சிகளைக் காட்ட, புலவர் நம்மை எங்கெங்கோ அழைத்துச் செல்கிறார். கார்மேகம் நீர் குடிக்கச் செல்லும் கடலுக்கும், அது உலகையே வளைத்துக் கொள்வதுபோல் விரைந்து எழுந்து படியும் மலைமுகடுகளுக்கும், அது பெருமழையாக மாறிக் கொட்டியதால், வெள்ளம் பாயும் முல்லைக்காட்டு நிலத்திற்கும், அந்நிலத்துப் பேரூரின் புறநகர்க்கண் உள்ள ஆயர்பாடியில், ஆனிரைத்தொழுவத்திற்கும், அந்நாட்டு அரசன் பெருங்கோயிற்கண், கலக்கமிகுதியால் கண்ணீர் சொரிந்து கிடப்பாள் ஓர் இளம் பெண்ணின் பள்ளியறைக்கும், ஒரு பெருநாட்டின் இயற்கை அரணாக அமைந்திருக்கும் காவற்காட்டில் செயற்கை அரணாக இலைக்கூரைவேய்ந்து கட்டப்பட்டிருக்கும் காட்டுப் பாசறைக்கும், அப்பாசறைக்குள் நாற்படை வீரர்களின் குடியிருப்பு, களிறுகள் காவல்காத்து நிற்கும் நாற்சந்தி, நாழிகைக்கணக்கர், மெய்க்காப்பாளர் போல்வார் பணி புரிந்து தன்னைச்சூழ்ந்திருக்க, அரசன் இருக்கும் தனி அறை, ஆகியவற்றை நிரலே காட்டிவந்து, இறுதியில்

போரில் பெற்ற வெற்றியால் களிப்புற்றிருப்பதற்கு மாறாக, அவ்வெற்றிக்குக் காரணமாய் அமைந்த நாற்படைக்கு ஏற்பட்ட இழப்பை எண்ணி எண்ணி, வருந்தும் நல் உள்ளம் படைத்த, அரசிளங்குமரன் வீழ்ந்துகிடக்கும் பள்ளி அறைக்கண் கொண்டு நிறுத்துகிறார். அடுத்தகணமே, அத்தகையானைக் கணவனாகப் பெற்ற பெருமைக்குரிய அவ்வினையோள் மனத்துயர் மறக்க இசையின்பத்தில் ஆழ்ந்து கிடக்கும் அவள் பள்ளி அறைக்குக்கொண்டு செல்கிறார். ஆங்குச் சிறிதுபோதே இருக்கச் செய்துவிட்டு, மீண்டும் காட்டுப் பாசறைக்குக் கொண்டு செல்கிறார். ஆங்கு மனைநோக்கிப் புறப்பட்டுவிட்ட நாற்படை செலவைக் காட்டுகிறார். படை செல்லும் காடும், ஆங்கு மலர்ந்து மகிழ்வூட்டும் மலர்க்காட்சி, பிணையோடு ஆடிமகிழும் கலைமான் கூட்டம் வானம், வாய்க்க வளர்ந்து வளங்கொழித்துக் கிடக்கும் வரகுக் கொல்லைகள், அவன் ஊர்ந்துசெல்லும் நெடிய வலிய தேர், அதில் பூட்டிய குதிரைகள், ஆகிய வகைகளைக் காட்டிக்கொண்டே வருவதன் மூலம், வழிநடைவருத்தம் தோன்றாவாறு அழைத்து வந்தவர், இறுதியாக, மனைக்கண் உள்ளாள் மனம் மகிழ, அவள் காதுகளில் தம் வருகை அறிவிக்கும் ஒலிவிழுமாறு கனைத்துக் குரல்எழுப்பியவாறே, குதிரைகள் சென்று நிற்கும் அவள் மனைமுன்றிற்கண் கொண்டு நிறுத்துகிறார். நிற்கும் நம் காதுகளிலும் குதிரைகளின் கனைப்பொலி விழவே, நாம் இதுகாறும் கண்டுவந்தது, ஓர் இன்பப் படக்காட்சி என்ற உணர்வை ஊட்டி, நம்மை மகிழ்ச்சி வெள்ளத்தில் ஆழ்த்தி மெய்மறக்கச் செய்து உள்ளார் புலவர்.

# அரசன்

அவன் மேற்கொண்டு வந்தவினை, முடிந்துவிட்டது. பகையரசரை வெற்றி கொண்டாயிற்று. அவர்களும், திறைகொடுத்து, அவன் தலைமையைப் பணிந்து ஏற்றுக்கொண்டுவிட்டனர். கடமை முடிந்த நிலையில், அக்கடமையுணர்வால் அடக்கி வைக்கப்பட்டிருந்த காதல் உணர்வு கொழுந்துவிட்டுப் பெருகியிருக்க வேண்டும். "கிழவி நிலையே வினையிடத்துரையார், வென்றிக் காலத்து விளங்கித் தோன்றும்" என்பது தொல்காப்பியம். மேலும் வினை முடிந்து, வருவதாக வாக்குறுதி அளித்து வந்த, கார்கால வரவை அறிவூட்டும் புது மழையும் பெய்து ஓய்ந்துவிட்டது. அந்நிலையில் அவ்விளையவேந்தன் உள்ளத்தில் துடித்து எழ வேண்டியது, மனையகத்தே விட்டு வந்திருக்கும் மனைவியின் நினைவு. ஆனால் அது நிகழவில்லை. காதலி நினைவு, அவனுக்கு வரவில்லை; காரணம் நயத்தக்க நாகரீக நெறி நிற்பவன் அவன். "சேர்ந்தோர் புன்கண் அஞ்சும் பண்பின் மென்கண் செல்வம் செல்வம் என்பதுவே". "அறிவினான் ஆவது உண்டோ? பிறிதின் நோய் தன்நோய் போல் போற்றாக்கடை?" என்பனபோலும் ஆன்றோர் உரைகளை உள்ளத்தில் ஏற்றிருப்பவன்.

வெற்றி வாய்த்துவிட்டதும் உண்மை. பகைத்து நின்ற பகையரசரெல்லாம் பணிந்து திறைகொடுத்து விட்டதும் உண்மை; வெற்றித் திருமகள் அவனை மணங் கொண்டு விட்டதும் உண்மை. ஆனால், அந் நிலை, எளிதில்கிடைத்துவிடவில்லை. இழப்பு இல்லாமலும் அது கிடைத்துவிடவில்லை. பல உயிர் களைப் பலி கொடுத்த பின்னரே, அது வாய்த்துள்ளது.

தனக்கு வெற்றி தேடித்தர, தனக்குப் பெருமை சேர்க்க, களத்தில் உயிர் ஈந்த களிறுகள், குதிரைகள், அவற்றின் மீதமர்ந்து போரிட்ட வீரர்கள், விழுப்புண் பெற்று வீழ்ந்து துன்புற்றுக் கிடக்கும் அவற்றின் நிலை ஆகிய இவையே, அவன் மனத்திரையில் மாறிமாறிக் காட்சி அளித்துக்கொண்டிருந்தன. அந்நினைவு அலைகளின் முன், காதலி நினைவு, நிழலாடவும் இயலவில்லை. களிறுகளை எண்ணுகிறான், குதிரைகளை எண்ணு கிறான். வீரர்களை எண்ணுகிறான். போரில் அவை ஆற்றிய அரும்பணி; அப்பணியாற்றுங்கால், அவைபெற்ற இழப்பும் இன்னலும், அதற்கு ஈடாகத் தான் செய்ய வேண்டிய நன்றிக்கடன் ஆகிய இந்நினைவுகளிலேயே ஆழ்ந்து ஆழ்ந்து அயற்சி மிகவே, சிற்றே கண்ணுறக்கமும் கொண்டுவிட்டான்.

வெற்றி கிட்டிவிட்டது; இனி இவ்வீரர்களைப் பற்றிக் கவலை இல்லை; விரைந்து வீடடைந்து மனைவியைக் காண்போம்; மகிழ்ச்சியில் ஆழ்வோம் என எண்ணி விடாது, காதலி கண்ணீர் சிந்தியவாறே காத்துக் கிடப்பினும் கவலை இல்லை; வெற்றிக்குத் துணை நின்ற நாற்படையின் நலம் காணலே நம் தலையாய பணியாகட்டும் என எண்ணிச் செயல்படும் அரசனின் சிறப்பு பாராட்டற்குரியது.

தாம் படைக்க விரும்பிய பேரரசனை அத்துணைப் பண்பாளனாகப் படைத்துக் காட்டியுள்ளார் புலவர் நப்பூதனார் :

மண்டமர் நசையொடு கண்படை பெறாஅது
எடுத்தெறி எஃகம் பாய்தலின், புண்கூர்ந்து
பிடிக்கணம் மறந்த வேழம் ; வேழத்துப்
பாம்பு பதைப்பு அன்ன பருஉக்கை துமியத்
தேம்பாய் கண்ணி நல்வலம் திருத்திச்
சோறுவாய்த்து ஒழிந்தோர் உள்ளியும், தோல்துமிபு

வைந்நுனைப் பகழி மூழ்கலின் செவிசாய்த்து
உண்ணாது உயங்கும்மா சிந்தித்தும்,
ஒருகை பள்ளி ஒற்றி ஒருகை
முடியொடு கடகம் சேர்த்தி, நெடிது நினைந்து
பகைவர்ச் சுட்டிய படைகொள் நோன் விரல்
நகைதாழ் கண்ணி நல்வலம் திருத்தி
அரசிருந்து பணிக்கும் முரசுமுழங்கு பாசறை
இன்துயில் வதியுநன்". [67-80]

மேற்கொண்டுவந்த வினை முடிவுற்றதும் தன்னை, எதிர் நோக்கிக் காத்திருக்கும் மனைவியால் விரைந்து செல்லாது, வெற்றிக்குத் துணைநின்ற தன் நாற்படைக்கு நேர்ந்த நலிவு, நெஞ்சை வருத்த, அவற்றைக் கண்டு, அவற்றின் துயர் துணிக்கும் பணியில் பருவம் வந்த பின்னரும் சிறிது காலம் பாசறைக்கண்ணே தங்கிவிடுவது உண்டு என்பது, நெடுநல்வாடையின் பாட்டுடைத் தலைவனாகிய பாண்டியன், பாண்டி மாதேவி தன் தலைநகரத்து அரண்மனைக்கண், தன்னை எதிர்நோக்கிக் காத்திருக்கவும், பாசறைக்கண் பகைவர் யானைப்படையை வெற்றி கொண்ட போரில், புண் பெற்று வீழ்ந்து கிடக்கும் தன் படைவீரர்களைக் காணும் பெருநோக்கில், நள்ளிரவு அதிலும் மழை பெய்துகொண்டிருக்கும் நள்ளிரவு என்றும் பாராமல் ஒருசிலர் துணையோடு, காட்டுப் பாசறைக்கண், வீரர்கள் வீழ்ந்து கிடக்கும் இடந்தோறும் சென்று திரிந்த நிலையை விளக்கும் நெடுநல் வாடைத் தொடர்களாலும் உறுதியாதல் அறிக.

"மின்னவிர்
ஓடையொடு பொலிந்த வினைநவில்யானை,
நீள் திரள் தடக்கை நிலமிசைப் புரளக்
களிறு கடம்படுத்த பெருஞ்செய் ஆடவர்

ஒளிறுவாள் விழுப்புண் காணிய......

.........................................

நள்ளென் யாமத்தும் பள்ளி கொள்ளான்

சிலரொடு திரிதரும் வேந்தன்

பலரொடு முரணிய பாசறை''

—நெடுநல்வாடை : 168-188.

# அரசி

அவள் அரச மாதேவி. அவள் கணவன் ஒரு பேரரசன். பெருநாடு ஆள்வதால் மட்டுமன்று; தன்னோடு பகைத்து நிற்பார் நாடுகளைத், தட்டாது தனதாக்கிக்கொள்ளும் பேராற்றல் உடையவனாயிருந்தும், தன்னோடு நட்பு பூண்டிருப்பார் நாட்டின் மீது, நாட்டம்கொள்ளாக் கொற்றத்தாலும் பெரியவன்; தன் வெற்றிக்குத் துணை நிற்கும் நாற்படையின் நலம் காக்கும் பண்பாலும் பெரியவன். கணவனும் மனைவியும் உணர்வாலும், உயர்பேரொழுக்க நெறிகளாலும் ஒத்த நிலையினராதல் வேண்டும் என்ற ஆன்றோர் மதிப்பீட்டிற்கு ஒப்ப, கணவன்பால் அமைந்திருந்த அப்பண்புநலங்களை அவளும் அப்படியே கொண்டிருந்தாள்.

கணவனைப் பிரிந்து கணப்பொழுதும் வாழ மாட்டாப் பேரன்புடையவள்; கணவனோடிருந்து இன்பம் துய்க்க வேண்டிய இளமைப் பருவத்தள். அங்ஙனமாகவும், கணவன் பகைநாடுகொள்ளப் போகிறேன் விடை தா'' எனக் கூறிய போது ''வினையே ஆடவர்க்கு உயிர்'' என்ற உலகியல் உண்மையை உணர்ந்து, காதலன் அருகில் இன்மையால், தன்னைக் கடுந்துயர் வருத்தும் என்பதை உணர்ந்தும், அவனைப் போக விடுவதே பேரறம் என்ற, உயர்ந்த உள்ளம் உடையவளாகி அவனைப் போகவிட்ட பெருமனைக் கிழத்தி அவள்.

வினை முடித்து வருவதாக, அவன் குறித்துச் சென்ற காலம் வந்ததும், அவன் வாராமை கண்டு ஆற்றொணாத் துயர் உற்றவள், அவளுக்கு உணவும் ர்வும், உயர் பேரொழுக்கமும் ஊட்டி வளர்த்த

செவிலியர் போதும், பெருமுது பெண்டிர், அடுக்கடுக்கான காரணங்களை எடுத்துக்கூறி, ''சென்ற கணவன் விரைவில் வந்து சேர்வன்'' என உறுதி கூறிய போதும், அவர் கூற்றில் சிறுகூறுதானும் செவியுள் புகமாட்டா அளவு, கணவன்பால் சென்றுவிட்ட காதற் கருத்துடையவள் அவள்.

அந்நிலையில், அவள் கண்கள் கலங்கி முத்து முத்தாகக் கண்ணீர் உதிர்க்கலாயின. ஆனால் அந்நிலையை அவள் நீட்டிக்கவிடவில்லை. அதை நீள விடுவது, ஊரும் உறவும் ''இவள் இவ்வாறு வருந்திக் கிடக்கவும், அவன் வந்திலனே'' எனக், கணவனைப் பழிக்க வழிவகுத்துவிடுமே! அவன் புகழ் வளர, வளர்ந்த அவன் புகழைக் காக்க வேண்டியதான, அதுசெய்யாது அவனைப் பழிப்பதற்குத் துணையாகிவிடுவதா என எண்ணினாள். அவ்வளவே, அவள் அகத்தில் மட்டுமல்லாமல் அவள் புறச் செய்கைகளிலும் மாறுதல் நிகழ்ந்துவிட்டது. அகத்துயரை மறைக்க முனைந்தாள். ஆனால் உள்ளத் துயர் காரணத்தால் மெலிந்துவிட்ட அவள் உடல் உறுப்புக்கள், அத்துயரைப் பலரும்காணப் பறைசாற்றுவது கண்டாள். அதனால் அதை மறைக்க எண்ணினாள். மெலிந்த உடல் பண்டே போல் பருத்துவிடுவது எண்ணிய உடனே நடந்துவிடுவதில்லை என்பதை உணர்ந்தாள். அதனால், உடல் மெலிவைக், காண்பவர்க்கெல்லாம் காட்டிக்கொடுக்கும் வகையில், முன்கையளவும் இறங்கி ஓலமிடும் கைவளைகளை, முழங்கை அளவுக்கு ஏற்றிக் கைமெலிந்து வளைகழன்று விடவில்லை பாருங்கள்; அவை இறுகச் செறிக்கப்பட்டுள்ளன எனக் கூறாமல் கூற முனைந்தாள். ஆனால் அவள் செயல் அதுவாயினும், அவள் நினைவெல்லாம், கணவனையே பற்றியதாக, கவலை மிகவே செய்தது. அது, அவள் உடல் நலனைக் கெடுக்க, அவள் உடல் உறுப்புகளில் இறுகச் செறிக்கப்பட்டிருந்த அணிகள் ஒவ்வொன்றாக் கழன்று உகலாயின. அதைக்

கண்டாள். நினைவு, அவனையே சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருக்கும் வரை, தன் அகத்துயரைப் பிறர் அறியாவாறு மறைத்து வைப்பது இயலாது. ஆகவே, நினைவை, வேறு ஒன்றில் மூழ்கடித்திடவேண்டும் எனத் துணிந்தாள். நினைவை வேறு ஒன்றில் போகவிடாது ஈர்த்துத், தன்பாலே வைத்துக் கொள்ளக்கூடிய ஆற்றல் பெற்றது, ஏழிசை ஒன்றே என உணர்ந்தாள். அதனால், தன் நெஞ்சை, இசையில் இரண்டறக் கலக்கத் துணிந்தாள். இசை அறிந்தவள் அவள். குழல் யாழ் போலும் கருவிகள் மட்டுமே இசை எழுப்ப வல்லன, என்பது இசையறியாதார் கூற்று. உண்மையான உயர்ந்த இசை ஞானம் பெற்றவர், இயற்கை எழுப்பும் ஒவ்வொரு ஒலியிலும் இசை கேட்டு இன்புறுவர். அத்தகைய இசை ஞானம் உடையவள் அவள். அதனால், அவள் காதுகள் அவள் மாளிகையில் மலையருவிபோல் ஒரு பால் ஓயாது கொட்டிக் கொண்டிருக்கும் பெருநீர் எழுப்பும் ஒலியில் ஏழிசை எழக்கேட்டு, அந்த இன்பத்தில் தன்னை மறந்து இருக்க முயன்றாள். காதல் துயரையும் மறந்து போகுமளவு இசை வெள்ளத்தில் ஆழ்ந்து போகும் ஏழிசை வல்லபி அவள்.

இசையால் ஈர்ப்புண்டு அவள் உள்ளமும், உடலும், உணர்விழந்து வீழ்ந்து கிடந்தாலும், காதலன் நினைவு அறவே மறைந்து போய்விடவில்லை. அவள் காதல் உணர்வு அத்துணை வலுவுடையது. அவள் மனத்தகத்தே ஒரு மூலையில் அது கனன்று கொண்டேதான் இருந்தது. அதனால் உள்ளம் உருக்கும் இசை மழையில் நனைந்து உணர்விழந்திருக்கும் அந்நிலையில் அவள் காதலன் ஊர்ந்து வந்த தேரைக், காற்றென ஈர்த்துக் கொணர்ந்து அவள் மனைவாயிலில் நிறுத்திய குதிரைகள் எழுப்பிய கனைப்பொலி, அவள் காதுகளுள் கடிதின் நுழைந்து, அவளைக் கனவுலகிலிருந்து நினைவுலகிற்குக் கொண்டு வந்து விட்டது. குதிரையின் கனைப்பொலியில் இசை இன்பம் காண இயலாது என்றாலும், அது அவள்

காதலனைத், தன்பால் கொண்டுவந்துசேர்த்த குதிரைகள் எழுப்பிய ஒலி; ஆகவே அவளைப் பொறுத்த வரையில் அதற்கு ஏழிசையைக் காட்டிலும் ஆற்றல் அதிகமாகிவிட்டது.

காதல் கடமைகளை இரு கண்களே போல் கருதி வழிபடுபவளும், இசை முதலாம் நுண்கலைகளை அறிந்த நாகரிக வாழ்க்கை உடையவளுமாகிய ஒருத்தியை, அரசமாதேவியாகப் படைத்து வழங்கியுள்ளார் புலவர்:

''நன்னர் நன்மொழி கேட்டனம்; அதனால்
நல்ல நல்லோர் வாய்ப்புள்; தெவ்வர்
முனைகவர்ந்து கொண்ட திறையர் வினைமுடித்து
வருதல் தலைவர் வாய்வது; நீநின்
பருவரல் எவ்வம் களை; மாயோய்! எனக்
காட்டவும் காட்டவும் காணாள், கலுழ் சிறந்து
பூப்போல் உண்கண் புலம்பு முத்து உறைப்பக்
.............................................
இன்துயில் வதியுநன் காணாள், துயர் உழந்து
நெஞ்சாற்றுப்படுத்த நிறைதபு புலம்பொடு
நீடு நினைந்து தேற்றியும், ஓடுவளை திருத்தியும்
மையல் கொண்டு மொய்யென உயிர்த்தும்
ஏவுறு மஞ்ஞையின் நடுங்கி இழைநெகிழ்ந்து
பாவை விளக்கில் பரூஉச்சுடர் அழல
இடம் சிறந்து உயரிய எழுநிலைமாடத்து
முடங்குஇறைச் சொரிதரும் மாத்திரள் அருவி
இன்பல் இமிழிசை ஓர்ப்பனள் கிடந்தோள்
அஞ்செவி நிறைய ஆலின..............
வினைவிளங்கு நெடுந்தேர் பூண்டமாவே''.

[17-23; 80-89; 103]

முடியாட்சிக் காவலர்களாம் அரசனையும் அரசமாதேவியையும் படம் பிடித்துக் காட்டிப் பாராட்டிய

புலவர், ஒரு பேரரசுக்குத் துணை நிற்கும் குடிமக்கள் பலரின், நலம் பாராட்டவும் தவறவில்லை.

நீர்நிலைகளின் கரைக்கண், தம் முக்கோல்களை நாட்டி, அதன் மீது அழுக்கு போகத் துவைத்துக் கொண்ட, தம் காவி ஆடைகளை விரித்து உலர்த்திவிட்டு, அதன் அருகேயிருந்து தவம் மேற்கொள்ளும் பார்ப்பனத் துறவிகளைக் "கல்தோய்த்து உடுத்த படிவப் பார்ப்பான் முக்கோல் அசைநிலை" காட்டியுள்ளார்.

மேய்புலத்தில் பசும்புல் மேய்ந்து, வயிறு நிரம்பிய ஆனிரைகளை, மாலை வந்துற்றதும், தத்தம் மனைகளுக்கு விரைந்து கொண்டு சேர்ப்பான் வேண்டி, தம் கைக்கோல்களால் அடித்துத் துரத்திச் செல்லும் கோவலர்களைக் "கொடுங்கோல் கோவலர் பின் நின்று உய்த்தர இன்னே வருகுவ" காட்டியுள்ளார்.

அழகிய சிறந்த வேலைப்பாடும், அழிக்கலாகா உறுதிப்பாடும் உடையதாகிக் களத்தில் அரும்பணி ஆற்றிய நெடிய பெரிய தேரில் வீற்றிருக்கும் தன் அரசனை, அவனைக் காணத் துடிக்கும் கருத்தோடு, மனைக்கண் காத்துக் கிடக்கும், அரசமாதேவிபால் விரைவில் கொண்டு சேர்க்கும் கருத்தோடு, இயல்பாகவே விரைந்து செல்லும் குதிரைகளை விரைந்து ஓட்டிக் கொண்டு சேர்க்கும் தேர்ப்பாகனைத் "துனை பரிதுரக்கும் செலவினர் வினைவிளங்கு நெடுந்தேர் பூண்ட மாவே". காட்டியுள்ளார்.

மண் ஆசைமிக்குப் படைகொண்டு வந்தானை வென்று துரத்தும் விழுமிய நோக்கோடு, அணிந்து கொண்ட தேன்சொட்டும் வஞ்சி மலர்களால் ஆன தலைமாலைக்குப் பெருமைசேர்க்கும் வகையில் போராடி, வேந்தனுக்கு வெற்றியைத் தேடித்தந்து செஞ்சோற்றுக் கடன் கழித்துவிட்டு, அப்போரில் தம் இன்னுயிர் இழந்து, இறவாப் புகழ்பெற்ற வீரர்களைக் "வேழத்துப் பாம்பு பதைப்பன்ன பருஉக்கை துமியத்

தேம்பாய்கண்ணி நல்வலம் திருத்திச் சோறு வாய்த்து ஒழிந்தோர்'' காட்டியுள்ளார்.

விரும்பியுண்ணும் செங்கரும்பு, அதிமதுரத் தழை ஆகியவற்றைத், தன்முன் போரெனப் போட்டிருப்பவும், அவற்றை உண்ணும் கருத்திழந்து நின்றுவிடும் களிறுகளை, அவற்றின் போக்கில் விட்டுவிடாது, உண்டால் ஒழிய அவற்றின் உடல் உரம் மிகாது என்பதால், யானைகள் அறியும் மொழியில் உண்ணப் பணித்தும், அப்போதும் உண்ண மறுக்குமாயின், அங்குசத்துணை கொண்டு உண்ணப்பண்ணி, யானைகளைப் பேணும் அக்கல்வியறிவே போதும் என்பதால் வேறு கல்விமாட்டுக் கருத்துச் செலுத்தாக், கடமை உணர்வு மிக்க யானைப் பாகர்களை ''வயல்விளை இளகுளகு உண்ணாது நுதல் துடைத்து அயில் நுனை மருப்பில் தம்கையிடைக் கொண்டெனக் கவைமுட் கருவியின் வடமொழி பயிற்றிக் கல்லா இளைஞர் கவளம் கைப்ப''. காட்டியுள்ளார்.

நாடெல்லாம் உறங்கும் நள்ளிரவிலும் உறக்கம் கொள்ளாது, வெண்ணிறப் பூக்கள், கொத்துக்கொத்தாக மலர்ந்து கிடக்கும் மோசிமல்லிகைக் கொடி படர்ந்த சிறுதூறு, காற்றில் அசையும் காட்சியை நினைவூட்டும் நிலையில், தலையிலும், மேனியிலும், வெண்ணிறத் தலைப்பாகையும், சட்டையும் முறையே அணிந்து, முதுமையால் சிறிதே தளர்நடையிட்டவாறே, அரசனைச் சூழ்ந்து அவன்நலம் காத்துவரும் மெய்க்காப்பாளரை, ''நெடுநா ஒண்மணி நிழத்திய நடுநாள், அதிரல் பூத்த ஆடுகொடிப்படாஅர், சிதர்வரல் அசைவளிக்கு அசைவந்தாங்குத் துகில் முடித்துப் போர்த்த தாங்கல் ஒங்குநடைப் பெருமூதாளர் ஏமம் சூழ''. காட்டியுள்ளார்.

கடல் சூழ்ந்த உலகை வென்று கைக்கொள்வான் வேண்டிப், படையெடுத்துச் செல்லும் வேந்தன்

படையுடன், காலம் காட்டும் கருவியாம் குறுநீர்க் கன்னலோடு சென்று, இரவு பகல் எப்போதும் ஒவ்வொரு நாழிகையினையும், குறுநீர்க் கன்னல் துணையோடு சிறிதும் பிழையாமல் உணர்ந்து, அரசனுக்கு உணர்த்தி நிற்கும், நாழிகைக் கணக்கரை ''பொழுதளந்து அறியும் பொய்யா மாக்கள், தொழுதுகாண்கையர், தோன்ற வாழ்த்தி, எறிநீர் வையகம் வெலிஇய செல்வோய்! நின் குறிநீர்க்கன்னல் இனைத்து என்று இசைப்ப''. காட்டியுள்ளார்.

குதிரைகளை அடித்துத் துரத்த உதவும் சவுக்கை, இடையில் வளைத்துக் கட்டிக்கொண்டு அதன்மேல், பாலாடை போலும் ஆடையை இறுகக் கட்டி, மேனியில் கவசம் போலும் சட்டை அணிந்து, காண அஞ்சும் காட்சியும், உரம் வாய்ந்த உடல் அமைப்பும் உடைய வராய், அரசன் பாடிக்கொண்டிருக்கும் காட்டுப் பாசறைக்கண், அரசன் உறையும் அறையைப் புலிச்சங்கிலி தொங்கலால், அக அறையும், புற அறையும் உடையுவாகத் தம் கைத்திறம் காட்டிக்கிடக்கும் யவனர்களைக் ''மத்திகை வளைஇய மறிந்து வீங்கு செறியுடை, மெய்ப்பை புக்க வெருவரும் தோற்றத்து வலிபுணர் யாக்கை, வன்கண் யவனர் புலித் தொடர்விட்ட புனைமான் நல்இல், திருமணி விளக்கம் காட்டித் திண்ஞாண் எழினி வாங்கிய ஈரறைப் பள்ளி''. காட்டியுள்ளார்.

அமைச்சர் உள்ளிட்ட ஐம்பெருங் குழுவினருடன், அரசன் இருந்து அரசியல் முடிவுகாணும் அக அறைக்கண், ஆங்கு நிகழ்வனவற்றைப் புறம்சென்று உரைக்க வல்லாரைப் பணியாளராகக்கொள்ளுதல், முறையாகாது என்பதால். வேற்றுமொழி ஒன்றே தெரிந்தவரும், உள்ளத்து உணர்வுகளை உரைக்க விரும்பினும் உரைக்க இயலா ஊமைத் தன்மையாம் உறுப்புக் குறையுடைய வருமாய் ஆங்கு நியமிக்கப்பட்டுப் பணிபுரிந்து கிடக்கும்

மிலேச்சர்களைக்'' உடம்பின் உரைக்கும் உரையா நாவின் படம்புகு மிலேச்சர் உழையர் ஆக'': காட்டியுள்ளார்.

குறித்துச் சென்ற காலம் வரவும், கணவன் வாராமைகண்டு தம் குலச்செல்வி கலங்கித் துயர் உறும்போது, அவன் எப்போது வருவான்? இவள் கவலை எப்போது தீரும்? என்பதை அறிந்துகொள்வான் வேண்டி, ஊர்ப்புறத்தே சென்று, ஆங்குக் கோயில் கொண்டிருக்கும் காவல் தெய்வத்தின் முன்னர் நெல்லும் மலரும் தூவி விரிச்சி வேண்டி நின்று, அப்போது கறவை வராமை கண்டு வருந்தும்கன்றின் துயர்தணிப்பான் வேண்டி, அக்கன்றினுக்குரிய ஆய்மகள் ''உன் தாய் இப்போது வந்து சேர்வள்; வருந்தாதே'' என உரைத்த உரை ஒலிக்க, அது கேட்டு, மகள்பால் அணுகி ''நல்லுரை கிடைத்துவிட்டது; உன் கணவன் பகை முடித்துத் திறைகொண்டு விரைவில் வந்து சேர்வான் வருந்தாதே'' என்பனபோலும் அடுக்கடுக்கான ஆறுதல் உரைகளை உரைத்து, மகள் நலம் காக்கும் பெருமுது பெண்டிர்களை,

''அருங்கடி மூதூர் மருங்கிற் போகி
யாழிசை இன வண்டு ஆர்ப்ப, நெல்லொடு
நாழிகொண்ட நறுவீ முல்லை
அரும்பவிழ் அலரி தூஉய்க் கைதொழுது
பெருமுது பெண்டிர் விரிச்சி நிற்ப.......
இன்னே வருகுவர் தாயர் என்போள்
நன்னர் நன்மொழி கேட்டனம்; அதனால்
நல்ல நல்லோர் வாய்ப்புள்; தெவ்வர்
முனைகவர்ந்து கொண்ட திறையர் வினைமுடித்து
வருதல் தலைவர் வாய்வது; நீநின்
பருவரல் எவ்வம்களை; மாயோய்! எனக்
காட்டவும் காட்டவும்'' காட்டியுள்ளார்

தன் கொல்லைப்புறத்துக் கொட்டிலில் சிறுதாம்பு கொண்டு கட்டப்பட்டிருக்கும் இளங்கன்றுகள், மாலைப் பொழுது ஆகியும் மனை திரும்பாத் தம் தாய்ப் பசுக்களை நினைந்து அம்மா! அம்மா!! என அழைத்து அலறும் குரல் கேட்ட அக்கணமே, கார்காலத்துப் பெருமழை பெய்து ஓய்ந்த மாலைக்காலத்துக் குளிரின் கொடுமையையும் பெயருட்படுத்தாமல், தன் இரு கைகளும் கொண்டு தன்இரு தோள்களையும் இறுகப் பற்றிக்கொண்டே, வீட்டின் புறம்போந்து கொட்டிலை அடைந்து கன்றுகளின் அருகே அமர்ந்து, அவற்றை அன்பொழுகத் தழுவிக் கொடுத்துக்கொண்டே'' ஆயர் கோல் கொண்டு அடித்துத் துரத்த, உம் தாய்மார் இப்போதே வந்துவிடுவர்; வருந்தாதீர்'' என்பன போலும் இன்னுரை வழங்கும் இனிய, இளைய ஆய்மகளையும்,

''சிறுதாம்பு தொடுத்த பசலைக் கன்றின்
உறுதுயர் அலமரல் நோக்கி ஆய்மகள்
ஒடுங்கு சுவல் அசைத்த கையள், கைய
கொடுங்கோல் கோவலர் பின்நின்று உய்த்தர
இன்னே வருகுவர் தாயர் என்போள்
நன்னர் நன்மொழி''. காட்டியுள்ளார்.

முன்கையில் தொடிமின்ன, புறமுதுகில் கூந்தல் துவள வளர்த்த வளமான குடியில் பிறந்தும், பாசறைக்கண் பணிபுரியும் விருப்பம் மிக்குவந்து, பணிபுரிவது காட்டுப் பாசறை என்பதால், தன்மார்பு ஆடைக்குள்ளே, பாதுகாப்பாகக் கூரிய வாள் ஒன்றையும் மறைத்து வைத்துக்கொண்டு, கையில் எண்ணெய்ச் சுரையை ஏந்தியவாறே, பாசறைக்கண், அரசன் இருக்கும் அகவறைக்கண் ஏற்றப்பட்டிருக்கும் பாவைவிளக்குகள், எண்ணெய் இல்லாமையாலோ பெருங்காற்று வீசுவதாலோ அணைந்து போகுந்தோறும் எரிப்பான்

வேண்டி ஓய்வின்றி உலாவந்து கொண்டிருக்கும் பணிப் பெண்டிர்களையும்,

குறுந்தொடி முன்கைக் கூந்தலம் சிறுபுறத்து
இரவு பகல் செய்யும் திண்டி ஒள்வாள்
விரிவுவரிக் கச்சில் பூண்ட மங்கையர்
நெய்உமிழ் சுரையர் நெடுந்திரிக்கொளீஇக்
கையமை விளக்கம் நந்துதொறும் மாட்ட''

படம் பிடித்துக் காட்டியுள்ளார் புலவர்.

# பாடிய புலவன்

இத்துணைச் சிறப்பு அமைய, முல்லைப்பாட்டைப் பாடி அளித்த புலவர். கந்தரத்தனார், செங்கண்ணனார், காரிக்கண்ணனார் போலும் புலவர்கள் வாழ்ந்த காவிரிப்பூம் பட்டினத்தில் வாழ்ந்தவர்; அறுவை வாணிகன் இளவேட்டனார், கூல வாணிகன் சீத்தலைச் சாத்தனார். பண்டவாணிகன் வெண்ணாகனார் போலவே, வணிகர் குலத்தில் வந்தவர். அவர் தந்தை மேற்கொண்டிருந்தது பொன் வாணிகம். காவிரிப்பூம் பட்டினத்தில் நாற்சந்தியில் இடங்கொண்டு, ''மனத்தது மாசுஆக மாண்டாரின் நீராடி மறைந்து ஒழுகுவார்'' போலும், மாபாவிகளைக்கொன்று தின்று அறம்காக்கும் காவல் பூதத்தின் பெயரையே தம்முடைய பெயராகக் கொண்டவர்களில் தலைசிறந்து விளங்கிச் சிறப்பிக்கப் பெற்றவர், என்ற இச்சிறு வரலாற்றுக்குறிப்பைக் ''காவிரிப்பூம் பட்டினத்துப் பொன்வாணிகனார் மகனார் நப்பூதனார்'' என்ற தம் பெயர் மூலம் வெளிப்படுத்துவ தல்லது, தம்மைப் பற்றி விளம்பரப் படுத்திக்கொள்ளா விழுமிய பண்பாளர் நம்புலவர். இனி அவர் பாடிய முல்லைப்பாட்டினுள் நுழைவோமாக.

## உவமை

''பா நலம்'' எனக்கூறிவிட்டு, அப் பாவிற்குப் புலவர் சூட்டிவிட்டிருக்கும் அணிகள் பற்றிக் கூறாது போவது முறையாகாது. ஆகவே அவ்வணிகளில், தலைச்சூட்டு அணியாகத் திகழும் உவமை அணி பற்றி ஒரு சில:

செய்யுள் நடைக்கு அழகு செய்யும் பல்வேறு அணிகளில் உவமை அணி சிறப்புடையது. பொன் வணிகர் மகனார் நப்பூதனார், தாம் இயற்றிய முல்லைப் பாட்டு, நூற்றிமூன்று அடிகளையே கொண்ட சிறிய பாஆகவும், அதில் உவமை அணிகளை மிகப் பெரிய அளவில் ஆண்டுள்ளார். எடுத்துக் காட்டுக்கு ஒருசில.

### கார் முகிலும் கார் வண்ணத் திருமாலும்

ஒலி ஓயாப் பெருங்கடலில் நீர் உண்டு கறுத்து, கொண்டல் கொண்டலாக மேலே எழுந்து, வானளாவ உயர்ந்து நிற்கும் மலை முகடுகளில் படிந்து, கண்ணொளி கெடுக்க மின்னி, காது செவிடுபட இடித்துப் பெருமழை பொழியும் கார் மேகத்திற்கு, மாவலி மூன்று அடி நிலம்தர ஒப்புக்கொண்டு வார்த்த நீர், கைகளினின்றும் வீழ்ந்து கொண்டே இருக்க, ஒலிக்கும் சங்கும், ஒளி வீசும் சக்கரமும் ஏந்தி, வானளாவ உயர்ந்த நெடிய உருவம் கொண்ட கார்வண்ணத் திருமாலின் நெடிய உருவம் உவமை காட்டியிருப்பது அம்மம்ம! அழகு! அழகு!!

''நனந்தலை உலகம் வளைஇ நேமியொடு
வலம்புரி பொறித்த மாதாங்கு தடக்கை
நீர்செல நிமிர்ந்த மாஅல் போலப்,
பாடிமிழ் பனிக்கடல் பருகி வலன்ஏர்பு

கோடுகொண்டு எழுந்த கொடுஞ்செலவு எழிலி
பெரும் பெயல் பொழிந்த''. —1-6.

காவியாடை தாங்கிய முக்கோலும், அம்பறாத்தூணி தாங்கிய வில்லும்.

பாசறைக்கண், வில் வீரர்கள், தம்முடைய விற்படைகளை வரிசைவரிசையாக நாட்டி, அவற்றின் மீதே அம்பறாத் தூணிகளை மாட்டிவைத்திருக்கும் காட்சிக்குப் பார்ப்பனத் தவசிகள், தம் கை முக்கோல்களை நாட்டி, அவற்றின் மீதே அழுக்குப்போகத் துவைத்துக் கொண்டதம் காவியாடைகளை ஈரம் புலரப் போர்த்திவைத்திருக்கும் காட்சியை உவமையாக்கியிருக்கும் நயம், உணர்ந்து மகிழ்தற்கு உரியது.

''கல் தோய்ந்து உடுத்த படிவப் பார்ப்பான்
முக்கோல் அசைநிலை கடுப்ப, நற்போர்
ஓடாவல்வில் தூணி நாற்றி'' —36-38.

புதரும் மூதாளரும்

வெண் துகிலால் ஆன தலைப்பாகையும், மெய்ச் சட்டையும் அணிந்து கொண்ட மெய்காப்பாளர், தம் ஆண்டு முதிர்ச்சியால் தளர் நடையிட்டு உலாவரும் காட்சிக்குத், தூய வெண்ணிற மலர்களையே கொண்ட மோசி மல்லிகைக் கொடி படர்ந்த காட்டுச் சிறுதூறுகள் காற்றில் அசைந்தாடும் காட்சியை, உவமை காட்டி இருப்பது நனிமிகு கவின் சிறப்புடையது.

''அதிரல் பூத்த ஆடுகொடிப் படாஅர்
சிதர்வரல் அசைவளிக்கு அசைவந்தாங்குத்
துகில் முடித்துப் போர்த்த தூங்கல் ஓங்கு நடைப்
பெருமூதாளர் ஏமம் சூழ'' —51-54.

# கார்காலத்து மாலை மழை

ஆவணியும் புரட்டாசியும் கார்காலம் என்ப: கார்காலத்துப் பகலில் காயும் ஞாயிற்றின் கதிர்ச்சூடு மாலையிலும் இரவிலும் பெய்யும் மழைத் தாரைகள், மண்மேடுகளைக் கரைத்து ஓடச் செய்துவிடும். பொன்னை உருக்கிவிடும்என்பதால், அக்காலத்துப் பருவநிலை குறித்து, "பொன் உருகக் காய்ந்து மண் உருகப் பெய்யும்" என்ற பழமொழியும் வழங்குகிறது.

கடல் நீரை வேண்டுமளவு குடித்துவிட்டமையால் கார்மேனித் திருமால் போல் கறுத்த மேகம், உலகையே வளைத்துக் கொள்வதுபோல் வானவீதியில் படர்ந்து, திருமால்கைச் சக்கராயுதம் ஒளிகாலுவதேபோல், கண்ணொளிகெடுக்க மின்னி, அவன் கைச்சங்கு முழங்கினாற்போல் காது செவிடுபட இடித்து, மலை முகடு நோக்கி எழுந்து, அத்திருமால் ஆனிரை காத்து அளித்தாற்போல் உலகத்து உயிர்கள் எல்லாம் வாழப், பெருமழை பெய்யும் காட்சியைக் காணும், முல்லை நிலத்து மக்களின் மனக்கண் முன், அவர்கள் வழிபடும், அந்நிலத்துத் தெய்வமாம் திருமாலின் நெடிய உருவமும், கொடியோரை அழிக்க, சங்கு சக்கரங்களை ஏந்தினும், ஆனிரை ஓம்பும் அருள்வந்த பெரிய கைகளும், மூன்றடிமண் அளிக்க ஒப்புக்கொண்டு, அதை உறுதி செய்ய மாவலி மன்னவன், கையில் நீர்வார்த்த அளவே, உலகைத் தம் ஈரடியால் வளைத்துக் கொள்ள, வானளாவ நிமிர்ந்து எழுந்த நெடிய உருவமும் தோன்றவே தம்மை மறந்து போவர்.

தம்மை மறந்து நிற்கும் முல்லை நிலத்து மக்கள், காயும் ஞாயிற்றின் வெப்பமிகுதியால் உற்ற நீர்வேட்கை தணிய, நீர் பருகி அமர்ந்ததும், உண்ட நீரெல்லாம், உடலெங்கும் வியர்வையாக வெளிப்பட்டுத் துளிப்பது போல், கார்காலத்துக் கதிரவனின் வெப்பம் தாங்க

மாட்டாத மேகங்கள், குளிர்ந்த கடலில் படிந்து வேண்டுமட்டும் நீர் குடித்து மலைமுகடு அடைந்ததும், உண்டநீர், மழைத் தாரைகளாக வெளிப்பட்டுச் சொரிய மண் குளிர்ந்த மாலைப்போதில் அம்மக்களும் மனம் குளிர்ந்து போவர்.

மக்கள் மனம் குளிரத் துணை புரிந்து பெருமை கொள்ளும் மழை, பொருள் தேடியும், புகழ் நாடியும் பிரிந்து சென்ற கணவர் திரும்பிவரும் காலமாகக், குறித்துச் சென்ற கார்கால வரவை நினைவூட்டி, கார்காலம் வந்தும் கணவர் வந்திலரே என்ற மனத் துயரைத் தனித்து இருக்கும் மனைவியர்க்குத் தரும் சிறுசெயலும், பழி தொழிலும் உடையது மழையே; ஆகவே,........நாள்தோறும் வருவது மாலை. அம் மாலையைக் காணும் போதெல்லாம் கணவனைப் பிரிந்த மங்கையர், கலங்கிக் கண்ணீர் சொரிவது இல்லை. கணவர் குறித்துச் சென்ற கார்ப் பருவத்து மாலையைக் கண்ணுற்ற வழியே அவர்களுக்குக், கலக்கம் மிகும்: ஆகவே அக்கலக்கத்திற்குக் காரணம் ஆவது கார்காலம் குறிக்க வரும் மழையே அல்லது மாலை அன்று, அவ்வாறாகவும் சிறுமை புன்மை ஆகிய இரு பழிகளைச் சுமத்தி, மாலையைச் ''சிறுபுன்மாலை'' எனப்பழித்த புலவர், கார்ப்பருவ வரவை அறிவித்துக் காதலியர்க்குக் கலக்கம் தருவிக்கும் மழையைப்பழிக்காது விட்டது, அது வரவால் தத்தம் காதலரைப் பிரிந் திருக்கும் ஒரு சில காதலியர் வருந்துவர் என்றாலும் அவர் ஒழிந்த உலகத்து அனைத்துயிரையும், அது இன்ப மாரியுள் நனைத்துவிடும் பெருமையுடைமையால் போலும்.

''நனம் தலை உலகம் வளைஇ, நேமியொடு
வலம்புரி பொறித்த மா தாங்கு தடக்கை,
நீர்செல நிமிர்ந்த மாஅல் போலப்
பாடிமிழ் பனிக்கடல் பருகி வலன்ஏர்பு

கோடுகொண்டு எழுந்த கொடுஞ்செலல் எழிலி,
பெரும் பெயல் பொழிந்த சிறுபுன்மாலை'' (1-6)

நனந்தலை உலகம் - அகன்ற நிலப் பரப்பை உடைய உலகத்தை. வளைஇ - வளைத்துக் கொண்டு, நேமியோடு வலம்புரி பொறித்த - சக்கரத்தோடு வலம்புரிச் சங்கையும் ஏந்திய. மாதாங்கு தடக்கை - ஆனிரை காக்கும் பெருமை மிக்க கைகளில். நீர்செல - மாவலி வார்த்த நீர் வழிய. நிமிர்ந்த - வானளாவ உயர்ந்த. மா அல் போல-திருமாலைப் போல. பாடிமிழ் பனிக்கடல் பருகி-ஓயாது ஒலி எழும், குளிர்ந்த கடலில் நீர் குடித்து. வலன் ஏர்பு—வலமாக எழுந்து. கோடுகொண்டு எழுந்த: மலை உச்சியைக் குறியாகக் கொண்டு எழுந்த. கொடுஞ் செலவு எழிலி-விரைந்து செல்லும் மேகம். பெரும்பெயல் பொழிந்த-பெரிய மழையைப் பெய்த. சிறுபுன்மாலை - சிறுமையும், தனித்து இருந்தோரை வருத்தும் புன்மையும் வாய்ந்த மாலைக் காலத்தில்,

''நேமியோடு வலம்புரி பொறித்த மாதாங்கு தடக்கை'' என்ற தொடரை, நேமியொடு வலம்புரி தாங்கு தடக்கை எனக் கொண்டுகூட்டி, ''சக்கரத் தோடே வலம்புரியைத் தாங்கும் பெரிய கைகள்'' என்றும், ''மாபொறித்த'' என்ற தொடரை அடுத்த வரியில் வரும் ''மாஅல்'' என்பதற்கு முன்னே நிறுத்தி, ''திருமார்பிடத்தே, திருமகளை வைத்த மால்'' என்றும் பொருள் கூறியுள்ளார் நச்சினார்க்கினியர்.

அத்தொடரைக் கிடந்தாங்கே கொண்டு, ''சக்கர ரேகையும், வலம்புரிச் சங்கு ரேகையும் பொறிக்கப் பெற்ற கைகள்; திருமகளை அணைத்த கைகள்'' என்று பொருள் கொண்டுள்ளார் பிறிதோர் உரையாசிரியர்.

திருமாலின் கைகளில் சங்கு சக்கர ரேகைகள் உள்ளன எனக் கூறும் மரபும், அவைபாடும் பாக்களும் உளவேனும், திருமாலின் நெடிதுருவம், பெரும்பெயல்

பெய்யும் கார்முகிலுக்கு உவமையாகக் கொள்ளப் பட்டு இருக்கும் சூழ்நிலையில், இடிக்கும், மின்னலுக்கும் ஏற்ப, முழங்கும் சங்கு, ஒளி வீசும் சக்கரம் ஏந்திய கைகளைக் கொள்வதே பொருந்துமாதலின், சங்கு, சக்கர ரேகைகள் பொறித்த கைகள் எனக் கொள்வது ஈண்டு பொருந்தும் பொருளாகாது. இக் கருத்தை

''ஆழி மழைக்கண்ணா! ஒன்றும் நீ கைகரவேல்
ஆழியுற் புக்கு முகந்துகொடு ஆர்த்துஏறி
ஊழிமுதல்வன் உருவம்போல் மெய்கறுத்துப்
பாழியம் தோளுடைப் பத்பநாபன் கையில்
ஆழிபோல் மின்னி வலம்புரிபோல் நின்று அதிர்ந்து
தாழாதே சார்ங்கம் உதைத்த சரமழை''

என்ற ஆண்டாள் திருப்பாவையில் வரும், ''பத்மநாபன் கையில் ஆழிபோல் மின்னி, வலம்புரிபோல் நின்று அதிர்ந்து'' என்ற வரிகள் உறுதி செய்வது காண்க.

அதேபோல், உயிர் ஓம்பும் மழைத் தொழிலுக்கு உவமையாக, ஆனிரை ஓம்பும் திருமால் செயல் கூறுவதே பொருந்தும் ஆதலாலும், திருமால், திருமகளை மார்பில் கொண்டிருப்பதாகக் கூறுவதுதான் மரபே ஒழிய, கைகளில் தாங்கிக் கொண்டிருப்பதாகக் கூறுவது மரபு அன்று ஆதலாலும், நீர் உண்டு நிமிர்ந்த கார் முகிலுக்குத், திருமகள்தழுவாத் திருமாலின் கார் வண்ணத் தனித் திருமேனிதான் பொருந்தும் உவமை ஆகும் ஆதலாலும், திருமகளை மார்பில் வைத்த திருமால் என்றோ, திருமகளைத் தாங்கிய கைகளை உடைய திருமால் என்றோ கொள்வதும் பொருந்தும் பொருளாகாது.

## நற்சொல் கேட்கும் மகளிர்

அத்தகைய முல்லை நிலத்துப் பேரூர் ஒன்று; காவற் காடும், அகழியும் மதிலும் வளைத்து அரண் செய்யப்

பெற்றது. பல்லாண்டுகளுக்கு முன்பே உருவான பழமைச் சிறப்பு வாய்ந்தது. அப்பேரூரின் புறநகர்ப் பகுதியில், அம் மாலைக் காலத்தில், ஆண்டாலும், அன்பு, அருள், அறம் அறிவுடைமையாலும் பெரியவர்களான மகளிர் சிலர், இனி நடக்க இருப்பதை அறியும் வேட்கை மிக்கவராய், நாழியில் கொண்டுவந்த நெல்லையும், மலர்ப்பிடாவில் கொண்டுவந்த, வண்டுகள் வந்து மொய்க்க அரும்பவிழ்ந்து மலர்ந்து மணம் நாறும் புத்தம்புது மலர்களையும், வழிபடு தெய்வங்களுக்குத் தூவி, அத்தெய்வ அருள்வாக்கை எதிர்நோக்கி இருந்தனர்.

''அருங்கடி மூதூர் மருங்கில் போகி
யாழிசை இனவண்டு ஆர்ப்ப, நெல்லொடு,
நாழிகொண்ட நறுவீ முல்லை
அரும்பவிழ் அலரி தூஉய்க், கைதொழுது
பெருமுது பெண்டிர் விரிச்சி நிற்ப''

(7–11)

(அருங்கடி மூதூர் மருங்கில் போகி–அரிய காவலை உடைய பழைய பேரூரின் புறநகர்க்குச் சென்று; நாழி கொண்ட நெல்லொடு - நாழியில் கொண்டு சென்ற நெல்லுடன்; யாழிசை இன வண்டு - யாழ் இசைபோல் இனிமையாக ரீங்காரம் செய்யும் நல்ல இனத்தைச் சேர்ந்த வண்டுகள். ஆர்ப்ப - மொய்த்து ஒலிக்கும்படி; அரும்பு அவிழ் - அரும்புகள் மலரும்; நறுவீ - முல்லை அவரி; தூஉய் - நறுமணம் நாறும் மலராகிய முல்லை மலர்களைத் தூவி; கைதொழுது-கை கூப்பி வணங்கி; பெருமுது பெண்டிர்-பெருமைக்கு உரிய மூத்த மகளிர்; விரிச்சி நிற்ப-நற்சொல் கேட்டு நிற்க,

விரிச்சி எனப்படும் நற்சொல் கேட்கும் வழக்கம் படை வீரர்க்கே உரியது எனப் பிறழ உணர்ந்து கொண்ட காரணத்தால், நச்சினார்க்கினியர், 18-ஆம்

அடிக்கண் வரும் "நல்லோர்" என்னும் சொல்லை, 7 ஆம் அடிக்கண் வரும் "போகி" என்னும் சொல்லின் முன் இணைத்துப், "படைத்தலைவர் ஏவலால் நற்சொல் கோடற்குரியார் போய்" எனப் பொருந்தாப்பொருள் கூறியுள்ளார்.

இறை வழிபடுவார், நெல்லும் மலரும் தூவி வழிபடுவது வழக்கம் என்பதை, "நெல்லும் மலரும் தூஉய்த் தொழுது" (நெடுநல்வாடை : 43) "முல்லை நிகர்மலர் நெல்லொடு தூஉய் (சிலம்பு : 9. 1-2) "நெல் நீர் எறிந்து விரிச்சி ஓர்க்கும்" (புறநானூறு : 280 : 6-7) என்ற தொடர்களும் உறுதி செய்வது காண்க.

பேரூர்மகளிர் ஊர்ப்புறத்தே உள்ள தெய்வங்களைச் சென்றுவழிபடும் வழக்காறு உடையவர் என்பதை, மாதரி மூதூர்ப்புறத்தே கோயில் கொண்டிருக்கும் பூங்கண் இயக்கியைப் பால்மடை கொடுத்து வழிபட்ட நிகழ்ச்சியைக்கூறும், "புறஞ்சிறை மூதூர்ப் பூங்கண் இயக்கிக்குப் பால்மடை கொடுத்துப் பண்பிற் பெயர் வோள் ஆயர் முதுமகள் மாதரி" என்ற சிலப்பதிகாரத் தொடரும் [சிலம்பு : 15 : 16-18] உறுதி செய்வது காண்க.

## பெருமுது பெண்டிர் கேட்ட நற்சொல்

அம்மகளிர் விரிச்சிக் கேட்டு நின்ற இடத்திற்கு அணித்தாக ஓர் இடையர் வீடு. மகளிர் மலர்தூவி நின்றபோது, இளங்கன்று ஒன்றின் "அம்மா! அம்மா!" என்ற, துயர் கலந்தஒலி ஓயாது ஒலிக்கக் கேட்டு, வீட்டுக்கு உரியவள் வெளியே வந்தாள். மாலையில் பெய்த மழை விளைவித்த குளிரின் கொடுமை தாங்காது, இரு தோள்களையும் இரு கைகளாலும் மாற்றி அணைத்துக் கொண்டிருந்தாள். வந்தவள், குரல் எழுப்பித் தாயை அழைக்கும் கன்று கட்டியிருந்த

குடிலை அடைந்தாள். அது இளங் கன்று. சிறிய கயிறு கொண்டு கட்டப்பட்டுள்ளது: தாயைப் பிரிந்து தனித்து விடப்பட்ட துயரம்; மாலை ஆகியும் தாய் முகம் காணாத துயரம்; பகலெல்லாம் பால் உண்ணாமையால் உண்டான பசித் துயரம், ஆக அடுக்கடுக்கான துயர் மிகுதியால் துடித்துக்கொண்டிருந்தது அக்கன்று.

தாயைப் பிரிந்து தனித்து விடப்படுவது, தனக்குத் துயர் தரும் என்றாலும், தாய் பிரிந்து சென்றது, தனக்கு நிறைய பால் தருவான் வேண்டி, காட்டில் செழித்து வளர்ந்திருக்கும் பசும்புல்லை வயிறார மேய்வதற்காகவே என்பதை உணர்ந்து, பிரிவுத் துயரத்தைத் தாங்கியிருந்த கன்று, தாய் வந்து சேர வேண்டிய காலம் கடந்து விட்டமையால் கலக்கம் உறுவ தாயிற்று. கன்றின்மீது பேரன்புடையது பசு; கன்றை விட்டுத் தன்னைப் பிரிப்பதைத் தாங்கிக் கொள்ளாதது. தாய்ப் பசுவின் இவ்வியல்புகளைக் "கன்று பிரிகாரா" என்ற தொடரால் புகழ்வர் புலவர். அத்துணைப் பேரன்புடைய தாய்ப்பசு, புல் உண்ணும் தொழில் முடிந்ததுமே விரைந்தோடி வந்திருக்கும்; வரவில்லை என்றால்? அதை வரவொட்டாவாறு யாதேனும் தடுத்திருக்குமோ! அதனால் அதற்கு யாதேனும் இடர் வந்திருக்குமோ என்ற எண்ணங்கள் எழவே, கன்று கவலத் தொடங்கிவிட்டது. காரணம் அறியாக் கொடுந் துயர் காரணமாக, அது அலமரத் தொடங்கி விட்டது. கன்றின் துயர் கண்டு கண்கலங்கி நின்ற அவள், கன்றை விடுத்துக் கறவையை ஓட்டிச் சென்ற கோவலர், காலம் கடத்தாது, தாய்ப் பசுவைக் கன்றிடம் கொண்டு சேர்க்கவேண்டுமே என்ற எண்ணம் இலராய்க் காலம் கடத்திக், கன்றுக்குக் கொடுமை செய்வதுணர்ந்து, அவர் மீது சினம் மிகக் கொண்டாள். கோபம் கொண்டாள் எனினும், கோவலர் தம் கணவர் என்பதால் அதைக் கோவலர் மீது காட்ட மனங்கொள்ளாது, கறவைகளை ஓட்டிச் செல்ல உதவும் கோவலர்

கைக்கோல் மீது காட்டினாள். ''கொடுங்கோல்'' என அதைப் பழித்தாள். காலம் கடத்தி விட்டனர் எனச் சினங்கொண்டாள் எனினும், ஆனிரைகளுக்குப் புல்லும் புனலும் காட்டிப் பேணும் அவர்களின் அன்புள்ளத்தை அறிந்திருந்ததனால், அவர்கள், இக்கன்றின் நிலை உணர்ந்து கறவைகளை விரைந்து கொண்டு வந்து சேர்ப்பர் என உறுதியாக நம்பினாள். அதனால், நடுங்கும் கன்றின் அருகில் அமர்ந்து, அதை அன்பொழுகத் தழுவி, ''உன் நினைவால் இயல்பாகவே விரைந்து ஓடிவரும் உன் தாயைப், பின் தொடர்ந்து வரும் ஆயர், மேலும் விரைந்து துரத்துவர். ஆகவே உன் தாயும், ஆயரும், இப்போதே, இந்நாழிகையே வந்து சேர்வர், வருந்தாதே'' என வாய்விட்டுக் கூறினாள்.

''சிறுதாம்பு தொடுத்த பசலைக் கன்றின் உறுதுயர் அலமரல்
நோக்கி, ஆய்மகள் நடுங்கு சுவல் அசைத்த கையள், கைய
கொடுங்கோல் கோவலர் பின்நின்று உய்த்தர இன்னே
வருகுவர் தாயர் என்போள்'' (12—16)

(சிறுதாம்பு தொடுத்த-சிறிய கயிற்றினால் கட்டப்பட்ட; பசலைக் கன்றின் - இளங்கன்றின். உறுதுயர் அலமரல் நோக்கி-மிக்க துயரினால் நிலையின்றித் தவிப்பதைப் பார்த்து. ஆய்மகள்-இடைச்சாதி மகள்; நடுங்கு சுவல்-குளிரால் நடுங்கும் தோளை; அசைத்த கையள் - கட்டிக் கொண்ட கைகளை உடையவளாய் நின்று; கைய கொடுங்கோல் கோவலர் - கையில் பிடித்த கொடிய கோலையுடைய ஆயர்; பின் நின்று உய்த்தர - பின்னால் இருந்து துரத்திவர; தாயர் - உன்னுடைய தாய்ப் பசுக்கள்; இன்னே வருகுவர் - இப்போதே வந்து சேர்வர்; என்போள் - என்று கூறினவளுடைய)

தாயைப் பிரித்துத் தனித்து விடப்படுவது, தனக்குத் துயர் தரும் என்றாலும், தாய் பிரிந்து சென்றது, தனக்கு நிரம்பப் பால் தருவான் வேண்டி, காட்டில் செழித்து வளர்ந்திருக்கும் பசும்புல்லை வயிறார மேய்வதற்காகவே என்பதை உணர்ந்து, பிரிவுத் துயரை ஒருவாறு தாங்கி இருந்த கன்று, தாய் வந்து சேர வேண்டிய காலம் கடந்துவிடக் கண்டே கலங்கிய நிகழ்ச்சி, தன்னைத் தனியே இருக்கவிடுந்துத் தலைமகன் பிரிவது, தனக்குத் துயர்தரும் என்றாலும், தலைவன் பிரிந்துபோவது, தன் இல்லறம் இனிது நடைபெறுவதற்குத் துணை நிற்கும் பெரும்பொருள் ஈட்டி வரவே என்பதை உணர்ந்து, பிரிவுத்துயரை ஒருவாறு தாங்கி இருந்த தலைவி, தலைவன் வருவதாகக் குறித்துச் சென்ற கார்காலம் வரவும் வராமை கண்டே வருந்தினாள் என்ற, தலைவி செயலைக் குறிப்பால் உணர்த்துவது காண்க.

"கொடுங்கோல் கோவலர்" (நெடுநல் வாடை : 3) "கொடுங்கோல் கல்லாக் கோவலர்" (அகநானூறு 7 ) என்ற தொடர்களிலும், கோவலரின் கைக்கோலின் கொடுமை கூறப்பட்டிருப்பது காண்க :

## பெருமுது பெண்டிர் ஆறுதல் உரையும் அவள் நிலையும்

வருவதாகக் குறித்துச் சென்ற கார்காலம் வந்து விட்டது ஆனால் அவர் ஊர்ந்து சென்ற தேர் வந்திலது என்ற கவலை மிகுதியால் வருந்துவாள் துயர் தீர்க்க, அவர் எப்பொழுது வருவார் என்பதை அறிவான் வேண்டி, வழிபாடு ஆற்றிய நிலையில், ஆயர் மகள் கன்றை நோக்கி, "உம் துயர் தீர உம் தாயர் இன்றே வருவர்" எனக் கூறிய சொல் நற்சொல்லாய் அமைய அது கேட்ட பெருமுது பெண்டிர், தலைவிபால் விரைந்து சென்று, "உன் துயரைப் போக்குவது மட்டுமல்லாமல், உனக்கு இன்பம் தரவல்ல நனிமிக் நல்ல சொல்லைக் கேட்டு வந்தோம். அந்நற்சொற்கள் யார் வாயிலிருந்து

வெளிப்பட்டனவோ அவர்கள், ஐயறிவுடைய உயிர்கள் மாட்டும் அன்பு காட்டும் பேருள்ளம் வாய்க்கப்பெற்ற நல்லவர். "கோவலர் வாழ்க்கை கொடும்பாடு இல்லை" என்ற புகழுக்குரிய நல்லினத்து ஆயர் மகளிர். ஆகவே, அவர் வாய்ச்சொல், நற்பயன் அளிக்காது போகாது. போர்க்களத்தில் எதிர் நின்று போரிட இயலாது, பகைவர் தோற்றோடிவிட, அவர்க்குரிய மண்ணைத், தலைவர் தமதாக்கிக் கொள்ள, அதுகண்ட அப்பகைவர், தலைவரைப் பகைத்து நிற்பது விடுத்துப் பணிந்து வந்து திறையாகப் பொன்னும் மணியும் கொடுத்து நிற்க, அவ்வாசையால், பெரும் பொருள் ஈட்ட வந்த தம் கடமை குறைவற முடிவுறவே, தலைவர் இப்போதே விரைந்து வந்து சேர்தல் உறுதி. ஆகவே, மாயோய்! அவர் வாராமை கண்டு பலப்பல எண்ணிக் கலங்கும் உன் மனத்துயரைக் கைவிடுவாயாக" எனக் கூறித் தேற்றுவாராயினர்.

பெருமுது பெண்டிர், தலைவன் விரைந்து வந்து சேர்வான் என்பதை உறுதி செய்யவல்ல, இதுபோலும் காரணங்களை அடுக்கடுக்காக எடுத்துக் காட்டினார். பிரிவறியாப் பேரன்பினளாய தன்னைத், தனித்து விடுத்துக் கணவர் பிரிந்து போவது, தான் புகழ்மிக்க இல்லறம் இனிது நடத்துதற்குத் துணை புரியவல்ல பெரும்பொருள் ஈட்டி வருதற்கே என்பதை அறிவாள். ஆதலின் அவர் பிரிவை அவளும் ஒருவாறு தாங்கிக் கொண்டுதான் இருந்தாள். ஆனால், வருவதாகக் குறித்துச் சென்ற காலம் கடந்து விட்டது. கருதிச் சென்ற பொருளை ஈட்டுவதற்குத் தேவைப்படும் காலத்திற்கும் மேலாக நீண்டுவிட்டது. கடமை முடிந்து ஒரு கணமும் தாமதியாப் பேரன்புடையவர். கடமையைக் குறித்த காலத்தில் முடிக்கவல்ல திண்ணியர்; கூறிய சொல்வழி நிற்கும் பெரிய வாய்மையாளர். அதனால் குறித்த காலத்தில் அவர் வந்து சேர்ந்திருக்க வேண்டும்; வந்து சேரவில்லையென்றால், அவரை வரவிடாது

யாதோ ஒன்று தடுத்திருக்க வேண்டும்: அது யாதோ? அல்லது அவருக்கு யாதேனும் தீங்கு நேர்ந்திருக்குமோ? என்பன போலும் எண்ண அலைகளே ஓங்கியிருந்தமையால், அவள் உள்ளமும், உணர்வும் அப் பெருமுது பெண்டிர் காட்டிய காரணங்களைக் காணமாட்டா வாயின. அவள் உள்ளத்தில் கலக்கமே மேலோங்கி இருந்தது. அவள் உள்ளக் கலக்கம், அவளுடைய குவளை மலர் நிகர் கண்கள், முத்து முத்தாகச் சிந்தும் நீர்த்துளிகள் வடிவில் வெளிப்படலாயின. இஃது இவள் நிலை. அவன் நிலையைக் காண்போம்:

''என்போள்
நன்னர் நன்மொழி கேட்டனம்; அதனால்
நல்ல நல்லோர் வாய்ப்புள்; தெவ்வர்
முனைகவர்ந்து கொண்ட திறையர், வினைமுடித்து
வருதல் தலைவர் வாய்வது: நீ நின்
பருவரல் எவ்வம் களை; மாயோய்! எனக்
காட்டவும் காட்டவும் காணாள், கலுழ்சிறந்து
பூப்போல் உண்கண் புலம்பு முத்து உறைப்ப''

(17 - 23)

(என்போள் - என்று கூறின ஆயர் மகளுடைய; நன்னர் நன்மொழி - மிக நல்ல சொற்களைக்; கேட்டனம் - கேட்டு வந்தோம்; அதனால் - அதனால். நல்லோர் வாய்ப்புள் நல்ல அந்நல்லோர் கூறிய விரிச்சியாகிய நற்சொல் நல்லனவே ஆதல் அறிகுவை; தெவ்வர் முனைகவர்ந்து- பகைவர்க்குரிய மண்ணை வெற்றி கொண்டு; கொண்ட திறையர் - அவர்கள் பணிந்து கொடுக்கப் பெற்றுக் கொண்ட திறைப் பொருள்களை உடையராய். தலைவர் வருதல் வாய்வது - தலைவர் வருவது உறுதி; மாயோய் - மாயோய்! நீ நின் பருவரல் எவ்வம் - நீ, உன்னுடைய உளத்தடுமாற்றம் காரணமாக எழும் மனத் துயரை; களை என - கைவிடுவாயாக என்று; காட்டவும்

காட்டவும் - பல காரணங்களைப் பலகாலும் எடுத்துக் காட்டவும்; காணாள் - காணமாட்டாளாய்; கலுழ் சிறந்து-கலக்கம் மிகுந்து; பூப்போல் உண்கண் - பூப் போலும் மையுண்ட கண்கள்; புலம்பு முத்து உறைப்ப - துளிதுளியான நீரை முத்து முத்தாகச் சிந்த.

''இன்னே வருகுவர் தாயர்'' என்பது போல் கேட்கும் சொல் நற்சொல் ஆதல் மட்டும் போதாது: அச்சொல்லைக் கூறுவாரும் நல்லவராதல்வேண்டும். ''திரைகவுள், வெள்வாய்த் திருந்து வீழ்நாடி. நரை முதியோர் நின்று உரைத்த நற்சொல்'' என்ற புறத் திரட்டுப்பாட்டில் (756) நற்சொல் உரைத்த நரை முதியோர் நலமெல்லாம் பாராட்டப் பெற்றிருத்தல் காண்க.

## பாசறை அமைப்பு

''கார்ப் பருவத் தொடக்கத்தே வந்து சேர்வன்'' எனப் பிரிந்து போகும் காலத்தில் கூறிச்செல்லும் உரை தப்பாவாறு வந்து சேரும் இயல்புடையவன் தலைவன். இப்போது கார்ப்பருவ வரவுகண்டு இவள் இவ்வாறு வருந்த விடுத்து வராதிருப்பது ஏனோ? இவள் ஈண்டு வருந்திக் கிடக்க வராதிருக்கும் அவன் நிலையாதோ? என்ற வினாக்கள் இயல்பாக எழும் என்பதை அறிந்த புலவர், தலைவனின் ஆண்டைய நிலையை எடுத்துக் கூறத்தொடங்கினார்.

தன்னேரில்லாப் பெருவீரன் தலைவன். தன்னினும் இளைத்தார் மீது போர் தொடுப்பது அவன் தகுதிக்கு ஏற்புடையதன்று. ''மாறன்மையின் மறம் வாடும் என்று இளையாரையும் ஏறியான்'' என்பர் திருத்தக்க தேவர் (சீவக சிந்தாமணி: 2261). ஆகவே எளியார் மீது போர்தொடுப்பதிலன்: பணியமறுத்து, அவனையும் பகைத்து நிற்கவல்ல பேராண்மையாளர் மீதே அவன் போர் தொடுத்து எழுவான். ஆகவே பகைநாட்டு

மண்ணைக் கைக்கொண்டு பகையாளரைப் பணிய வைத்து, அவர்பால் திறையாகப் பொன்னும் நவமணியும் போலும் பெரும் பொருள் கொண்டு மீள்வது, அத்துணை எளிதில், அத்துணை விரைவில் முடியக் கூடியது அன்று.

அக்கருத்தோடு போர் தொடுத்துச் செல்லுவார், நேரே பகை நாட்டினுள் நுழைந்து விடுதல் இயலாது. பகைநாட்டார் தம்நாடுகளைச் சூழக், காவற் காடுகளை வளர்த்து, அக்காடுகளின் இடையிடையே, பகைப்படை எளிதில் நுழைந்து விடாவாறு அப்படையைத் தடுத்து நிறுத்துவதற்கேற்ற, குறுகிய வாயில்களைக் கொண்ட சிற்றரண்களை, நெடுக அமைத்து, ஆவ்வரணகத்தே அக்காட்டுவாழ் மக்களாம் வேட்டுவர்களையே கொண்ட சிறுபடைகளை நிறுவி வைத்திருப்பர்.

பகைநாட்டு மண்ணில் அடியெடுத்து வைப்பதற்கு முன்னர், அதற்கேற்ற காலம் இடங்களை அறிந்து கொள்வது வேண்டுமாதலின், அப்பகை நாட்டின் புறத்தே, சிலநாள் தங்கவேண்டி நேரும். மேலும், பகை நாட்டைக் கைக்கொள்ளும் முயற்சி, ஒரே நாளில் வெற்றி பெற்றுவிடும் என்றும் சொல்ல இயலாது. பல நாள் போரிட வேண்டி நேரிடவும் செய்யும். அதனால், அந்நாட்களில் தன் நாற்படை இருத்தற்கு ஏற்ற ஓர் இடத்தை அமைத்துக்கொள்வது இன்றியமையாததாகி விடும். ஆகவே, பகை நாடுநோக்கிச் செல்லும் அரசர், அப்பகைநாட்டு எல்லையில் உள்ள, காவற் காட்டில் ஒருபாசறை அமைத்துக் கொள்ள முனைவர்.

நாற்படை இருத்தற்கேற்ற பரந்து அகன்ற இடம் கிடைப்பது அரிது. அதனால், காட்டாறுகள் நிறைந்த அக்காவற்காட்டில் வளர்ந்து மண்டிக் கிடக்கும் செடி கொடிகளால் ஆன சிறுதூறுகளை வெட்டி எறிந்தும், கொளுத்தி எரித்தும் அகற்றிப், பாசறை அமைத்தற்

கேற்ற பரந்த இடம் காண முயல்வர். அது நிகழும் போது, அந்நாட்டிற்குக் காவலாய் அக்குறுங்காட்டில் நிறுத்தி வைக்கப் பட்டிருக்கும் வேட்டுவப் படை வாளா இராது. வந்தோர் முயற்சியை முறியடிக்க முன்னேறி வந்து போரிடத் தொடங்கும். ஆகவே, பாசறை அமைப்பதற்கு முன்னர் அவ்வேட்டுவப படைகளையும் அப்படைகளின் இருக்கையாம் சிற்றரண்களையும் அழிக்க வேண்டிவரும்.

தூறுகளை அகற்றிக்கொண்ட, கடல்போல் பரந்த இடங்களைச் சுற்றிலும், கோட்டையைச் சுற்றி அமையும் நெடுமதில்போல், முள் மரங்களின் பெரிய பெரிய கிளைகளை வெட்டி நெருங்க நட்டுவைப்பர். அது முடிந்த பின்னர், படைவீரர் தங்குவதற்கேற்ற இருக்கைகள் அமைத்துக்கொள்வர். வரிசை வரிசை யாகவும், நான்கு தெருவுகள் ஓரிடத்தே சந்திக்கும் நாற்சந்திகள் அமையுமாறும் தெருவுகளை அமைத்து, அவற்றின் இருமருங்கிலும் காட்டு இலைகள் வேயப் பெற்ற குடில்களை அமைத்துக் கொள்வர்.

அவ்வாறு அமைந்த நாற்சந்திகள் தோறும், அக்குடில்களில் பாடிகொண்டிருக்கும் படைவீரர் களுக்குப் பகைவராலும், பிற காட்டுக் கொடு விலங்கு களாலும் ஊறு நேராமை கருதி, காவலாக, யானைகளை நிறுத்தி வைப்பர். அவ்வாறு நிறுத்தும்போது, யானை களுக்குச் சிறந்த இலக்கணமாகக் கூறப்படும், மதநீர் வடியும் கதுப்பும், நுண்ணிய பார்வைவல்ல சிறிய கண்களும், நீண்ட தந்தங்களும் உடைய களிறுகளையே தேர்ந்தெடுத்து நிறுத்திவைப்பர். அவ்வாறு நிறுத்தி வைத்திருக்கும் களிறுகளுக்கு அவை விரும்பி உண்ணும், செழித்து நீண்டு வளர்ந்த கரும்பு, வயல்களில் நெற்பயிர் களுக்கிடையே விளைந்து கதிர் ஈனாது நிற்கும் சாவி, இனிய அதிமதுரத் தழை ஆகியவற்றை, அக்களிறுகளின் முன்னே, பெரும் போரெனப் போட்டு வைப்பர். ஆனால்,

அக்களிறுகள், காவல் மீதே கருத்துக் கொண்டு விடுவதால், தம் துதிக்கையால் வாரி எடுக்கும் அவற்றை வாயுள் இட்டு உண்பதற்குப் பதிலாக, அவற்றால் தம் நெற்றியில் வடியும் மதநீரைமொய்க்கும் வண்டுகளை ஓட்டுவான்வேண்டி, அந்நுதலைத் துடைத்துவிட்டு, அப்படியே தம் துதிக்கையைத், தம் நீண்ட கோடுகள் மீது மடித்துப் போட்டுக் கொண்டு செம்மாந்து நிற்கும்.

களிறுகளின் செயல் அதுவாக அவற்றைப் பேணி, காக்கும் தொழில் மேல் சென்ற கருத்துடைமையால், அத்தொழில் அல்லது வேறு அறியாப் பாகர், அவை உண்ண மறுத்தாலும், அவற்றை உண்ண வைப்பது தம் கடமை என்பதை உணர்ந்து, அக்களிறுகள் உணர்ந்த வடமொழியில் "அப்புது அப்புது ; ஆது, ஆது ; ஐ. ஐ" என்ற சொற்களால் உணர்த்தியும், கவைத்த முள்ளை உடைய குத்துக் கோலால் குத்தியும் உண்ணச் செய்து விடுவர்.

புறத்தே இடுமுள்வேலியும், அகத்தே களிறுகளும் காவலாய் அமைய அமைந்த அப்பாசறையின் ஒரு பகுதி, வில்வீரர்களின் உறைவிடமாகும். அவ்வீரர்கள், தம்மினும் இளையார் மீதும், கையில் படைக்கலம் இல்லார் மீதும், போரில் தோற்று ஓடுவார் மீதும் அம்பு ஏவுவது ஆண்மை உடையார்க்கு அறமோ அழகோ அன்று என்பதை உணர்ந்தவர்கள், எதிர்த்துப் போரிடும் பகைவர், எத்துணை வல்லவராயினும், அவரை வெற்றி கொண்டு மீள்வதல்லது, அவர்க்குத் தோற்றுப், பின்னிடாப் பேராண்மையாளர். அதற்குத் துணை செய்யும் பெரிய வலிய வில் உடையவர். அத்தகைய அவ்வில்வீரர்கள், போர் முரசு கொட்டியதும் வில்லேந்தி விரைவதற்கு ஏற்ற நிலையில், தம்முடைய பெரிய வில்களை வரிசை வரிசையாக நாட்டி, அவற்றிலேயே அம்புகள் நிறைந்த தூணிகளையும் மாட்டிவைத்திருப்பர்.

வில்லை நாட்டி, அதில் அம்பறாத்தூணிகளை மாட்டி வைத்திருக்கும் காட்சி, காவிக் கல்லை இடித்துப் பொடியாக்கிக் கரைத்த கலவையில், தோய்த்து எடுத்த காவி உடைகளை உடுத்தித் தவவாழ்க்கை மேற்கொண்டிருக்கும் பார்ப்பனத் துறவிகள், நீர்நிலைகளில் நீராடி முடித்த பின்னர் அழுக்கு போகத் துவைத்து எடுத்த தம் காவி ஆடைகளை, தாம் ஏந்திவரும் முக்கோல்களை நட்டு, அம்முக்கோல்கள் மீதே ஈரம்புலர உலர்த்தி வைத்திருக்கும் காட்சியை நினைவூட்டி, பார்ப்பனத் தவசிகள் அன்பு வழியில் எந்த உலக நல்வாழ்விற்கு நோன்பு கிடக்கின்றனரோ, அதே உலக நல்வாழ்விற்குத் தான் அறப்போர் வழியில் இவ்வில் வீரர்களும் பணி புரிகின்றனர் என்ற, ஒருமைப்பாட்டுணர்வை உணர்த்துவதாக இருக்கும்.

வில் வீரர் இருக்கை இவ்வாறு ஒருபால் அமைந்திருக்க, வேல் வீரர் இருக்கை மற்றொருபால் அமைந்திருக்கும். இடையே உயர்ந்த கால்களும், இரு பக்கங்களிலும் குறுகிய கால்களுமாக நட்டு, அவை ஒவ்வொன்றையும் கயிறு கொண்டு வலித்துப், படாம் போர்த்து இயற்றிய கூடாரங்களை நிறுவியிருப்பர். தம்மைத் தாங்கிச் செல்லும் வீரர்கள், போரில் பெற்ற வெற்றிச் சிறப்புக்களைக் குறிக்கவல்ல வேறுவேறு பூத்தொழில்கள் செதுக்கப்பட்ட வேற்படைகளை, வரிசை வரிசையாக நாட்டி, அவற்றின் இடையிடையே வேற்படையாளர், பகைவர்வேல் தம்மெய்யைத் தீண்டாதவாறு மறைத்துக் காத்துக்கொள்ள, இடது கைகளில் ஏந்திச் செல்லும் கேடயங்களைப் பிணைத்து வைத்திருப்பர்.

இதுபோலவே, தேர், யானை, குதிரை வீரர்களுக்குமாகத் தனித்தனி இருக்கைகள், ஆங்கு இடம் பெற்றிருக்கும். தேர்மீதும், யானை மீதும், குதிரை மீதும் சென்று போரிட்டாலும், கையில் வில் ஏந்தாது

வீரர் செல்லார். ஆகவே அனைத்துப் படையாளர்க்கும் விற்படையல்லது வேறு துணை இல்லை. ஆகவே அப்பாசறையெங்கும் வில் வீரர்களாகவே காட்சி அளிப்பர்.

"கான்யாறு தழீஇய அகன்நெடும் புறவில்
சேண்நாறு பிடவமொடு பைம்புதல் எருக்கி,
வேட்டுப்புழை அருப்பம் மாட்டிக், காட்ட
இடுமுள் புரிசை ஏமுற வளைஇப்
படுநீர்ப் புணரியின் பரந்த பாடி,
உவலைக் கூரை ஒழுகிய தெருவில்
கவலை முற்றம் காவல் நின்ற
தேம்படு கவுள சிறுகண் யானை
ஓங்குநிலைக் கரும்பொடு கதிர்மிடைந்து யாத்த
வயல்விளை இன்குளகு உண்ணாது, நுதல்துடைத்து
அயில்நுனை மருப்பில் தம்கை இடைக்
கொண்டெனக்
கவைமுள் கருவியின் வடமொழி பயிற்றிக்
கல்லா இளைஞர் கவளம் கைப்பக்
கல்தோய்த்து உடுத்த படிவப் பார்ப்பான்
முக்கோல் அசைநிலை கடுப்ப, நற்போர்
ஓடாவல்வில் தூணி நாற்றிக்,
கூடம் குத்திக் கயிறு வாங்கு இருக்கைப்
பூந்தலைக் குந்தம் குத்திக், கிடுகு நிரைத்து
வாங்குவில் அரணம் அரணம் ஆக" (24-42)

(கான்யாறு தழுவிய - காட்டாறு சூழ்ந்த; அகன் நெடும் புறவில் - அகன்ற பெரிய குறுங்காட்டில்; சேண்நாறு பிடவமொடு - சேய்மைக் கண்ணும் சென்று மணம் நாறும் பிடவத்துடன்; பைம்புதல் எருக்கி - பச்சிளம் தூறுகளை அழித்து; வேட்டுப் புழை அருப்பம் -

வேட்டுவப் படைவீரர்களின் இருக்கையாம், சிறு வாயில்களை உடைய சிற்றரண்களை; மாட்டி - அழித்து: காட்ட இடுமுள் புரிசை-காட்டில் உள்ள முள்ளை இட்டு ஆக்கிய மதிலை; ஏமுற வளைஇ - காவல் மிகும்படி வளைத்து அமைத்த; படுநீர்ப் புணரியின் - மழைபடு நீரால் நிறைந்த கடல்போல; பரந்தபாடி - பரந்து அகன்ற பாசறையில், உவலைக் கூரை ஒழுகிய தெருவில்- தழையால் வேயப்பட்ட கூரைகளை உடைய குடில் களால் ஒழுங்குபட்ட தெருவில்: கவலை முற்றம் - நாற்சந்திகளில். காவல் நின்ற - காவலாக நின்ற; தேம்படுகவுள - மதம்நீர் வடியும் கதுப்பினையும்; சிறுகண் யானை - சிறிய கண்களையும் உடைய யானை; ஓங்குநிலைக் கரும்பொடு - ஓங்கி வளர்ந்த நிலையினை உடைய கரும்புகளோடு; கதிர் மிடைந்துயாத்த - நெற்கதிர்களோடு நெருங்கிப் பொதிந்து கட்டிய; வயல்விளை - வயலிலே விளைந்த காவியையும்; இன்குளகு-இனிய அதிமதுரத் தழையையும்; உண்ணாது- உண்ணாமல்; நுதல் துடைத்து - அவற்றால் தன் நெற்றியைத் துடைத்துவிட்டு; அயில்நுனை மருப்பில் - கூரிய மூளையையுடைய தந்தத்தின்மேல்; தம் கை இடைக் கொண்டென - தம் தம் துதிக்கையை மடித்துப் போட்டுக்கொண்டு நிற்க; கவைமுள் கருவியின் - கவைத்த முள்ளையுடைய குத்துக் கோலால் குத்தியும்; வடமொழி பயிற்றி - வடமொழியிலான ஏவற் சொற் களைப் பலமுறை கூறியும்; கல்லா இளைஞர் - யானைகளைப் பழக்குதல் அல்லது வேறு தொழில் கற்று அறியாத யானைப் பாகர்; கவளம் கைப்ப-கவளத்தைத் தின்னும் படி செய்ய; கல் தோய்த்து உடுத்த படிவப் பார்ப்பான்- ஆடையைக் காவிக்கல் கலவையில் தோய்த்து உடுத்த தவ வேடத்தை உடைய பார்ப்பான்; முக்கோல் அசைநிலை கடுப்ப - தன் கை முக்கோலை நட்டு அதில் அக்காவியாடையை ஈரம்புலர இட்டு வைத்தது போல்; நற்போர் - அறவழி ஆற்றும் போரில்; ஓடா வல்வில் -

தோற்றுப் பின் இடாமைக்குக் காரணமான வலிய வில்லை நாட்டி; தூணி நாற்றி - அதில் அம்பறாத் தூணிகளை மாட்டி; கூடம் குத்தி கால்களைக் கூடமாக நட்டு; கயிறு வாங்கு இருக்கை - கயிற்றினை வலித்துக்கட்டிய கூடாரங்களில்; பூந்தலைக் குந்தம் - அழகிய பூவேலைப்பாடு அமைந்த வேற்படைகளை; குத்தி - நட்டு; கிடுகு நிரைத்து - அவற்றின் இடையே கேடயங்களையும் வரிசையாகப் பிணித்து; வாங்குவில் அரணம் அரணமாக - வளைந்த விற்படையாகிய அரணே, அரணாக அமைந்த)

பாசறைக்கண் பாடிக்கொண்டிருக்கும் நாற்படை, வறுமையின் நீங்கிய வளமார்வாழ்வுடையது என்பதை அறிவுறுத்த எண்ணிய புலவர், ஒரு பானை சோற்றிற்கு ஒரு சோறு பதம் என்ற உத்தியின் அடிப்படையில், தம் முன்னே போர்எனப் போடப்பட்டிருப்பன, களிறுகள் பொதுவாகப் பெரிதும் விரும்பும் கரும்பும், செந்நெற்கதிரும், அதிமதுரத்தழையுமாகவும், அவற்றையும் வேண்டாது வெறுத்து ஒதுக்கும் களிறுகளைக் காட்டுமுகத்தான், அப்படையின் செல்வச் சிறப்பை விளக்கியுள்ளதாகக் கொள்வர் ஒருசிலர்.

வீரர்களை வறுமையில் வாடவிடுவது வெற்றிக்கு வழிவகுப்பதாகாது. செல்லும் இடம் எங்கும் வெல்லும் போரே காண விரும்பும் வேந்தர், தம் படைவீரர்களை வறுமையிலா வாழ்வில் நிலைநிறுத்துவதைக் கருத்தாக இருந்து முடிக்க வேண்டும் என்பதும், "சிறுமையும், செல்லாத் துனியும், வறுமையும் இல்லாயின் வெல்லும் படை" என்ற வள்ளுவர் வாக்கு அதைத் தெளிவுபடுத்துகிறது என்பதும் உண்மை.

அது போலவே, சோழன் நலங்கிள்ளியின் அரசவைக்கண் இருந்து அரியபல அறிவுரைகளை, அரசியல் நெறிமுறைகளைக் கூறிவந்த புலவர், உறையூர் முதுகண்ணன் சாத்தனார், "நலங்கிள்ளி, நின்

வெற்றிக்குத் துணைநிற்கும் நின் நாற்படையின் நல்வாழ்வில் என்றும் நாட்டம் உடையையாதல் வேண்டும். நெல்வயல்களில் வந்து படியும் பறவைகளை ஓட்டிக் காவல் புரிந்திருப்பார், பசிவந்துற்றதும், உணவு தேடியலையாதே, வயலுக்கு அணித்தாக ஓடும் வாய்க்கால்களில் உள்ள மீனைப் பிடித்துப் பனங்கருக்குத் தீயில் தீய்த்து உண்டும், புதிய மதுவை உண்டும், பசி தீராதபோது, தெங்கிளங் காய்களை வேண்டுமட்டும் வெட்டிப்பருகிப் பசியாறி மகிழ்வதற்கேற்ற வளமார் வாழ்வில் நிறுத்துவாயாக! உன் மறதியால், கால்கள் நான்கே நடப்பெற்றுத், தழை இட்டு வேய்ந்த சின்னஞ் சிறு குடிசையில் கிடந்து உழல வேண்டி நேர்ந்து விடாமல், மாறாக, தாம் வாழ்வதோடு அமையாது, தம்மை நாடிவருவார் அனைவரையும், அவர் வறுமை தீர்த்து வளமார் வாழ்வில் வாழ்விக்கவல்ல பெருவளம் உடையராக வாழ்விப்பாயாக'' என அறிவுறுத்திப் பாடிய புறநானூற்றுப் பாட்டும் அதுவே கூறுகிறது என்பதும் உண்மை.

''நெல்விளை கழனிப் படுபுள் ஓட்புநர்
ஒழிமடல் விறகின் கழிமீன் சுட்டு
வெங்கற் தொலைச்சியும் அமையார், தெங்கின்,
இளநீர் உதிர்க்கும் வளமிகு நன்னாடு
பெற்றனர் உவக்கும் நின்படைகொள் மாக்கள்
பற்றா மாக்களிற் பரிவு முந்துறுத்துக்
கூவை துற்ற நாற்கால் பந்தர்ச்
சிறுமனை வாழ்க்கையின் ஒரீஇ, வருநர்க்கு
உதவியாற்றும் நண்பின் பண்புடை
ஊழிற்றாக நின்செய்கை!'' —புறம். 29.

படைவீரர்களை வளமார் வாழ்வில் நிறுத்த வேண்டியது பேரரசர் கடனாம் என்பதைப் பலரும் வற்புறுத்தியுள்ளனர் என்பது உண்மை. ஆனால்,

ஈண்டு, களிறுகள், செல்வச் செருக்கால் உணவு வெறுத்து நின்றன எனக் கொள்ளும் பொருளினும், நாற்சந்தியில் நிறுத்தித் தம்பால் ஒப்படைத்திருக்கும் காவல் பொறுப்பில் கருத்தூன்றி நின்றுவிட்டமையால், அவற்றை உண்ணாது வெறுத்தன எனக் கூறும் பொருளே சிறப்புடையதாகும்.

காதற்பிடியைக் கண்ணுற்றதும் கணப்பொழுதும் பிரியாது கூடிக்களிக்கும் இயல்புடையன களிறுகள் என்றாலும், போரில் புண்பட்ட நிலையில், அவை காதற் பிடியையும் மறந்துவிடும் கடமையுணர்வு உடையது என்பதைப், புலவர், இதே முல்லைப்பாட்டில், வேறு ஓர் இடத்தில் கூறும் ''பிடிக்கணம் மறந்த வேழம்'' என்ற தொடரும் வற்புறுத்துவது காண்க.

# பாசறைக்கண் அரசன் தனி இருக்கை

பாசறை அமைத்து, நாற்படையாளர்க்குத் தனித்தனி இருக்கைகள் அமைத்து முடித்த பின்னர், அரசன் இருத்தற்கு ஏற்புடைய இருக்கை அமைக்கும் பணி மேற்கொள்ளப்படும். அரசனுக்கு உரிய இடம், தனித்து இருக்க வேண்டும் என்றாலும், அதை, அப்பாசறையில் எங்கோ ஒரு கோடியில் அமைத்து விடுதல் கூடாது. தன் பாதுகாப்புப் பற்றிய சிந்தனையே இல்லாமல், அரசன் சிந்தனை எல்லாம் போர் பற்றிய தாகவே இருக்கவேண்டுமாயின், அவன் இருக்கை, காவல் மிக்கதாக அமைய வேண்டுமென்பதை உணர்ந்திருந்தமையால், நாற்படையாளர் இருக்கைகளுக்கு நடுவானதான ஓர் இடத்தையே, அதற்காகத் தேர்ந்து கொள்வர். ஆங்குக், கோட்டையைச் சூழச், சுற்று மதில் அமைப்பதுபோல், குத்துக் கோல்களை வரிசையாக நட்டு, அவற்றில் பிணித்த பல் வண்ணத் திரைச் சீலைகளையே சுற்றுச் சுவராக்கிக் கொள்வர். ஆங்கு, அரசன், இரவுபகல் எனப் பாராது எப்போதும் போர் பற்றிய சிந்தனையும் செயலுமே மேற்கொள்ள வேண்டியிருக்குமாதலால் அவ்விடம், இரவிலும் பகலே போல் ஒளி விட்டிருக்கும் வகையில், அவ்விடமெங்கும் கையில் விளக்கேந்தி நிற்க, வனையப்பட்ட பாவைகள் நிறுத்திவைக்கப்பட்டிருக்கும் அப்பாவை விளக்குகளில், பெருங்காற்று வீசினாலும் அலைப்புண்டு அவிந்து போகாது நின்று எரியவும், பேரொளி காலவும் தடித்த திரிகளையே தேர்ந்தெடுத்து இட்டிருப்பர். அவ் விளக்குகள், ஒரோவழி அவிழ்ந்து விடுமாயின் அக்கணமே அவற்றைக் கொளுத்தி எரியப்பண்ண, சிற்றேவலர் பலர் அமர்த்தப்பட்டிருப்பர். அப்பணிக்கு ஆடவர் நியமிக்கப் படுவராயின், போர்க்களம் புகவேண்டிய ஆடவர் தொகை குறைபட, போர்க்களத்தில் குறை நேர்ந்துவிடும்

என்பதாலும், நாட்டு மகளிர், மனைகளில் மட்டுமே விளக்கேற்றக் கற்ற மெல்லியலாராதல் கூடாது, போர்க்களத்துப் பாசறை கண்ணும் விளக்கேற்றக்கற்ற வன்மையாளராதல் வேண்டும் என்பதாலும், அப்பணிக்கு ஆடவரை நியமிக்காமல் மகளிரையே நியமித்திருப்பர். குற்றேவல் புரிய அமர்த்தப்பட்ட அம்மகளிரும், கைகளுக்குப் பொற்றொடி பூட்டிக் கொள்ள வல்லச் செல்வச்செழுமையும், சிறு முதுகுக்கு அழகூட்ட அம்முதுகில் கிடந்து அசைதற்கேற்ப நீண்ட அடர்ந்த கூந்தலுக்கு உரியராம் அளவு உடல்வளமும் வாய்க்கப் பெற்றவராகவே இருப்பர். ஏற்ற பணி, விளக்கேற்றி வைப்பதே என்றாலும், அவர் பணிமேற்கொண்டிருக்கும் இடம், பகைநாட்டை அடுத்த பாசறை. அதுவும் அரசன் உறையும் உள்ளிருக்கை. ஆகவே, அவர்கள், பகைப் படையிலிருந்து தம்மையும் காத்துக் கொள்ள வேண்டும்; அப்பாசறை உள்ளாரையும் காக்க வேண்டி நேரிடின், அதுவும் மேற்கொள்ள வேண்டும். அதனால் அவர்கள் இறுக அணிந்திருக்கும் மேல் சட்டையாம் கச்சோடு, வாட்படையினையும் தவறாது பிணித்துக் கொண்டிருப்பர். அவ்வாட் படைகளும், எத்துணை ஓங்கி வீசினாலும் முறிந்து போகாத் திண்மை வாய்ந்த பிடி உடையனவாயிருக்கும். அடி முதல் முனை வரை வெண்ணிறமே காட்டுமாறு நன்கு தீட்டப்பட்டிருக்கும். வாளின் வெண்ணிறத்தால் வெளிப்படும் ஒளி, இரவையும் பகலாக்க வல்ல பேரொளியாகும். அந்த அளவிற்கு மெருகு ஏற அவைநன்கு தீட்டப்பட்டிருக்கும். அத்தகு இளமங்கையர், விளக்குகளில் எண்ணெய் குறையுந்தோறும், எண்ணெய் வார்த்து நிரப்பவும், அவிந்து போகும் விளக்குகளை அக்கணமே கொளுத்தி ஒளியூட்டவும், எண்ணெய் நிறைந்த சுரையும், தீப்பந்தமும் கையராய் வலம் வந்து கொண்டேயிருப்பர்.

"வேறுபல் பெரும்படை நாப்பண் வேறோர்
நெடுங்காழ்க் கண்டம் கோலி அகம்நேர்பு,

குறுந்தொடி முன்கைக் கூந்தலம் சிறுபுறத்து
இரவு பகல் செய்யும் திண்பிடி ஒள்வாள்
விரவுவரிக் கச்சில் பூண்ட மங்கையர்,
நெய்உமிழ் சுரையர் நெடுந்திரிக் கொளிஇக்
கைஅமை விளக்கம் நந்துதொறும் மாட்ட"

(43-49)

(வேறுபல் பெரும்படை. நாப்பண்-வேறுவேறு ஆன பல பெரும்படைகளின் நடுவே; நெடுங்காழ் கண்டம் கோலி - நாட்டியிருக்கும் நெடிய குத்துக்கோல்களில் திரைச்சீலையை மதில்போல் வளைத்துக் கட்டி; வேறு ஓர் அகம் நேர்பு-அரசனுக்கு வேறு ஆன ஓர் இருக்கையை ஆக்கி; குறுந்தொடி முன்கை - சிறுசிறு தொடிகளை அணிந்த முன்கையினையும். கூந்தலம் சிறுபுறத்து - கூந்தல் அசைந்து அழகு செய்யும் சிறிய முதுகினையும் உடைய; இரவு பகல் செய்யும் - இரவைப் பகலாகச் செய்ய வல்ல ஒளி வீசும்; திண்பிடி ஒள்வாள் - திண்ணிய பிடியையும் கூர்மையால் ஒண்மையினையும் உடைய வாளை; விரிவுவரிக் கச்சில் - வரிந்து கட்டிய மேலணியாம் கச்சில்; பூண்டி மங்கையர் - கட்டிக் கொண்டிருக்கும் மகளிர்; நெய்உமிழ் சுரையர் - எண்ணெய் வார்க்கும் திரிக்குழாய் உடையராய்; நெடுந்திரிக் கொளீஇ - நீண்ட திரியை இட்டு; கையமை விளக்கம் நந்து தொறும் மாட்ட - பாவை விளக்குகள் அவியுந்தோறும் கொளுத்தி நிற்க.)

## மெய் காப்பாளர்

நாடாளும் மன்னவன் எவ்வளவுதான் நல்லவனாக இருந்தாலும், அவனையும் பகைத்து நிற்பார் இருக்கவே செய்வர். அப்பகைவரால் அரசனுக்கு எந்நேரத்திலும் ஊறு நேரக்கூடும். ஆகவே, அரசனுக்கு அத்தகைய ஊறு நேராவாறு அவனை, அவன் நிழல்போல் சூழ்ந்து நின்று, காக்கவல்ல வீரர் சிலர் இருக்க வேண்டுவது

இன்றியமையாதது. அத்தகைய மெய்காப்பாளராம் பொறுப்பினை எவரிடம் வேண்டுமாயினும் ஒப்படைத்தல் இயலாது. அரசனுக்கு ஊறு விளைவிக்க வருவார் மிகப் பெரிய வன்மையாளர் எனினும், அவரையும் அழித்து அரசனைக் காக்கவல்ல பேராற்றல் வாய்ந்தவராக மெய்காப்பாளர் இருக்க வேண்டுவது இன்றியமையாததே. ஆனால் அது மட்டும் போதுமானதன்று; அரசனுக்கு ஊறு நேர இருப்புழி, அதைத் தவிர்க்கும் முயற்சியில் தம் உயிரே போய்விடும் என்றாலும், அது குறித்துக் கவலாது, அது செய்யத் துடிக்கும் தூய உள்ளம் உடையராதல், நனிமிக இன்றியமையாதது. அத்தகைய தூய உள்ளம், அரசன்பால் அளவிறந்த அன்பும் ஆசையும், பற்றும் பாசமும் உடையவர்க்கு மட்டுமே உண்டாம். ஆகவே அத்தகைய அன்பும், ஆசையும் பற்றும் பாசமும் கொண்டவர்களையே, அரசர் தம் மெய்காப்பாளராகத் தேர்ந்து கொள்வர். அவர்பால் அவை குறைவறக் குடி கொண்டுள்ளன என்பதை அவரோடு கொள்ளும் குறுகிய காலத் தொடர்பால் உறுதி செய்து கொள்வது இயலாது. அரண்மனையில் பல்லாண்டுக்காலம், பல்வேறு துறைகளில் பணிமேற்கொண்டிருக்கும் நிலையில், ஒவ்வொரு நிலையிலும் அவர்தம் செயல் முறைகளைக் கொண்டே அதை உறுதி செய்ய இயலும். அதனால், அத்தகைய மெய்காப்பாளர், ஆண்டாலும், அறிவாலும், அன்பாலும், அறநெறிகளாலும் முதிர்ந்தவர்களாகவே இருப்பர்.

முல்லைக்காட்டில், வெண்ணிறப் பூக்கள் மலர்ந்து கிடக்க, மோசி மல்லிகைக் கொடி படர்ந்த சிறு சிறு தூறுகள், மெத்தன வீசும் மென்காற்றுக்கு ஏற்ப, அசைந்தாடும் காட்சியை நினைவூட்டும் நிலையில், தூய வெண் துகிலால் ஆன தலைப்பாகையும், மேனி போர்த்த சட்டையும் உடையராய், ஆண்டு முதுமையாலும், உறக்க மயக்கத்தாலும் தள்ளாடித் தள்ளாடி நடைபயிலும் அம்மெய்காப்பாளர், ''பணி ஒய்ந்து

விட்டது; உறங்கச் செல்லுங்கள் எல்லோரும்'' என்ற ஆணையை, மணி ஒலித்து அறிவிக்க எல்லோரும் அமைதியாக உறக்கம் மேற்கொண்டுவிட, ஒலி அவிந்து கிடக்கும் நள்ளிரவிலும், உறக்கம் கண்களைத் தழுவவும் உறங்காது, அரசனுக்குக் காவலாய், அவனையே சூழ்ந்து உலா வருவர்.

''நெடுநா ஒண்மணி நிழத்திய நடுநாள்
அதிரல் பூத்த ஆடுகொடிப் படாஅர்,
சிதர்வரல் அசைவளிக்கு அசைவந்தாங்கு
துகில் முடித்துப் போர்த்த தூங்கல் ஓங்கு நடை
பெருமூதாளர் ஏமம் சூழ'' (50-54)

நெடுநா ஒண்மணி - நீண்ட நாக்கினை உடைய ஒள்ளிய மணியின் ஓசை; நிழத்திய நடுநாள் - அடங்கிய நள்ளிரவில்; அதிரல் பூத்த - மோசி மல்லிகை மலர்ந்த; ஆடுகொடிப் படாஅர் - அசைகின்ற கொடிகள் படர்ந்த சிறு தூறுகள்; சிதர்வரல் அசைவளிக்கு - மெத்தென வீசும் காற்றுக்கு; அசைவந்தாங்கு— ஆடுவதுபோல்; துகில் முடித்துப் போர்த்த வெண்துகிலால் தலைப்பாகை கட்டி மேனியைச் சட்டையிட்டுப் போர்த்திக்கொண்ட; தூங்கல் - தளர் நடையினையும்; ஓங்குநடை - உயர்ந்த ஒழுக்கத்தினையும் உடைய; பெருமூதாளர் - மிக முதிர்ந்த மெய்காப்பாளர்; ஏமம் சூழ - அரசனுக்குக் காவலாகச் சூழ்ந்து நிற்க.

நெடுநா ஒண்மணி நிழற்றிய நடுநாள் எனப் பாடங்கொண்டு, ''மணி எறிந்து விட்ட நடுநாள்'' எனப் பொருள் கொள்வர் நச்சினார்க்கினியர். ''பாசறையுள்ளார் இனி, பள்ளிபுக்குக் கண்ணுறக்கம் கொள்வாராக'' என அறிவிக்கும் அறிவிப்பாக மணி ஒலித்தது எனக் கூறுவது அவர் கொள்கை போலும்!

## நாழிகைக் கணக்கர்

நாடாளும் அரசர்க்கு ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு நாழிகையும் விலைமதிக்க ஒண்ணாச் சிறப்புடையன. இன்னபணி, இன்ன நாளில், இன்ன நாழிகையில் முடிக்கப்படவேண்டும் என முறை வகுத்துப், பணியாற்றக்கடமைப்பட்டவன். ஆகவே, கடந்துபோன கால அளவு, அவன் கருத்தில் எப்போதும், பசுமையாக இருந்து கொண்டேயிருத்தல் இன்றியமையாதது. ஆனால், காலம் காட்டும் கருவி இல்லாத காலம். என்றாலும், காலம் காணும் வழிமுறையினை அக்காலத்தவர் அறியாது விட்டாரல்லர்.

ஒருகலத்தில் நிறைத்து வைக்கும் நீரைச், சின்னம் சிறு துளை வழியாகச் சிறுகச் சிறுகக் கசிய விட்டு, அவ்வாறு கசியும் நீரை, அவ்வப்போது அளந்து காண்பதன் மூலம், நாழிகைக் காணும் முறையொன்றினைப் பழங்காலத்தினர் அறிந்திருந்தனர். அக்கருவிக்குக் குறுநீர்க்கன்னல் என்பது அவர் இட்ட பெயர்.

கசியும் நீரை, அவ்வப்போது அளந்து நாழிகை அறிவிப்பதற்கென்றே சிலர் அமர்த்தப்பட்டிருந்தனர். அவர்கள் அதில் செய்யும் சிறுதவறு, அரசன் செயல் முறைகளையே அடியோடு தகர்த்துவிடுமாதலின், அளந்து கணக்கிடுவதில். ஒரு சிறிதும் தவறு செய்யாத சிறந்த கணக்கர்களையே தேர்ந்தெடுத்து அவர்பால், அப்பணியை ஒப்படைத்து வைப்பர். அவர்கள் கருத்தெல்லாம், நாழிகை காணும் அது ஒன்றிலேயே ஒன்றிவிடுவதால். அவர்கள் அத்துறை அல்லது வேறு துறைகளைக் கற்க விரும்புவாரல்லர்.

இவ்வாறு நாழிகை அறிவிக்க வேண்டுவது, அமைதியான அரசியல் பணிகள் நடைபெறும் அரண்மனை வாழ்க்கையினும், பகைப்படையைக்,

காலம் அறிந்து, அக்காலத்தைத் தவற விடாது விழிப்பாயிருந்து தாக்கவேண்டிய போர்க்கள வாழ்க்கைக்கே, மிகமிகத் தேவை. அதனால், பகைநாட்டு எல்லையில் அமைக்கப்பட்டிருக்கும் பாசறையிலும், நாழிகைக் கணக்கர், குறுநீர்க் கன்னலோடு வந்திருந்து, மேற்கொள்ளும் ஒவ்வொரு பணிக்கான நாளினையும், நாழிகையினையும் வரையறுத்துப் பணிபுரியும் அரசன் முன், கைகூப்பித் தொழுதவாறே சென்று, அவன் கருத்தைத் தம்பால் ஈர்க்கும் கருத்தோடு வாழ்த்தி, கடந்துபோன நாழிகை இவ்வளவு என்பதை, ஒவ்வொரு பணி தொடக்கத்திலும் அறிவுறுத்திக் கொண்டே இருப்பர்;

"பொழுது அளந்து அறியும் பொய்யா மாக்கள்,
தொழுது காண் கையர் தோன்ற வாழ்த்தி
எறிநீர் வையகம் வெலீஇய செல்வோய்! நின்
குறுநீர்க் கன்னல் இனைத்து என்று இசைப்ப"
(55-58)

(பொழுது அளந்து அறியும் - நாழிகையை அளந்து அறியும்; பொய்யா மாக்கள் - தம்தொழிலில் பொய்த்துப் போகாத நாழிகைக் கணக்கர்; தொழுது காண்கையர் - தொழுது காண்பதற்கேற்ப கூப்பிய கையினை உடையராய்; தோன்ற வாழ்த்தி - தாம் இருப்பது அரசனுக்குத் தோன்றுமாறு வாழ்த்தி; எறிநீர் வையகம் வெலீஇய செல்வோய் - அலைவீசும் கடல் சூழ்ந்த உலகில், பகைவெல்ல, படையோடு செல்லும் அரசே! நின் குறுநீர்க் கன்னல் - உன்னுடைய குறுநீர்க் கன்னல் காட்டும் நாழிகை. இனைத்து என்று இசைப்ப - இத்துணையாம் என்று எடுத்துக்கூற)

"பொழுது அளந்து அறியும் பொய்யாமாக்கள் தொழுது காண்கையர்" என்ற தொடரை, "மாக்கள் பொழுது அளந்து அறியும் பொய்யாக் காண்கையார்"

என மாற்றி, "அறிவில்லாதோருடைய வாழ்நாளை இத்துணை என்று அறிந்து அறியும் பொய்யாத காட்சியை உடையார்" எனப்பொருள் கூறியுள்ளார் நச்சினார்க்கினியர்.

தொல்காப்பியம், "மாவும் மாக்களும் ஐயறிவினவே" எனக் கூறுகிறது என்றாலும், "கலந்தரு திருவின் புலம் பெயர் மாக்கள்" (சிலம்பு: 5 : 11, 6 : 130) "பட்டின மருங்கில் படைகெழு மாக்கள்" (சிலம்பு : 5 : 77) "வம்பமாக்கள் தம்பெயர் பொறித்த" (சிலம்பு : 5 : 11) "பெருநீர்போகும் இரியல் மாக்கள்" (சிலம்பு 6 : 112 ; பெரும்பாண் : 432) "பரந்து ஒருங்கு ஈண்டிய பாடை மாக்கள்" (மணி 1 : 16) "இரவன் மாக்கள்" (புறம் : 328 : 4 ; 333 : 10) எனவரும் இடங்களிலெல்லாம் பெருந்திரளாகக் கூடியிருக்கும் மக்கள் தொகுதியை, "மாக்கள்" என்றே ஆசிரியர் பலரும் குறிப்பிட்டுள்ளனர். ஆகவே, ஈண்டு, மாக்கள் என்ற சொல்லுக்கு அறிவிலாதோர் எனப்பொருள் கொள்வதும், அப்பொருள் கொண்டமையால், "பொழுது", "மக்கள்" என்ற சொற்களை "மக்கள் பொழுது" என இடமாற்றிப் போட்டு, அறிவிலாதோர் வாழ்நாள் எனப் பொருள்கொண்டு நாழிகைக் கணக்கர் செயலைக், கணி கூறுவோர் செயலாக மாற்றிப், பொருள் கொள்வதும் தேவையில்லை.

"இருநில மருங்கின் மன்னர் எல்லாம் நின்
திருமலர்த்தாமரைச் சேவடி பணியும்
முழுத்தம் ஈங்கிது"

எனச் சிலப்பதிகாரத்தில் வருவதுபோல் (சிலம்பு 26:28-30) ஆகும் காலம், ஆகாக் காலம் அறிந்து கூறும் நாழிகைக் கணக்கரும், அரசர்களைச் சார்ந்திருப்பர் என்றாலும், ஈண்டு, "பொழுதளந்தறியும் பொய்யா மாக்கள்" என்பது நாளின் ஒவ்வொரு கூற்றினையும்

அறிந்து கூறுவாரையே குறிக்கும் என்பது "குறுநீர்க் கன்னல் இனைத்து என இசைப்ப" என்ற தொடரால் உறுதியாவது காண்க.

"குறுநீர்க் கன்னல் எண்ணுதல் அல்லது
கதிர்மருங்கு அறியாது" —அகம் 43 : 6-7.

"குறுநீர்க் கன்னலின் யாமம் கொள்பவர்"
—மணிமேகலை 7 ; 65.

என்ற தொடர்கள், குறுநீர்க் கன்னல், எனும் காலம் காட்டும் கருவி, நாளின் கூறுகளைக் காட்டுவதல்லது, மக்களின் ஆகும் காலம், ஆகாக் காலங்களைக் காட்டுவதில்லை என்பதை உறுதி செய்தல் காண்க.

காட்டகத்தே அமைந்த அப்பாசறைக்கண், நாற்படை வீரர்களின் இருக்கைக்கு நடுவண், அரசனுக்கு எனத் தனியிடம் ஒன்றை வகுத்திருந்தனர் என்றாலும், அதுவும் மெய்காப்பாளராம் பெரு மூதாளரும், பொழுதறிந்து உரைக்கும் பொய்யாமாக்களும் போர்வாளும் இருத்தற்கு ஏற்ற போரிடமாகவேயிருக்குமாதலின், அரசன் தனித்திருந்து நடந்தன எண்ணி, நடப்பன சிந்தித்தற்கு உரிய இடமாக அதனுள்ளும் ஒரு சிறிய மறைவிடம் இருக்க வேண்டுவது இன்றியமையாதது என உணர்ந்திருந்தனர்.

தமிழகத்துப் பேரூர்களில், அரசன் பெருங்கோயில் போலும் பெருமாளிகைகளை வகுப்பதில் தமிழ்நாட்டு வினைஞர்களுக்குத் துணையாக, நாவலந்தீவின் பிற பகுதிகளிலிருந்து வந்து பணிபுரியும் மகத வினைஞர், மராட்டக் கம்மர், அவந்திக் கொல்லர்களைப்போலவே, கடல் கடந்த நாட்டினின்றும் வந்து பணிபுரியும் யவனத் தச்சரைக் கொண்டு, அவ்விடம் வகுக்கப்பட்டிருந்தது.

போர் ஓய்ந்து அமைதி நிலவும் காலங்களில் கட்டிடக் கலையில் ஆர்வம் காட்டும் யவனர், போர்க் காலத்தில் சிறந்த குதிரை வீரர்களாகத் திகழ்ந்தனர். குதிரை வீரர்களான அவர்கள், குதிரைகளை ஓட்ட உதவும் வாரால் ஆன சவுக்கு எனப்படும் சம்மட்டியை, எங்குச் சென்றாலும் உடன் கொண்டே செல்வர். சவுக்கை உடன் கொண்டு செல்வர் என்றால், அதை எப்போதும் கையிலேயே ஏந்தியிருப்பாரல்லர். தேவைப் படும்போது எளிதில் எடுத்துப் பயன்படுவதற்கு ஏற்ப, அதைத், தம் இடையைச் சுற்றி ஆடைக்குள்ளாக வளைத்துப் பிணித்துக் கொண்டிருப்பர். மகளிர் ஆடையாம் சேலைபோலும் நீண்ட ஆடையை, இடைச் சுற்றளவே இருக்குமாறு மடித்து வைத்துப், பாவாடை போல் தைத்து அணிந்து கொள்ளும் வழக்கம் உடையவர் யவனர். உள்ளே குதிரைச் சம்மட்டிச் சுற்றிக் கிடக்க, அது மறைய அதற்கு மேல், மேலேகூறிய அமைப்புடைய ஆடையை அணிய, அது அவர் இடையில் வீங்கிப் புடைத்துக் காணப்படும். உடுத்திருக்கும் அவ்வாடைக்கு மேல், மெய் மறைய சட்டையும் அணிந்திருப்பர். இயல்பாகவே வலிகூடி முறுக்கேறிய உடல் அமையப் பெற்ற யவனர்; அதற்கேற்ப, படைக்கு அஞ்சாப் பேராண்மையும் உடையராவர்; இத்தகு உடல் உரமும், உடை அலங்காரமும் உடைமையால், தோற்றமே அச்சம் ஊட்டுவதாக இருக்கும். அவர்கள் அரசன் அமைதியாக இருந்து சிந்திக்க, அமைத்த அறைகள், பாராட்டுக்குரியவாகும். யவனர் புகழ்பாடும் பாவைவிளக்குகளேபோல், அவர் கை வண்ணச் சிறப்புக் காட்டும் புலிச் சங்கிலிகளைக் கொண்டு ஒப்பனை செய்யப்பட்ட அந்த நல்ல இல்லத்தை, அரசன், தம் அமைச்சர் உள்ளிட்ட கருமத் தலைவர்களை அழைத்துப் பேச உதவும் புற அறையும், தனித்து இருந்து ஓய்வு கொள்ள உதவும் அக அறையும் உடையனவாகத் திண்ணிய கயிறுகளில் தைக்கப்பட்ட திரைச்சீலைகளைக்

கொண்டு வளைத்து வகுத்திருப்பர். அமைச்சர் உள்ளிட்ட அகக்கணத்தார் மட்டுமே சென்று வரும் உரிமை மிக்க ஆங்கு, விளக்கேற்றி ஒளியூட்டும் மகளிரும் செல்லுதல் கூடாது என்பதால், ஆங்கு தன் இயற்கைப் பேரொளியாலேயே ஒளியூட்டும் மாணிக்கக் கற்களை அமைத்து வைப்பர்.

அரசன் தனித்து உறையும் பள்ளியறையேயாயினும், அரசன் விரும்பினால் விரும்புவோர்க்குச் சென்று செய்தி கூறவும், அரசனுக்குத் தேவைப்படும் உண்ணுநீர் போல்வன கொணர்ந்து கொடுக்கவும், ஏவலர் சிலர், ஆங்கும் இருப்பது இன்றியமையாதது. அதனால், ஆங்குச் சில ஏவலரும் இருந்தனர். இடமோ, நாட்டு நலம் காக்கும் நல்ல சிந்தனைகள் உருவாகும் இடம். அது உருவாக, அமைச்சர் உள்ளிட்டார் தத்தம் உணர்வுகளை உரைவடிவில் வெளிப்படுத்தும் இடம். அத்தகைய இடங்களில் பணிபுரியும் ஏவலர், ஆங்கு அரசர் அமைச்சர்களிடையே உரையாடல் நிகழுங்கால், தம்காதுகளில் விழுந்தனவற்றை வாய்தவறி வெளிப் படுத்திவிடுவராயின், அதனால் அரசுக்கும் நாட்டிற்கும் பெருங்கேடு விளைந்துவிடும். அதனால், ஆங்கு அமர்த்தப்படும் ஏவலர்கள், இந்நாட்டு அரசியலில் ஆர்வம் காட்டும் தேவையற்ற அயல்நாட்டவராகவும், ஒரோவழி அதில் ஆர்வம் கொண்டு, கேட்டவற்றைக் கூறவிரும்பினும், கூறமாட்டா ஊமையாகவும் இருப் பவர்களை மட்டுமே தேர்ந்து அமர்த்திக் கொள்வர்.

"மத்திகை வளைஇய மறிந்துவீங்கு செறிவுடை
மெய்ப்பை புக்க வெருவரும் தோற்றத்து
வலிபுணர் யாக்கை வன்கண் யவனர்,
புலித்தொடர்விட்ட புனைமாண் நல்வில்

திருமணி விளக்கம் காட்டித் திண்ஞாண்
எழினி வாங்கிய ஈரறைப் பள்ளியுள்
உடம்பின் உரைக்கும் உரையா நாவின்
படம்புகு மிலேச்சர் உழையராக'' (59-66)

(மத்திகை - குதிரையை அடிக்கின்ற வாராம் சம்மட்டி ; வளைஇய - வளைந்து கிடக்கின்ற ; மறிந்து வீங்கு செறிவுடை - மடங்கி மடங்கிக் கிடந்து, புடைத்துத் தோன்றுமாறு நெருங்கக் கட்டின உடையினையும் ; மெய்ப்பை புக்க - சட்டை அணிந்த ; வெருவரும் தோற்றத்து - அச்சம் ஊட்டும் தோற்றத்தினையும் ; வலிபுணர் - இயற்கையான வலி கூடிய ; யாக்கை - உடலினையும் ; வன்கண் - தறுகண்மையினையும் உடைய; யவனர் - யவன நாட்டு வினைஞர்கள் ; புலித்தொடர்விட்ட - புலிச்சங்கிலி தொங்கவிடப்பட்ட ; புனைமாண் நல்இல் - ஒப்பனை செய்யப்பட்ட, மாட்சிமையினை உடைய நல்ல இல்லில் ; திருமணி விளக்கம் காட்டி - அழகிய சிறந்த மாணிக்கமாகிய விளக்கை எரிய வைத்து ; திண்ஞாண் எழினி வாங்கிய - திண்ணிய கயிற்றினாலே திரையை வளைத்து ஆக்கிய ; ஈரறைப் பள்ளியுள் - இரண்டாகிய அறையினுள்ளும் உள்ளறையாகிய பள்ளியறையில்; உடம்பின் உரைக்கும் - உள்ளத்து உணர்வுகளைக் கையினாலும், கண்ணாலும், வெளிப்படுத்துவதல்லது ; உரையா நாவின் - சொல்லெடுத்து உரைக்கமாட்டா நாவினை உடைய ஊமையரும், படம்புகு - சட்டையிட்டவரும் ஆகிய ; மிலேச்சர் உழையராக - பெலுச்சித்தானத்திலிருந்து வந்து, பண்டு பெலுச்சர் என அழைக்கப்பட்ட துருக்கராகிய மிலெச்சர், பணிபுரிந்து அருகிலிருக்க.)

பகைநாடு கொள்ளக் கருதி பெரும் படையோடு, அப்பகையரசர்மேல் செல்லும் போரையே விரும்பி விட்டமையால், நினைவெல்லாம் அப்போர் பற்றிய

தாகவே இருப்பதால், அகவறையாம் பள்ளியறையில் உள்ள படுக்கைக்குச் சென்றும், அரசன் கண்கள் உறக்கம் பெறாவாயின. அன்றைய போரில், பகை வீரர் எடுத்தெறிந்த வேற்படை விரைந்து வந்து பாய்ந்ததால் புண்பட்டு, அப்புண் தரும் கடும் நோயால், காதல்பிடியானைகளையும் மறந்து வருந்திக் கிடக்கும் வேழங்களின் நிலைகளை நினைத்தும், பகைப்படையைச் சேர்ந்த யானைகளின் பருத்து நீண்ட கைகள், அடியுண்ட மலைப்பாம்பு துடிப்பதுபோல் வெட்டுண்டு வீழ்ந்து துடிக்க, அவ்வேழப்படையை அழித்து வெஞ்சமர் புரிந்து, பகையரசர்மண்கருதிப் போர்தொடுப்பார் அணியும், தலைமாலையாம் தேன்துளிக்கும் புது மலர்களால் ஆன வஞ்சி மாலைக்கு, நல்ல வெற்றியை உண்டாக்கியதன் மூலம், செஞ்சோற்றுக் கடன் கழித்து விட்டு, உயிர் இழந்துபோன வீரர்களை நினைந்தும், பகைவீரர்களின், ஏவும் அம்பு, எறியும் வேல், வீசும் வாள் இவைகளால் ஊறு நேராவாறு, உடல் மறையப் போர்த்திவிடும் தடித்த தோலால் ஆன பரிசையும் போழ்ந்து கொண்டு, பகைப்படையைச் சேர்ந்த வில் வீரர்கள் ஏவிய அம்புகள், உடலில் ஆழப் பாய்ந்து விடவே, அந்நோய் மிகுதியால் பசிதீரப் புல் உண்பதும் மறந்து, மண்மீது செவிசாய்த்து வீழ்ந்துவிட்ட குதிரைகளை நினைந்தும், ஒருகையைப் படுக்கையில் ஊன்றி இருந்து, கைக்கடகமும் தலை முடியும் அடுத்தடுத்துக் கிடக்குமாறு, ஒரு கையால் தலையைத் தாங்கிக்கொண்டு, போரில். படை அவ்வாறு அழிவுண்ட தற்காம் காரணங்களை ஆராய்ந்து அறிந்து, இனிவரும் போரில், படை அவ்வழிவுக்கு உள்ளாகாவாறு வெற்றி கொள்ளத்தக்க வழி வகைகளைத் துணிந்து முடிவு செய்ய நெடிது சிந்தித்து, அச்சிந்திப்பின் முடிவில், நாளை, தான் மேற்கொள்ள எண்ணிய போர் முறைகளால் வெற்றி வாய்ப்பு உறுதி என்ற தெளிவு பிறந்து விடவே, பகைவரின் அப்படை, அழிக்க இப்படையை

எனத் தேர்ந்து தேர்ந்து கொண்ட படைக்கலங்களையே ஏந்தி ஏந்திக், காழ்ப்பேறி உரம்பெற்ற கைவிரல்களால், எப்போதும் வெற்றிப் புகழே தரும் பெருமைமிகு வஞ்சி மலர்களால் ஆன தலைமாலையை, வெற்றிச் சிறப்பு விளங்க நன்கு சீர்செய்துகொண்டு, பகையரசர்களை அவர்கள் இருக்கும் அவர்தம் அரணகத்தே இருந்தும் நடுங்கப்பண்ணும் வெற்றி முரசு முழங்கா நின்ற அப்பாசறைக்கண், வெற்றி உறுதி என்ற நினைவுணர்வு அளித்த இன்ப உணர்வு மேலோங்க, சிறிதே துயில் கொள்வானாயினன்.

"மண்டு அமர் நசையோடு கண்படை பெறாஅது
எடுத்து எறி எஃகம் பாய்தலின் புண்கூர்ந்து
பிடிக்கணம் மறந்த வேழம், வேழத்துப்
பாம்பு பதைப்பு அன்ன பரூஉக்கை துமியத்
தேம்பாய்கண்ணி நல்வலம் திருத்திச்
சோறுவாய்த்து ஒழிந்தோர் உள்ளியும், தோல்துமிபு
வைந்நுனைப் பகழி மூழ்கலின் செவிசாய்த்து
உண்ணாது உயங்கும் மா சிந்தித்தும்,
ஒருகை பள்ளி ஒற்றி, ஒருகை
முடியொடு கடகம் சேர்த்தி, நெடிது நினைந்து
பகைவர்ச் சுட்டிய படைகொள் நோன்விரல்
நகைதாழ்கண்ணி நல்வலம் திருத்தி
அரசு இருந்து பணிக்கும் முரசு முழங்கு பாசறை
இன்துயில் வதியுநன்" (67-80)

மண்டு அமர் நசையோடு - பகைவர்மேல் பெரும் படையோடு செல்லும் போரை விரும்புதலானே; கண்படை பெறாஅது - கண்ணுறக்கம் கொள்ளாமல்; எடுத்து எறி எஃகம் பாய்தலின் பகைவர் எடுத்து எறிந்த வேல் பாய்ந்ததனால்; புண்கூர்ந்து - புண் பெற்று; பிடிக்கணம் மறந்த வேழம் - தம் காதற்

பிடியானைகளை மறந்துவிட்ட களிற்றுப் படையினையும்; வேழத்து பகைப்படையைச் சேர்ந்த யானைகளின்; பருஉக்கை - பெரிய நீண்ட கைகள்; பாம்பு பனைப்பு அன்ன துமிய - அடியுண்ட பாம்பு துடிப்பது போல் துடிக்குமாறு அற்று விழ; தேம்பாய்கண்ணி நல்வலம் திருத்தி - தேன்துளிக்கும் தம் தலை மாலைக்கு நல்ல வெற்றியை உண்டாக்கி; சோறு வாய்த்து - செஞ்சோற்றுக் கடன் கழித்து; ஒழிந்தோர் உள்ளியும் - உயிர்விட்ட வீரர்களை நினைந்தும்; வைநுனைப் பகழி - கூரிய நுனியினையுடைய அம்புகள்; தோல் துமிபு மூழ்கலின் - உடலுக்குக் காவலாயிட்ட தோல் பரிசையினையும் அறுத்துவிட்டு உடலில் ஆழ அழுந்து கையினாலே; செவிசாய்த்து - செவி சாய்த்து வீழ்ந்து; உண்ணாது உயங்கும் - நோய் மிகுதியால் புல் உண்ணுவதும் வெறுத்து வருந்தும்; மா சிந்தித்தும் - குதிரைகளை நினைத்தும்; ஒருகை பள்ளி ஒற்றி - ஒருகையைப் படுக்கையில் ஊன்றிக் கொண்டு, ஒருகை முடியோடு கடகம் சேர்த்தி - மற்றொரு கையை முடியோடு கடகமும் சேரும்படி தலையைத் தாங்குமாறு வைத்து; நெடிது நினைந்து - சென்ற நாள் போர் முறைகளையும் வரும் நாள் போர் முறைகளையும் பற்றி நீளச் சிந்தித்து; பகைவர் சுட்டிய படைகொள் - பகைவரைக் குறித்து எடுத்த படைக் கலன்களைக் கொண்ட; நோன்விரல் - வலிய விரல்களால்; நகைதாழ்கண்ணி - எக்காலமும் தனக்குப் புகழே விளைவிக்கும் சிறப்புமிக்க வஞ்சிமாலையாம் தலைமாலையை; நல்வலம் திருத்தி - சிறந்த வெற்றி வாய்க்க திருத்தி அணிந்து; அரசு இருந்து பணிக்கும்

பகையரசர்கள் தம் அரணகத்தே இருந்தும் அஞ்சுதற்குக் காரணமாய; முரசு முழங்கு பாசறை - வெற்றி முரசு முழங்கும் பாசறையின்கண்ணே; இன்துயில் வதியுநன் - வெற்றிகண்ட மனநிறைவால் இனிதே துயில் கொள்ளும் தலைவனுடைய.]

வினைமேற்சென்ற வேந்தன் சிந்தையெல்லாம் எடுத்த வினை பற்றியதாகவே இருந்துவிட்டமையால், பகை நாடு கொள்வான்வேண்டி வஞ்சி சூடிப் புறப்பட்ட நாள்தொட்டு, வெற்றி கொண்டு வாகை சூடிய நாழிகை வரையும், அவனை அணுக அஞ்சியிருந்த உறக்கம், வந்தவினை முடித்த வெற்றிக் களிப்பில் ஆழ்ந்திருந்த அற்றம் நோக்கி, அவனைத் தழுவிக் கொள்ளவே, அவனும் சிறிதே உறக்கம் கொண்டுவிட்டான்.

கடமை மேற்கொண்டிருக்கும் காலத்தில் காதல் நினைவு, கடமையை இடையீடின்றி ஆற்றவிடாது அலைக்கழிக்குமாதலின், அக்காலத்தில் காதல் நினைவு கூர்தல் கூடாது என்பதை உணர்ந்தவன் அவன். "இழவி நிலையே வினையிடத்து உரையார்" என்பது தொல்காப்பியம். இதனால் ஏற்றுச் சென்ற வினை இனிதே முடியுங்காரும், அவன், தன்னை மறந்திருந்தது முறைதான். ஆனால், மேற்கொண்டு சென்ற வினையில் வெற்றி கண்ட மறுகணமே, காதல் உணர்வு வீறுகொண்டு எழ, அவன் அடுத்த கணமே தன் அருகில் இருந்திருக்க வேண்டும் என எதிர்பார்த்தாள். "வென்றிக் காலத்து விளங்கித் தோன்றும்" என்பது தொல்காப்பியம். ஆனால் வினை முடிவுற்ற பின்னரும் அவன் வரக் காணாமையால், பிரிவுத் துயர், அரசியைப் பற்றி வருத்தத் தலைப்பட்டுவிட்டது.

காதல்நோய், கரைகாணாக் கடல்போல், அளப்பரிய தாகியவிடத்தும், அந்நோயின் சிறுகூற்றினையும் பிறர் அறியாவாறு, தன்னுள்ளே அடக்கித் தாங்கிக்கொள்ளும் நிறையுடைமை, கற்புடையார்க்குப் பொற்பாம்

என்பதை அறிவ.ாளாயினும், தனிமை தந்த துயர் மிகுதி, அந்நிறையையும் அழித்துவிட்டது.

நல்லோர்பால் நீங்காமல் நிற்கவேண்டிய நிறையழியும் நிலை வந்துற்றதும், அவள் விழித்துக் கொண்டாள். ஆழச் சிந்திக்கத் தொடங்கிவிட்டாள். பிரிவும் ஆடவர்க்கு ஓர் அழகு. அதிலும் அரசராகப் பிறந்தவர், இவ்வாறு போர் மேற்கொண்டு சென்றாலன்றி அரசு நடைபெறாது. வினையே ஆடவர்க்கு உயிர். அவ்வாறு ஆடவர் பிரிந்து சென்ற காலை, பிரியுங்கால் அன்னார் கூறிய சொல்லைத்தேறி ஆற்றியிருத்தல் மனையுறை மகளிர்க்கு மாண்பு. கருத்தொருமித்த காதலர் இருவர்க்குரிய இக் கடமைகளை நினைவு கூர்ந்தாள். அந்நினைவு தன்னைத் தானே தேற்றிக்கொள்ள உதவும் நல்ல துணையாய் அமைந்துவிட்டது. உடனே தன்னை ஒருமுறை பார்த்துக் கொண்டாள். கைவளை முதலாம் அணிகலன்கள் தாமே கழன்று உகலாயின. அவள் உள்ளத் துயர், அவள் உடலை அந்த அளவு மெலிவித்திருந்தது. நிறையுணர்வு வரப்பெற்ற உள்ளம், காதல் நோயைப் பிறர் உணராவாறு காத்துக் கொள்ளத் துடிக்கும் அந்நிலையில், கைவளைகளைக் கழலவிடுவதன் மூலம், உடல் மெலிவு தன், காதல் நோயைப் பலர் அறியப் பறைசாற்றுவது கண்டு துணுக்குற்றாள். அதை மறைக்க அவள் உடலுக்குப் பழைய உரத்தை அப்போதே ஊட்டிவிட முடியாது என உணர்ந்து கழன்று விழும் கைவளைகளை மேலே ஏற்றி இறுகச்செறித்துக் கொள்வதன் மூலம் மேனி மெலிவை மறைக்கமுயன்றாள்.

காதல் உணர்வு, தனிமை நினைந்து துயர் செய்ய, கற்புணர்வு, காதலன் பிரிவு அவன் கடமையாதல்போல், அவன் வருங்காறும் ஆற்றியிருக்க வேண்டியது தன் கடமையாம் என அறிவுறுத்த, இருவேறு உணர்வுகளுக்கிடையே அகப்பட்டு அவள் செய்வதறியாது

மயங்குவாளாயினள். அம்மயக்க நிலையால் ஏதும் செய்யமாட்டாத் தன் நிலையை நினைக்கவே, ஏக்கப் பெருமூச்சு விரைந்து வெளிப்படலாயிற்று. அம்பேறுண்ட மயில்போல் நடுங்கலாயினாள். ஆடையும் அணிகலன் களும் நெகிழ்வதும் அறியமாட்டாது படுக்கையில் வீழ்ந்து விட்டாள்.

காணும் இடமெங்கும் பொன்போலும் நவமணி களும், நெல்போலும் நவதானியங்களும் நிறைந்து சிறப்புற்ற, வானளாவ உயர்ந்த ஏழடுக்கு மாளிகையின் மேன்மாடத்துப் பள்ளியில் வீழ்ந்து கிடந்தாள். மாலைக் காலம் வரவே, பெருங்காற்றையும் எதிர்த்து நின்று எரியுமாறு பருத்த திரிகள் இட்டு ஏற்றிய பாவை விளக்குகள், அம்மாளிகையெங்கும் ஒளியூட்டிக் கொண்டிருந்தன. வேனிற் பருவத்துப் புதுமழை, பெரிய பெரிய தாரைகளாகவே கொட்டித் தீர்த்துவிடவே, அம்மாளிகையின் மேல்தளத்தில் கொட்டிய மழைநீர், அம்மாளிகையின் நாற்புறங்களிலும் உள்ள கூடல்வாய் வழியே உருண்டு வீழ்ந்து கொண்டிருந்தது. அவ்வருவி எழுப்பும் இனிய ஓசை, மயங்கிக் கிடப்பவள் காதில் புகுந்த அளவே, அது அவளை நினைவுலகிற்குக்கொண்டு வந்துவிட்டது. காதலன் குறித்துச் சென்ற கார்காலத் தொடக்கத்துப் புதுமழை என்பதாலும், நீண்ட வேனிற்பருவமெல்லாம், மழை காணாது வருந்திய உயிரும் உலகமும் மகிழச் செய்யும் முதல்மழை என்பதாலும், அது அவளை இன்பத்தில் ஆழ்த்தி விட்டது. அவள் தன்னை மறந்தாள். அருவியின் இன்ப ஓசையில் மெய்மறந்து போனாள்.

"காணாள் துயர் உழந்து
நெஞ்சு ஆற்றுப் படுத்த நிறைதபு புலம்பொடு
நீடு நினைந்து தேற்றியும், ஓடுவளை திருத்தியும்
மையல் கொண்டும், ஒய் என உயிர்த்தும்,

ஏ உறு மஞ்ஞையின் நடுங்கி இழை நெகிழ்ந்து
பாவை விளக்கின் பரூஉச் சுடர் அழல,
இடம் சிறந்து உயரிய எழுநிலை மாடத்து
முடங்குஇறை சொரிதரும் மாத்திரள் அருவி
இன்பல் இமிழிசை ஓர்ப்பனள் கிடந்தோள்"

(80-88)

[காணாள் - கணவன் வருகையைக் காணாதவளாய்; துயர் உழந்து - துன்பம் உற்று; நெஞ்சு ஆற்றுப்படுத்த - தன் நெஞ்சை அவன்பால் போகவிடுத்த; நிறைதபு - நிறைகெட்ட; புலம்பொடு - தனிமையால் நேர்ந்த வருத்தத்தோடு; நீடு நினைந்து - நாடு, வீடு நலம் கருதிக் காதலன் பிரிய வேண்டிய கடமையையும், அவன் பிரிந்தவழி ஆற்றியிருக்கவேண்டிய தன் கற்பையும் நீள நினைந்து பார்த்து. தேற்றியும் - தன்னைத் தேற்றிக் கொண்டும்; ஒடுவளை திருத்தியும் - கழலுகின்ற வளையலைக் கழலவிடாது திருத்திக் கொண்டும்; மையல் கொண்டும் - மறுபடியும் மயங்கியும்; ஒய் என உயிர்த்தும் - நெட்டுயிர்ப்புக் கொண்டும்; ஏவுறு மஞ்ஞையின் நடுங்கி - அம்பு ஏறுண்ட மயில்போல நடுங்கியும்; இழை நெகிழ்ந்து - ஆடை அணிகலன்கள் நெகிழப்பெற்றும்; பாவை விளக்கின் பரூஉச் சுடர் அழல - பாவை விளக்குகளில் இட்ட பருத்த திரிகள் பேரொளி காட்டி எரிய; இடம் சிறந்து - இடத்தால் சிறந்து; உயரிய - உயர்ந்த; எழுநிலை மாடத்து - ஏழடுக்கு மாளிகையில்; முடங்கு இறை - கூடல்வாய்களில்; சொரிதரும் - உருண்டு ஓடிவரும்; மாத்திரள் அருவி - பெரிய தாரைகளாகக் கொட்டிய மழை நீராகிய அருவி எழுப்பும்; இன்பல் இமிழ் இசை - இனியவாய், பலவாக இசைக்கும் இனிய ஓசையினை; ஓர்ப்பவள் கிடந்தோள் - கேட்டு மயங்கியவளாய்க் கிடந்தவளுடைய.]

கார்காலத் தொடக்கத்துப் பெருமழை, காதலனை எதிர்நோக்கிப் பள்ளியில் வீழ்ந்து கிடக்கும் அவ் விளையோள் வாழிடத்தில் மட்டும் பெய்யவில்லை. வினை முடிந்த நிறை நெஞ்சோடு சிறிதே கண்ணுறங்கும் அவன் காதலன் பாசறை கொண்டிருக்கும் காட்டகத்தும் பெய்தது. மழைவரவு, அவன் உறக்கத்தைக் கலைத்து விட்டது.

கண் விழித்துக் கொண்டான் காவலன் என்பதை அறிந்து கொண்டது அவன் நாற்படை. வெற்றிக்கு வழிவகுத்த பெருமைக்கு உரியது அப்படை. வென்று கைக்கொண்ட நிலப்பகுதி, பயன்தாராமை கண்டு, பகையரசரால் வெறுத்துக் கைவிடப்பட்ட களரோ, கல்லாங்குத்தோ. கானல் தேர் ஓடும் பெருமணல் பரப்போ அன்று. மாறாகச் செங்கரும்பும், செந்நெல்லும் செவ்வாழையும் விளைந்து வளம் கொழித்து, அப்பகை யரசரால் தம் உயிரினும் சிறந்ததாகப் போற்றப்படும் நன்செய் நிலப்பகுதிகளாம் அது. அத்துணை வளம் செறிந்தது ஆதலின், அதைப், பகைவர் எளிதில் இழந்து விடமாட்டார். தம் ஆற்றல் அனைத்தும் கொண்டு அதைக் காத்துக் கொள்ளவே முனைவர். அது அறிந்தே அதைக் கொள்ளக் கருதிய இளையோன், தன் நாட்டின் பல்வேறு பகுதிகளில் வைத்திருந்த படைகளையெல்லாம் ஒன்று திரட்டிக் கொண்டு சென்றிருந்தான். அவ்வாறு கொண்டுசென்றிருந்த அப்பெரும்படைகளனைத்தையும் போர்க்களத்தில் ஒரு முனையிலேயே பயன்படுத்தினா னல்லன். பகைவர் எப்பக்கமும் தப்பி ஓடி விடாதபடி, நாற்புறமும் வளைத்துப் போரிடலே வெற்றிக்கு வழியாகும் என்பது அறிந்து, அப்படையைப் பல்வேறு அணிகளாகப் பிரித்து பகைநாட்டின் பல்வேறு நிலைகளிலும் நிறுத்தி வைத்துப் போரிட்டான். போரில் வெற்றி கண்ட அளவே அவையெல்லாம் தத்தம் முனைகளிலிருந்து மீண்டு ஒன்று திரண்டு விட்டன.

அரசன் குறிப்பறிந்து பணிபுரியும் பக்குவம் பெற்றது அப்படை. வெற்றிகண்ட அரசன் உள்ளம், அவனை எதிர்நோக்கி மனையகத்தே காத்துக் கிடக்கும் அவள் மனையாள்பால் விரைந்தோடத் துடிக்கும் என்பதை அறிந்து ஊர் நோக்கிப் புறப்படத் தொடங்கி விட்டது. படை வரவினைக் காண்பவர், இது போர்தொடுத்துப் போகும் படையன்று. வெற்றிகொண்டு மீளும் படை என்பதை அறிந்து பாராட்டுவதற்கு ஏற்ப, போரில் கண்ட வெற்றி குறித்து உயர்த்திய கொடி முன்னே ஏந்திச் செல்லப்பட்டது. வெற்றிக் கொடி நாட்டி மீள்கிறது நாற்படை என்பதை, அப்படை வரவை நேரில் காண்பார் மட்டுமே அல்லாமல், அதைக் காண மாட்டாச் சேய்மைக்கண் உள்ளாரும், உணர்ந்து மகிழும் வகையில் அவர் காதுகளிலும் சென்று ஒலிக்கும், கொம்பும் சங்கும் போலும் இசைக் கருவிகள் முழங்கலாயின.

பாசறை விடுத்துப் புறப்பட்டுத் தன்னைக் கடந்து கொண்டிருந்த நாற்படைக்குக் கார்ப்பருவத்து மழை பெற்றுக் கலித்த முல்லைக்காடு, தன் காட்சி இன்பத்தால் களிப்பூட்டலாயிற்று. தன் வேர் பரவியிருப்பது, புது வெள்ளம்கொழித்த நுண்மணல் பகுதியாகவே, தழைத்து வளர்ந்து நெருங்க இலையீன்று கிடக்கும் காயா, அஞ்சன வண்ணம் காட்டும் அழகிய மலர்களை மலர்வித்திருந்தது. இளம் தளிர்களைக் கொண்ட கொன்றை மரங்கள், மாலை தொடுத்துத் தொங்க விட்டாற்போல் மலர்ந்துதொங்கும் கொத்துக்களிலிருந்து பொற்காசுகளைச் சொரிவதுபோல், மஞ்சள் வண்ண மலர்களைச் சொரிந்து மகிழ்வூட்டி நின்றன. வெண்காந்தள் செடிகளில், மலரும் பருவத்துப் பேரரும்புகள், அழகிய உள்ளங்கைகள் போல் மலர்ந்து அழகு காட்டலாயின. தோன்றிச் செடிகளின் அடுக்கடுக்கான இதழ்களைக் கொண்ட மலர்கள், குருதிச் செந்நிறம் காட்டிச் சிறப்பூட்டின.

இவ்வாறு நீலம், மஞ்சள், வெண்மை, செம்மை ஆகிய வண்ண வண்ண மலர்களை மலர்வித்துக் காடு வனப்பூட்ட, அக்காட்டை அடுத்திருந்த புன்செய் நிலங்களில், மழை வேண்டும் காலத்தில் வேண்டும் அளவே பெய்து துணை புரியவே, வளம்பெற விளைந்து கதிர்கள் முற்றித் தலை வணங்கிக் காட்சி தரும் வரகுக் கொல்லைகளில், தமக்கே இயல்பான மடப்பம் வாய்ந்த பிணைமான் கூட்டம், தம் மனதைக் கவருமளவு பேரழகு ஊட்டும், முற்றி முறுக்குண்ட கொம்புகளையுடைய கலைமான் கூட்டத்தோடு, மகிழ்ச்சி மிகுந்து ஆடித் திளைக்கலாயின.

நாட்டின் வளத்தையும், காட்டின் வனப்பையும் கண்ணுற்ற அரசனும், அவன் நாற்படையும், இவற்றிற் கெல்லாம் காரணமாய் அமைந்தது, காலத்தில் பெய்த மழையன்றோ, என்ற உணர்வு எழவே, அம்மழைக்கு நன்றி தெரிவிப்பான் வேண்டி, அது வழங்கும் வானத்தை நோக்கினர். ஆங்குக் கொண்டல் கொண்டலாக வெண்முகில் கூட்டம், வரிசை வரிசையாக எதிரே விரைவது கண்டனர். அக்காட்சி அது கார்காலத் தொடக்கமாம் ஆவணித் திங்கள் என்பதை அறிவுறுத்தி விட்டது. அவ்வளவுதான், மனையில் காத்திருக்கும் அவள், இனியும் பொறாள். இப்போதே அவண் அடைதல் வேண்டும் என்ற எண்ணம் ஆட்டம் போடத் தொடங்கிவிட்டது.

உள்ளம்போல் உதவும் நல்லியல்புடையனவாதலின், இயல்பாகவே விரைந்து ஓடுவன தேரில் பூட்டிய குதிரைகள், அதேபோல், விரைந்து வீடடைய வேண்டின் புதுவழி காணவும் தயங்காதவன் தேர்ப் பாகன். அதனால், தேர் இயல்பாகவே விரைந்து கொண்டுதான் இருந்தது என்றாலும்; போரில் பகைவரின் நாற்படை வளைத்துக் கொள்ளும் நிலையிலும், அப்படைகள் அதிர ஓடிப் பணிபுரியும் திறம்

வாய்ந்த தேரில் அமர்ந்துவரும் அரசன், மேலும் விரைந்து போகவேண்டும் என எண்ணவே, கோல் கொண்டு தாக்கிக், குதிரைகளை மேலும் துரத்தலாயினர். வள்ளியம்காடு முதலாம் காடுகள் எல்லாம் பின்னிட, குதிரைகள், காற்றெனக் கடுகி விரைந்து ஓடி, மனையை அடைந்து வருகையை அகத்துள்ளாள் அறிந்து மகிழும் வகையில், அருவியோசையில் தன் துயரை ஒருவாறு மறந்து மயங்கிக் கிடந்தவள் காதுகள் கேட்டு அகமகிழ ஆரவாரக் குரல் எழுப்பி நின்றன.

''அஞ்செவி நிறைய ஆலின; வென்று பிறர்
வேண்டு புலம் கவர்ந்த ஈண்டுபெரும் தானையொடு
விசயம் வெல்கொடி உயரி வலன் ஏர்பு
வயிரும் வளையும் ஆர்ப்ப, அயிர
செறிஇலைக் காயா அஞ்சனம் மலர,
முறி இணர்க் கொன்றை நன்பொன் காலக்,
கோடல் குவிமுகை அங்கை அவிழத்,
தோடு ஆர் தோன்றி குருதி பூப்பக்,
கானம் நந்திய செந்நிலைப் பெருவழி
வானம் வாய்த்த வாங்கு கதிர் வரகின்
திரிமருப்பு இரலையொடு மடமான் உகள,
எதிர்செல் வெண்மழை பொழியும் திங்களின்
முதிர்காய் வள்ளியம்காடு பிறக்கு ஒழிய
துனைபரி துரக்கும் செலவினர்,
வினைவிளங்கு நெடுந்தேர் பூண்ட மாவே''

(89-103)

[வென்று-போரில் வெற்றி கண்டு; பிறர் - பகை அரசர்கள்; வேண்டுபுலம் - விரும்பும் அவர் நிலங்களை; கவர்ந்த - கைப்பற்றிக் கொண்ட; ஈண்டுபெரும் தானை யொடு - ஒன்று திரண்ட பெரிய படையோடு; விசயம்

வெல்கொடி உயரி - வெற்றியால் உயர்த்தப்பட்ட வெற்றிக் கொடி ஏந்தி; வலன் நேர்பு - பெற்ற வெற்றிக்குப் பொருந்த; வயிரும் வளையும் ஆர்ப்ப - கொம்பும் சங்கும் முழங்க; அயிர - நுண்மணலிடத்தே வேர்விட்டிருக்கும்; செறி இலைக் காயா - நெருங்கின இலைகளைக் கொண்ட காயா; அஞ்சனம் மலர - அஞ்சனம் போல் மலரவும்; முறி இணர்க் கொன்றை - இளம் தளிர்களையும் மலர்க் கொத்துக்களையும் உடைய கொன்றை; நன்பொன்கால - நல்ல பொற்காசுகள் போலும் மலர்களைச் சொரியவும்; கோடல் குவிமுகை - வெண்காந்தளின் மலரக் குவிந்த பேர் அரும்புகள்; அங்கை அவிழ - அழகிய உள்ளங்கைபோல் மலரவும்; தோடுஆர் தோன்றி - இதழ்கள் நிறைந்த தோன்றி; குருதி பூப்ப - உதிரம் போலும் செந்நிறம் வாய்ந்த மலர்களைப் பூப்பவும்; கானம் நந்திய - காடு செழித்த; செந்நிலப் பெருவழி - செம்மண் பரவிய நிலத்தின் ஊடே செல்லும் பெருவழியில்; வானம் வாய்த்த - மழையை வேண்டும் காலத்தில் வேண்டும் அளவே பெற்ற; வாங்கு கதிர் வரகின் - பால் ஏறி மணிகள் முற்ற கனம் தாங்க மாட்டாது தலை சாய்ந்த கதிர்களைக் கொண்ட வரகுக் கொல்லையில்; திரிமருப்பு இரலையொடு - முறுக்குண்ட கொம்புகளையுடைய கலைமான்களோடு; மடமான் உகள - மடப்பத்தையுடைய மான்கூட்டம் துள்ளித் துள்ளி ஆடித் திளைக்க; எதிர்செல் வெண்மழை - இனிமேல் பெய்தற்குச் செல்லும் வெண்முகில்; பொழியும் திங்களில் - மழை பெய்யும் ஆவணித் திங்களில்; முதிர்காய் - முற்றி முதிர்ந்த பல்வேறு காய்களைக் கொண்ட; வள்ளியம்காடு - வள்ளியங்காடு; பிறக்கு ஒழிய - பின் ஆகும்படி; துனை பரி - விரைந்து

**செல்**லும் குதிரையை; துரக்கும் செலவினர் - மேலும் விரைந்து செலுத்தும் வழிப் பயணம் உடையவராய் வந்தவருடைய; வினைவிலங்கு நெடுந்தேர் - போர்க் களத்தில் தன் திறம் எல்லாம் விளங்குமாறு போரிட்ட, நெடிய தேரில். பூண்டமாவே பூட்டப்பட்ட குதிரைகள்; அஞ்செவி - மயங்கிக் கிடப்போனுடைய அழகிய செவிகள்; நிறைய-நிரப்பும்படி; ஆலின-ஆரவாரித்தன.]

## முல்லை நிலத்தவர்களும், நிகழ்ச்சிகளும்

இதுவரை, முல்லைநிலத்து ஆயர், ஆய்ச்சியர், தலைவியாம் அரசமாதேவி, அவளைப் பேணி வளர்க்கும் செவிலி, தலைவனாம் அரசன், அவன் காட்டுப் பாசறை, அவன் நாற்படை, அந்நாற்படையுள் ஒன்றான யானைகள், அவற்றை ஏவல் கொள்ளும் பாகர்; தேர், அதில் பூட்டப் பெறும் குதிரை, தேரோட்டி; பாசறையுள் அரசன் இருக்கும் தனிஅறை, அவ்வறையுள், அரசனைக் காத்து நிற்கும் மெய்க்காப்பாளர், வேல் பணிபுரியும் ஊமை மிலேச்சர் அவ்வளவுக்குள் விளக்கேற்றி நிற்கும் மகளிர், அந்நாட்டு ஆற்றங்கரையில் தவம் மேற்கொண்டிருக்கும் அந்தணர், ஆகியோர் இயல்புகளைக், கார்காலத்து மாலைமழை என்ற தலைப்பின் கீழ், தனித்தனியே வைத்துப் பார்த்தோம்.

இனி, இவர்கள் எல்லோரும், தத்தம் பணிகளைத் தனித்தனி ஆற்ற. அவர்களிடையே நடைபெற்ற தொடர்பான நிகழ்ச்சிகளைத் தொடுத்துக் காண முயற்சிப்பாம். அக்காட்சி நலம், முல்லைப்பாட்டின் மூலத்தைத் தனித்தனியாக நிறுத்தி, அதற்குத் தரப் பட்டிருக்கும் பொருள் விளக்கங்களை, நிரலே வரிசைப் படுத்தித் தந்தால். முல்லைநிலத்தவர்தம் வாழ்க்கைப் படக்காட்சி, இடையிறவுபடாது தொடர்ந்தே காட்டப் படும். அது செய்வாம், இனி.

அகன்ற பெருநிலப் பரப்பை உடைய உலகத்தை, வளைத்துக் கொண்டு, சக்கரப் படையோடு, வலம்புரிச் சங்கையும் ஏந்திய, திருமால், ஆனிரைகாக்கும் பெருமை மிக்க தன்மைகளில், மூன்றடிமண் கொடுத்ததை உறுதி செய்ய, மாவலி மன்னன், தன் கையில் வார்த்த தண்ணீர் வழிய, அக்கணமே, வானளாவ உயர்ந்து விட்ட

திருமாலைப்போல, அலைகள் ஓயாது எழும், குளிர்ந்த கடலில் நீர்குடித்து, எழுந்து, மலையுச்சிகளைக் குறியாகக் கொண்டு வலமாக எழுந்து, விரைந்து ஓடும். கார்மேகக் கூட்டம், பெரிய மழையைப் பெய்து ஓய்ந்த, தனித்து இருக்கும் மகளிரை வருத்தும், புன்மையும், சிறுமையும் வாய்ந்த மாலைக் காலத்தில், பெருமைக்குரிய குடும்பத்தில் வந்த முதுபெரும பெண்டீர் சிலர், அரிய காடிவல் நலமும், நனிமிகப் பழமை வாய்ந்தது என்ற பெருமையும் வாய்ந்த, தங்கள் மூதூரின் புறநகர்க்குச் சென்று, நாழியில் கொண்டு சென்ற நெல்லோடு, யாழ் இசைபோல் இனிமையாக ரீங்காரம் செய்யும் நல்ல இனத்தைச் சேர்ந்த வண்டுக் கூட்டம், மலர்ந்ததும் தேன் உண்ணும் வேட்கையால் ஒன்று திரண்டு வந்து மொய்க்க, அரும்புகள் மலர்களாக மலர்ந்த, நறுமணம் வீசும் முல்லை மலர்களைத் தூவி, கைகூப்பி வணங்கி, நற்சொல் கேட்டு நின்றனர்: அந்நிலையில், சிறிய கயிற்றால் கட்டப் பட்ட, இளம் பசுங்கன்றின் தாய்ப்பசு பிரிவினால் நேர்ந்த மிக்க துயரினால், நிலையின்றித் தவிப்பதைப் பார்த்த, அம்மனைக்கு உரிய ஆயர்மகள், குளிரால் நடுங்கும் தன்தோளைத், தன் இரு கைகளாலும் அணைத்துக்கொண்டவாறே வந்து, "தம் கையில் கோல் கொண்டிருக்கும் ஆயர், பின்னால் இருந்து துரத்திவர, உன்னுடைய தாய்ப்பசு இப்போதே வந்துவிடும்" எனக் கூறிக் கன்றிற்கு அமைதி கூறி நின்றாள்.

நற்சொல்கேட்க வந்த முதுமகட்கு ஆய்மகள், "இப்போதே வந்துவிடும்" என்ற சொல் மிகவும் நல்ல சொல்லாகப் படவே, விரைந்து வீடடைந்து, பிரிவுத்துயரால் வருந்திக்கிடக்கும் இளமகளாம் அரச மாதேவிபால் சென்று, "வருவர்" என ஆய்மகள் கூறிய சொல், நல்ல, விரிச்சியாம்; ஆகவே, பகை நாட்டு மண்ணை வெற்றிகொண்டு, அப்பகையரசர்கள் பணிந்து வந்து திறை கொடுக்க, அவற்றையும் கைக்கொண்டு, நம் தலைவராம் அரசர் வருவது உறுதி; ஆகவே, கரிய

நிறம் வாய்ந்த காரிகை நல்லாளே! உன் பிரிவுத்துயரைக் கைவிடுவாயாக'' எனப்பல முறை எடுத்துக்கூறவும், அவள், அவள் உரைகளால், அமைதி காணமாட்டாளாய், மாறாக, மேலும் கலக்கமே கொள்ள, பூப்போலும், மைதீட்டப்பட்ட கண்கள், துளித்துளியாக, முத்து முத்தாக நீரைச் சொரியலாயின.

முல்லை நிலத்தலைவியாம் அரச மாதேவியின் நிலை, இதுவாக, காட்டாறுகள் சூழ்ந்த அகன்ற பெரிய பகைவர்க்குரிய குறுங்காட்டில், சேய்மைக் கண்ணும், சென்று மணம் நாறும்பிடவம் முதலான பல்வேறு செடிகளால் ஆன தூறுகள் பலவற்றை அழித்துக் கட்டப் பெற்றுள்ள, வேட்டுவப் படைவீரர்களின் இருக்கையாம் சிறுசிறு வாயில்களைக் கொண்ட, அப்பகையரசர்களின் சிற்றரண்கள் பலவற்றை அழித்துவிட்டு, அக்காட்டிடத்தில், தன் நாற்படை இருக்க, காட்டில் உள்ள முட்செடிகளை நாற்புறமும் நட்டு ஆக்கிய மதிலைக் காவல் மிகும்படி வளைத்துக்கொண்ட, அதன் நடுவே, அமைந்த பரந்து அகன்ற பாசறைக்கண், தழையால் வேயப்பட்ட கூரைகளைக் கொண்ட குடில்கள், வரிசை வரிசையாக ஒழுங்குபட அமைக்கப் பெற்ற தெருக்களின், நாற்சந்திகளில், காவலாக காவலாக, நிறுத்தப் பட்டிருந்த, மதநீர் விளையும் கதுப்பினையும், சிறு கண்களையும் உடைய யானை, தனக்கு உணவாக, தன் முன்னே போடப் பட்டிருக்கும், ஓங்கி வளர்ந்து வளம்பெற்ற கரும்பு, நெற்கதிர்களோடு நெருங்கிக் கலந்து கட்டப் பெற்ற, அந்நெல் வயலிலேயே வளர்ந்து கிடந்த காவி, இனிய அதிமதுரத்தழை, ஆகிய இவற்றில் எதையும் உண்ணாது, மாறாக, அவற்றை எடுத்துத் தன் நெற்றியைத் துடைத்துக் கொண்டும், கூரிய முனையினை உடைய தந்தங்கள்மேல், தம் துதிக்கைகளை மடித்துப்போட்டுக் கொண்டும் நிற்க, உணவுண்ண மறுத்து நிற்கும் அவ்யானைகளை

உண்பிப்பான் வேண்டி, இரு கூறாக்க வைத்த முள்ளினை உடையவாகிய குத்துக் கோலால் குத்தியும், வடமொழியால் ஆன ஏவல் சொற்களால் பலமுறை ஆணையிட்டும், யானைகளைப் பழக்கும் அறிவல்லது வேறு அறிவினைத் தரவல்ல கல்வி எதையும் கற்காத பாகர்கள், அக்களிறுகள், தம்முன் போடப்பட்டிருக்கும் அவ்வுணவுப் பொருட்களைக் கவளம் கவளமாக எடுத் துண்ணும்படி செய்ய, தன் ஆடையை, அழுக்குப் போகத் தோய்த்துப் பின்னர்க் காவிக்கல் கலவையில் தோய்த்து எடுத்து உடுத்திக்கொள்வான் வேண்டி, அதன் ஈரம் போக, தவவேடம் உடைய பார்ப்பான், தன்கை முக்கோலை நட்டு அதன்மீது போட்டிருப்பது போல், அறவழி ஆற்றும் போரில், தோற்றுப் பின்னிடாமைக்குத் துணைபுரிவனவாய விற்படைகளை நட்டு, அவற்றின் மீதே, அம்புத்தூறாணிகளை மாட்டி, கால்களைக் கூடமாக நட்டு, கயிறு கொண்டு வலித்துக்கட்டிய கூடாரங்களில், அழகிய பூவேலைப்பாடு அமைந்த வேற்படைகளை நட்டு, அவற்றினிடையே கேடயங்களை, வரிசை வரிசையாகப் பிணித்து, இவ்வகையால், வளைந்த விற்படையால் ஆன அரணே அரணாக அமைந்த, அக்காட்டுப் பாசறைக்கண் பல்வேறுபட்ட பெரும் படைகளின் நடுவே, நெடிய குத்துக்கோல்களை நாட்டி, அவற்றில் திரைச்சீலைகளை மதில் போல் வளைத்துக் கட்டி, அதற்கு உள்ளாகவே. அரசனுக்கு என, வேறு ஒரு தனி இருக்கையினை ஆக்கிவிட அவ்விருக்கையுள், சிறு சிறு தொடிகளை அணிந்த கைகளையும், கூந்தல் கிடந்து அழகு செய்யும் சிறிய முதுகினையும் உடைய, இரவைப் பகலாக்கச் செய்யவல்ல மேறொளி வீசும், உறுதியான கைப்பிடியினையும்; கூர்மையால் ஒண்மை யினையும் உடைய குறுவாளை, வரிந்து கட்டிக் கொண்டிருக்க மேலணியாம் கச்சுக்குள் பாதுகாப்புக் காகக் கட்டிக்கொண்டிருக்கும் பணிமகளிர், கைகளில் எண்ணெய் உமிழும் சுரைகளை உடையராய், பாவை

விளக்குகளில், நீண்ட திரியிட்டு ஏற்றிய விளக்குகள். அவியும் தொறும் கொளுத்திக் கொண்டிருந்தனர்.

நீண்ட நாக்கினை உடையனவும், தெள்ளிய ஓசையை உடையனவுமாகிய மணியின் ஓசை அடங்கிய நள்ளிரவிலும், மோசிமல்லிகை மலர்ந்து, எப்போதும் அசைந்து கொண்டேயிருக்கும் கொடிகள் படர்ந்திருக்கும், காட்டுச்சிறு தூறுகள், மெத்தென வீசும் காற்றுக்கு ஆடுவதுபோல, வெண்துகிலால் தலைப்பாகை கட்டி, உடலைச் சட்டை இட்டுப் போர்த்திக்கொண்டு இருக்கும், தளர்ந்த நடையினையும், அதே நேரத்தில் உயர்ந்த ஒழுக்கத்தினையும் உடைய, ஆண்டால் மிகமிக முதிர்ந்த மெய்க்காப்பாளர்கள், அரசனுக்குக் காவலாக வலம் வந்து கொண்டே இருப்பர்.

கழிந்த நாழிகை இவ்வளவு; கடக்க வேண்டிய நாழிகை இவ்வளவு; இப்போதைய நாளிகை இவ்வளவு என்ற நாழிகை அளவை அறிந்து, தாம் கூறும் நாழிகைக் கணக்கினைச் சிறிதும் பிழைபட்டுப் போகாவாறு துல்லியமாக அறிந்து காணவல்ல நாழிகைக் கணக்கர், தொழுதற்குக் கூப்பிய கையினை உடையராய், அரசன் முன் சென்று நின்று, அவனை வாழ்த்திய பின்னர், அலை வீசும் கடல் சூழ்ந்த அப்பேருலகில், பகைவெல்ல படையோடு வந்து பாடிக் கொண்டிருக்கும் வேந்தே! குறுநீர்க்கன்னல் காட்டும் நாழிகை, இப்போது இத்துணையவாம். என்பதை அவ்வப்போது எடுத்து இயம்பிக் கொண்டே இருப்பர்.

குதிரையை அடித்துத்துரத்த பயன்படுத்தப்பெறும் வாராகிய சம்மட்டி, வளைந்து கிடக்கின்ற, மடங்கி மடங்கிக் கிடந்து, சிறிதே புடைத்துத் தோன்றுமாறு, இறுகக்கட்டின சட்டை அணிந்து, காண்பார்க்கு அச்சம் ஊட்டும் தோற்றத்தினையும், இயற்கையிலேயே வலுவோடு கூடிய உடலினையும், தறுகண்மையினையும் உடைய, யவன நாட்டுக் கைவினைஞர்கள், புலிச்சங்கிலி

தொங்கவிட்டுக் கண்ட, ஒப்பனை செய்யப்பட்ட, மாட்சிமை மிக்க, நல்ல இல்லத்தில், அழகிய சிறந்த மாணிக்கமாகிய விளக்கை எரிய வைத்து, வலிய கயிற்றினால், திரையை வளைத்து ஆக்கிய, அரசன், ஐம்பெருங்குழுவோடிருந்து ஆய்வதற்காக ஓர் அறை, அவன் தனித்து இருப்பதற்கான ஓர் அறை என்ற இரு அறைகளாகப் பிரிக்கப்பட்ட அறைகள் இரண்டில், அரசன் இருக்கும் உள் அறையுள், தம் உள்ளத்தே எழும் உணர்வுகளை வாய்திறந்து சொல்லால் உரைக்க மாட்டாமல், குறிப்பினாலேயே உரைக்கக் கூடியவனாகிய ஊமையரும், சட்டை இட்டவரும் ஆகிய, அரபு நாட்டிலிருந்து தமிழகம் வந்து வாழும் மிலேச்சராகிய துருக்கர். அரசர்க்குப் பணிபுரிந்து கிடந்தனர்;

காட்டுப் பாசறைக்கண், யானைப் பாகரும், யவனர்களும், மெய்க்காப்பாளரும், ஏவலாளரும், விளக்கேற்றும் மகளிரும், மிலேச்சரும், அவ்வாறு பணி புரிந்திருக்க, தனக்கென வகுத்திருந்த தனி அறையில் உள்ள, பள்ளியில் அமர்ந்திருந்த அரசன், பெரும் படையோடு, பகைவர் மேல்செல்லும் போரை விரும்பும் நிலையில், அப்போரை எப்படியெல்லாம் நடத்தலாம் என்ற ஆய்வுச்சிந்தனையிலேயே ஆழ்ந்து விட்டமையால், கண்ணுறக்கம் கொள்ளாமலே இருந்து. நடந்துமுடிந்த போரில், பகைவர் எறிந்த வேல் பாய்ந்ததனால், புண் பெற்று அப்புண் தரும் நோய்க் கொடுமையால், தத்தம் காதற்பிடியானைகளை மறந்துவிட்ட களிற்றுப்படை களின் நிலையையும், பகையரசன் நாற்படையைச் சேர்ந்த யானைகளின், நீண்ட பெரிய, துதிக்கைகள், அடியுண்ட, மலைப்பாம்புகள் துடிப்பது போல் துடிக்குமாறு, வெட்டுண்டு வீழ்ந்து கிடக்கப் பண்ணி, தேன்துளிக்கும், தம் தலைமாலைக்குச் சிறப்பளிக்கும் நல்ல வெற்றி பெற்று விட்டு, ஆனால், அவ்வெற்றிக்கு விலையாக, உயிர் இழந்து, செஞ்சோற்றுக்கடன் தீர்த்த காலாட்படைப் பெருவீரர் செயல்களை எண்ணியும்,

பகைப்படை வீரர்கள் ஏவிய, கூரிய முனையினையுடைய அம்புகள். உடலுக்குக் காவலாகப் போர்த்து விடப்பட்ட தோல் பரிசினையும் துளைத்துவிட்டு, உடலுள் ஆழமாக அழுந்தி விட்டமையால், புல் உண்ணு வதையும் வெறுத்துவிட்டு, செவி சாய்த்து வீழ்ந்துகிடக்கும் குதிரைப் படைகளைச் சிந்தித்தும், கவலை மிகுதியால், ஒரு கையைப் பள்ளியில் ஊன்றிக் கொண்டு, ஒருகை முடியொடு, கைக்கடகமும் சேருமாறு, தலையைத் தாங்கிப் பிடித்துக் கொண்டு, சென்ற நாள் போர் நிகழ்ச்சிகளையும், நாளை நடத்த இருக்கும் போர்த்திட்டங்களையும் சிந்தித்து, ஒரு முடிவுக்கு வந்து விட்டமையால், பகைவர்கள் மீது, ஏவ, தேர்ந்தெடுத்த படைக்கலன்களைக் கொண்ட, தன் வெற்றிக் கையின் வலிய விரல் முனைகளால், எக்காலத்தும், எப்போர்க் களத்தும் தனக்குப் புகழையே சேர்க்கும், புகழ் வாய்ந்த வஞ்சின மாலையாம், தன் தலை மாலையை, நாளை நடைபெறப் போகும் போரிலும், அப்புகழே நிலைக்கத் துணை நிற்பாயாக எனக் கூறுவான் போல், திருத்தி அணிந்து கொண்டு, பகையரசர்கள், தத்தம் அரணகத்தே இருந்தனராயினும், இவனால், நமக்கு எந்நேரத்தில் தோல்வி கிட்டிவிடுமோ என அஞ்சுதற்குக் காரணமாய், தன் வெற்றி முரசு முழங்கும் அப்பாசறையில், நேற்றைய வெற்றிகண்ட மன நிறைவாலும், நாளைய போரில், எப்படியும் வெற்றியே பெற்றுவிடுவோம் என்ற மன உறுதிப் பாட்டாலும், சிறிதே இன்துயில் கொண்டான்.

காட்டுப் பாசறைக்கண், காவலன் நிலை இதுவாக, அரண்மனையில், அரசமாதேவி, கணவன் வருகையைக் காணாக் காரணத்தால், துன்பம் உற்று, தன் நெஞ்சை அரசன்பால் போகவிடுத்து விட்டு, தனிமையால் நேர்ந்த வருத்தத்தோடு, நாடு, வீடு நலம் கருதிக், காதலன் பிரிய வேண்டிய அவன் கடமையையும், அவன், அத்தகு நல்ல கடமைகளை நிறைவேற்றுவான் வேண்டி,

பிரிந்தவழி, ஆற்றியிருக்க வேண்டிய தன் கற்பின் கடமையையும் பலகால் எண்ணிப் பார்த்து, தன்னைத் தேற்றிக் கொண்டும், தன் துயரத்தையும் அத்துயரால் தன் உடல் மெலிந்து விட்ட நிலைமையும் காணும் அவ்வூரார், அதுகொண்டு, தன் கணவனைப் பழிக்க விடாது காக்க வேண்டுவது தன் கடமை என்பதால், தன் உடல் தளர்ச்சி, அவர்களுக்குப் புலப்படாவாறு, தான் மெலிந்து விட்டமையால், தாமே கழன்று விழும் தன் கைவளையல்களை, மேலும் முன்கையில் ஏற்றி இறுகச் செறித்தும், மறுபடியும் காதல் உணர்வு மிகவே மீண்டும் மயங்கியும், பெருமூச்சு எறிந்தும், அம்பேறுண்ட மயில்போல் ஒடுங்கிக் கிடந்தாள்.

அரசமாதேவியின் நிலை இதுவாக, "கிழவி நிலையே வினை இடத்து உரையார்: வென்றிக் காலத்து விளங்கித் தோன்றும்" (தொ. பொ. கற்பு: 45) என்ற விதிக்கு ஏற்ப, காட்டுப் பாசறைக்கண்ணதான, தனி அறையில் சிறந்த கண்ணயர்ந்திருந்த, அரசனுக்கு, காதலி நினைவு வந்துற்றது: அவ்வளவே, பகையரசர்கள் விரும்பும் அவர் நிலங்களைக் கைப்பற்றிக் கொண்ட, ஒன்று திரண்டிருந்த பெரிய படையோடு, வெற்றி கொண்டு உயர்த்தப்பட்ட, வெற்றிக் கொடி ஏற்றப் பெற்று, பெற்ற வெற்றிக்குப் புகழ்பாடும் கொம்பும் சங்கும் முழங்க புறப்பட்டு, நுண்மணலிடத்தே வேர் விட்டிருக்கும், அடர்ந்த இலைகளைக் கொண்ட காயா, அஞ்சன வண்ண மலர்களை மலர்த்தவும், இளம் தளிர் களையும் மலர்கொத்துக்களையும் உடைய கொன்றை, பொன்போலும் நிறம் வாய்ந்த நல்ல மலர்களைச் சொரியவும், வெண்காந்தள்கள், மலரும் பருவம் பெற்றுக் குவிந்து கிடக்கும் தம் பேரரும்புகளை, அழகிய உள்ளங்கைபோல் மலர்த்தவும், இதழ்கள் செறிந்த தோன்றி, செங்குருதி நிறம் வாய்ந்த மலர்களைப் பூப்பவும், காடுகள் செழித்துக் கிடக்க, அக்காட்டின் ஊடே செல்லும், செம்மண் பரவிய பெரு

வழியில், தான் வேண்டும் மழையை, வேண்டும் காலத்தில், வேண்டும் அளவே பெற்ற காரணத்தால், பால் ஏறப் பெற்று, முற்றிய மணிகளைக் கொண்ட கதிர்களின் பாரம் தாங்கமாட்டாது தலை சாய்ந்து கிடக்கும் வரகுக் கதிர்கள் விளைந்து கிடக்கும் கொல்லைகளில், முறுக்குண்ட கொம்புகளையுடைய கலைமான்களோடு, மடப்பம் பொருந்திய பெண்மான் கூட்டங்கள், துள்ளித் துள்ளி ஆடித்திளைக்க, மேலும் பெய்தற்கு விரைந்து ஓடும் வெண்முகிற்கூட்டம், மழை பெய்யும் ஆவணித் திங்களில், முற்றி முதிர்ந்த பல்வேறு காய்களைக் கொண்ட, வள்ளியம் காடு என்ற பெயர் பூண்ட காடு, பின்னால் நிற்கும்படி, இயல்பாகவே விரைந்து ஓடவல்ல குதிரையை, மேலும் விரைந்து ஓடப்பண்ணுவான் வேண்டி, வழிப்பயணம் உடையவராய் வந்த அரசனுடைய போர்க்களத்தில் தன் திறம் எல்லாம் விளங்குமாறு போரிட்ட நெடிய தேரில் பூட்டிய குதிரைகள், அரண்மனையகத்தே, மயங்கிக் கிடக்கும் அரசமாதேவியின் அழகிய காதுகள், இன்ப வெள்ளத்தால் நிரம்பும்படி குரல் எழுப்பி ஆரவாரித்தன.

''முல்லை நிலத்தவர்களும், நிகழ்ச்சிகளும்'' என்ற தலைப்பின் கீழ, இதே தலைப்புள்ள, முந்தைய அதிகாரத்தில், 1) கார்காலத்து மாமழை [1-6]; 2) நற்சொல் கேட்கும் மகளிர் [7-11] 3) ஆயர்மகள் ஆறுதல் உரை [12-16] 4) பெருமுது பெண்டிர் ஆறுதல் உரையும் அவள் நிலையும் [17-23] 5) பாசறை அமைப்பு [24-42] 6) பாசறைக்கண் அரசன் தனிஇருக்கை [43-49] 7) மெய்காப்பாளர், [50-54] 8) நாழிகைக் கணக்கர் [55-58] 9) யவனர், மிலேச்சர் [59-66] 10) பாசறைக் கண் அரசன் நிலை. [67-80] 11) தலைநகர் மாளிகையில் அரசமாதேவி நிலை. [80-88] 12) அரசன் வினை முடித்து வீடு வந்து சேர்ந்தது [89-103], ஆகியோர் நிலைகளைத் தனித்தனித் தலைப்பின் கீழ் விளக்கி

இருப்பினும், அந்நிகழ்ச்சிகளை நிரலே எடுத்துக் கூறுவது நலம் என உணர்ந்து, அவ்வாறே உரைத்திருப்பது போல், முல்லைப்பாட்டை, அவ்வாறு 12 கூறுகளாகப் பிரித்துக்காட்டியிருப்பதற்கு மாறாக, அப்பாட்டின் முழுவடிவத்தைக் காட்டுதே முறையாம் என்பதால், இத்தலைப்பில் பாட்டின் முழுவடிவத்தையும் தந்து உள்ளேன்.

நளந்தலை யுலகம் வளைஇ, நேமியொடு
வலம்புரி பொறிந்த மாதாங்கு தடக்கை
நீர்செல நிமிர்ந்த மாஅல் போலப்
பாடிமிழ் பனிக்கடல் பருகி வலனேர்பு

கோடுகொண் டெழுந்த கொடுஞ்செல வெழிலி
பெரும்பெயல் பொழிந்த சிறுபுன் மாலை
அருங்கடி மூதூர் மருங்கிற் போகி
யாழிசை யினவண் டார்ப்ப நெல்லொடு
நாழி கொண்ட நறுவீ முல்லை

அரும்பவிழ் அலரி தூஉய்க்கை தொழுது
பெருமுது பெண்டிர் விரிச்சி நிற்பச்
சிறுதாம்பு தொடுத்த பசலைக் கன்றின்
உறுதுயர் அலமர னோக்கி யாய்மகள்
நடுங்குசுவ லசைத்த கையள் கைய

கொடுங்கோற் கோவலர் பின்னின் றுய்த்தா
இன்னே வருகுவர் தாய ரென்போள்
நன்னர் நன்மொழி கேட்டன மதனால்
நல்ல நல்லோர் வாய்ப்புள் தெவ்வர்
முனைகவர்ந்து கொண்டதிறையர் வினைமுடித்து

வருதல் தலைவர் வாய்வது நீநின்
பருவர லெவ்வங் களைமா யோயெனக்
காட்டவுங் காட்டவுங் காணாள் கலுழ்சிறந்து
பூப்போ லுண்கண் புலம்புமுத் துறைப்பக்
கான்யாறு தழீஇய அகனெடும் புறவிற்

சேணாறு பிடவமொடு பைம்புத லெருக்கி
வேட்டுப்புழை யருப்ப மாட்டிக் காட்ட
இடுமுட் புரிசை ஏமுற வளைஇப்
படுநீர்ப் புணரியிற் பரந்த பாடி
உவலைக் கூரை யொழுகிய தெருவிற்

கவலை முற்றங் காவ னின்ற
தேம்படு கவுள சிறுகண் யானை
ஓங்குநிலைக் கரும்பொடு கதிர்மிடைந் தியாத்த
வயல்விளை யின்குள குண்ணாது நுதல்துடைத்
தயினுனை மருப்பிற்றங் கையிடைக் கொண்டெனக்

கவைமுட் கருவியின் வடமொழி பயிற்றிக்
கல்லா இளைஞர் கவளங் கைப்பக்
கற்றோய்த் துடுத்த படிவப் பார்ப்பான்
முக்கோ லசைநிலை கடுப்ப நற்போர்
ஓடா வல்வில் தூணி நாற்றிக்

கூடங் குத்திக் கயிறுவாங் கிருக்கைப்
பூந்தலைக் குந்தங் குத்திக் கிடுகுநிரைத்து
வாங்குவில் அரணம் அரண மாக
வேறுபல் பெரும்படை நாப்பண் வேறோர்
நெடுங்காழ்க் கண்டங் கோலி யகநேர்பு

குறுந்தொடி முன்கைக் கூந்தலஞ் சிறுபுறத்து
இரவுபகற் செய்யுந் திண்பிடி யொள்வாள்
விரவுவரிக் கச்சிற் பூண்ட மங்கையர்
நெய்யுமிழ் சுரையர் நெடுந்திரிக் கொளீஇக்
கையமை விளக்க நந்துதொறு மாட்ட

நெடுநா வொண்மணி நிழத்திய நடுநாள்
அதிரல் பூத்த ஆடுகொடிப் படாஅர்
சிதர்வர லசைவளிக் கசைவந் தாங்குத்
துகின்முடித்துப் போர்த்த தூங்க லோங்குநடைப்
பெருமூ தாள ரேமஞ் சூழப்

பொழுதளந் தறியும் பொய்யா மாக்கள்
தொழுது காண்கையர் தோன்ற வாழ்த்தி
எறிநீர் வையகம் வெலீஇய செல்வோய்நின்
குறுநீர்க் கன்னல் இனைத்தென் றிசைப்ப
மத்திகை வளைஇய மறிந்துவீங்கு செறிவுடை

மெய்ப்பை புக்க வெருவருந் தோற்றத்து
வலிபுணர் யாக்கை வன்கண் யவனர்
புலித்தொடர் விட்ட புனைமா ணல்லில்
திருமணி விளக்கங் காட்டித் திண்ஞாண்
எழினி வாங்கிய ஈரறைப் பள்ளியுள்

உடம்பி னுரைக்கு முரையா நாவின்
படம்புகு மிலேச்சர் உழைய ராக
மண்டமர் நசையொடு கண்படை பெறாஅது
எடுத்தெறி யெஃகம் பாய்தலிற் புண்கூர்ந்து
பிடிக்கணம் மறந்த வேழம் வேழத்துப்

பாம்புபதைப் பன்ன பருஉக்கை துமியத்
தேம்பாய் கண்ணி நல்வலந் திருத்திச்
சோறுவாய்த் தொழிந்தோர் உள்ளியுந் தோறுமிபு
ளைந்நுனைப் பகழி மூழ்கலிற் செவிசாய்த்
துண்ணா துயங்கு மாசிந் தித்தும்

ஒருகை பள்ளி யொற்றி யொருகை
முடியொடு கடகஞ் சேர்த்தி நெடிதுநினைந்து
பகைவர்ச் சுட்டிய படைகொ ணோன்விரல்
நகைதாழ் கண்ணி நல்வலந் திருத்தி
அரசிருந்து பனிக்கு முரசு முழங்கு பாசறை

இன்றுயில் வதியுநற் காணாள் துயருழந்து
நெஞ்சாற்றுப் படுத்த நிறைதபு புலம்பொடு
நீடுநினைந்து தேற்றியும் ஓடுவளை திருத்தியும்
மையல் கொண்டு மொய்யென வுயிர்த்தும்
ஏவுறு மஞ்ஞையி னடுங்கி யிழைநெகிழ்ந்து

பாவை விளக்கிற் பருஉச்சுட ரழல
இடஞ்சிறந் துயரிய எழுநிலை மாடத்து
முடங்கிறைச் சொரிதரு மாத்திர ளருவி
இன்ப லிமிழிசை யோர்ப்பனள் கிடந்தோள்
அஞ்செவி நிறைய ஆலின வென்றுபிறர்

வேண்டுபுலங் கவர்ந்த ஈண்டுபெருந் தானையொடு
விசயம் வெல்கொடி யுயரிவல னேர்பு
வயிரும் வளையும் ஆர்ப்ப வயிர
செறியிலைக் காயா அஞ்சன மலர
முறியிணர்க் கொன்றை நன்பொன் காலக்

கோடற் குவிமுகை யங்கை யவிழத்
தோடார் தோன்றி குருதி பூப்பக்
கான நந்திய செந்நிலப் பெருவழி
வானம் வாய்த்த வாங்குகதிர் வரகின்
திரிமருப் பிரலையொடு மடமா னுகள

எதிர்செல் வெண்மழை பொழியுந் திங்களின்
முதிர்காய் வள்ளியங் காடுபிறக் கொழியத்
துனைபரி துரக்குஞ் செலவினர்
வினைவிளங்கு நெடுந்தேர் பூண்ட மாவே

# சொல் முடிபு—சிறு விளக்கம்

மூதூர் மருங்கில் போவதும், நெல்லொடு, முல்லை மலர் தூவுவதும், கைதொழுவதும், விரிச்சி நிற்பதும் ஆகிய தொழில்களை, நச்சினார்க்கினியர், வேந்தன், போர் மேற்கொண்டு செல்லும்போது, எடுத்த வினையின் விளைவு அறிவான் வேண்டி விரிச்சி நிற்பாரின் செயல்களாகக் கொண்டு, அதற்காக, ''அருங்கடி மூதூர் மருங்கிற் போகி'' என்ற எட்டாவது வரிக்கண் வரும் ''போகி'' என்பதன் முன்னர், ''நல்ல நல்லோர் வாய்ப்புள்'' என்ற பதினெட்டாவது வரியில் வரும் ''நல்லோர்'' என்பதனைக் கொண்டு வந்து நிறுத்தி, ''நல்லோர்'' என்பதற்குப் "படைத் தலைவர் ஏவலால் நற்சொல் கோடற்கு உரியவர்'' எனப்பொருள் கூறியுள்ளார்.

மூதூர் மருங்கில் போவதும், நெல்லோடு முல்லை மலர் தூவுவதும், கைதொழுவதும், விரிச்சி நிற்பதும் ஆகிய அத்தொழில்கள் எல்லாம், தலைவியின் பிரிவாற்லாத்துன்பம் எப்போது தீரும் என்பதை அறிய விரும்பிய பெருமுது பெண்டிர் செயல்களே ஆதலின், நச்சினார்க்கினியர் கொண்டிருக்கும் சொல் முடிபும், சொற் பொருளும் பொருந்தா எனக் கொள்க.

''பெரும் பெயல் பொழிந்த சிறுபுன்மாலை'' என்ற ஆறாவது வரிக்கண் வரும் ''மாலை'' என்ற சொல், பெருமுது பெண்டிர் விரிச்சி கேட்கச் சென்ற காலத்தை உணர்த்தி ''மாலையில் போகி'' எனப் போகிய என்ற வினை நிகழ்ந்த காலத்தை உணர்த்தும் வினையடையாகவும், நச்சினாக்கினியர், அதை எண்பத்தைந்தாவது வரிக்கண் வரும் ''பாவை விளக்கு'' என்பதன் முன்

நிறுத்தி "மாலைக் காலத்துப் பாவை விளக்கு" எனப் பெயரடையாகக் கொண்டிருப்பது தேவையற்ற இடமாற்றமாம்.

பதினேழாவது வரியில், ஆயர் மகள் "இன்னே வருகுவர்' எனக் கூறிய சொற்களின் நலச் சிறப்பின் மிகுதியை உணர்த்த, "மீமிசை" என்பது போல் "நன்னர்" என்ற சொல், "நன்மொழி" என்ற சொல்லைச் சிறப்பித்து "நன்னர் நன்மொழி" என, அதன் முன் வருவதே இயல்பும் இனிமையுமாகவும், நச்சினர்க்கினியர் "நன்னர்" என்ற இச்சொல்லை, அடுத்த வரியில் வரும் "வாய்ப்புள்" என்ற சொல்லின் முன் கொண்டுபோய், "நன்னர் வாய்ப்புள்" என நிறுத்தியிருப்பது இயல்புடையதாகத் தோன்றவில்லை.

பதினெட்டாவது வரியில் வரும் "நல்ல" என்ற சொல் "நல்ல ஆயின கேட்ட நற்சொல்" எனப்பொருள் தந்து, "நல்ல வாய்ப்புள்" என வினை முடித்து நிற்பதே இயல்புடைதாகவும், நச்சினார்க்கினியர், அதை இருபதாவது வரியில் வரும் "வருதல் தலைவர் வாய்வது" என்ற தொடரின் பின் கொண்டுபோய் நிறுத்தி, "அவர் அங்ஙனம் வினை முடித்து வருதல் நமக்கு இல்லறம் நிகழ்ற்குக் காரணமாதலின் நல்ல காரியம்" எனப்பொருள் கூறியுள்ளார். அவ்வாறு கொண்டதால் "நன்னர் வாய்ப்புள்" என்ற தொடர், வினை முடிவு பெறமாட்டாமல் "நின்று வற்றுதல்" என்ற குற்றத்திற்கு உள்ளாகித் தனித்துவிடப்படுவதை, அவர், உணர்ந்திலர்.

இருபத்தொன்றாவது வரியில் வரும் "பருவரல் எவ்வம்" என்பது, கார்ப்பருவம் வந்துறவும் கணவன் வாராமை கண்டு அடைந்த மனத்தடுமாற்றமாகவும், நச்சினார்த்கினியர், அது கணவன் செலவுக் குறிப்பு அறிந்து கொண்ட வருத்த மிகுதியால் வினைமேற்சேரல்

கணவர்க்கு வேண்டுவது என்பதை உணராத்தடுமாற்றம், எனப்பொருள் கொண்டு, அகத்திணைத் தலைவிக்கு அழியாப் பெரும்பழி சூட்டியுள்ளார்.

''பிரிதல் ஆடவர்க்குப் பெருமை, அவர் மீண்டும் வரும்காரும் ஆற்றியிருத்தல் மனையுறை மகளிர்க்கு மாண்பு'' என்பதே "காட்டவும் காட்டவும்'' என்ற தொடரில் எடுத்துக் கூறப்பட்ட கருத்தாகவும், அது போலவே அது எடுத்துக் காட்டியவரும் பெருமுது பெண்டிரே ஆகவும், நச்சினார்க்கினியர் ''வினை மேற் சென்ற வழி வந்துறும் புகழும், வினைமேற்செல்லாது வீட்டகத்தே அடங்கியுருந்தவழி வந்துறும் மானக்கேடும் பகையரசிரின் பேராற்றலுமே'', அத்தொடரில் எடுத்துக் கூறப்பட்ட பொருளாகவும், அதுபோலவே, அது எடுத்துக் காட்டியவன் தலலவனாகவும் கொண்டுள்ளார். காட்டிய பெருமுது பெண்டிர் என்ற வினைமுதல், மூலத்தில் இடம் பெற்றுள்ள வினைமுதல் என்பதை உணராது, மூலத்தில் இல்லாத தலைவன் என்ற வினை முதலைத் தேடி அலைவது தேவையற்றது.

மாலை (6) போகி (7) தொழுது (10) பெண்டிர் விரிச்சி நிற்ப (11) ஆய்மகள் (13) வருகுவர் தாயர் என்போள் (16) நன்மொழி கேட்டனம் (17) நல்ல நல்லோர் வாய்ப்புள் (18) வருதல் தலைவர் வாய்வது (20) எவ்வம் களைமாயோய் (21) எனக் காட்டவும் காட்டவும் காணாள் கலுழ் சிறந்து (22) கண்புலம்பு முத்து உறைப்ப (23) என வருவது, ஆற்றொழுக்கில் அமைந்து, இயல்பான சொல் முடிபு ஆகவும், நச்சினார்க் கினியர் நல்லோர்(18) போகி (7) தொழுது (10) விரிச்சி நிற்ப (11) (அவர் கேட்ட) நன்னர் (17) வாய்ப்புள் (18) ஆய்மகள் (13) என்போள் (16) நன்மொழி கேட்டனம் (17) (அதன் கருத்தால்) தலைவர் வருதல் வாய்வது (20) நல்ல (18) மாயோய் எவ்வம்களை (21) என வேண்டியவாறெல்லாம் கொண்டு கூட்டியும் ''அவர்

கேட்ட'', ''அதன் கருத்தால்'' என்பனபோலும் மூலத்தில் இடம்பெறாத சில தொடர்களை, இடை இடையே இணைத்தும் சொல்முடிவு செய்திருப்பது இயல்பாக இல்லை.

இருபத்தெட்டாவது வரிக்கண் வரும் ''படுநீர்ப் புணரியிற் பரந்தாபாடி'' என்ற தொடரால் குறிப்பிடப் படும் பாசறையும், எழுபத்தொன்பதாவது வரிக்கண் வரும் ''முரசு முழங்கு பாசறை'' என்ற தொடரால் குறிப்பிடப்படும் பாசறையும், வினைமேற் சென்ற வேந்தன் அமைத்துக் கொண்ட காட்டுப்பாசறை ஒன்றையே குறிப்பனவாகவும், நச்சினார்க்கினியர் அவ்விரு தொடர்களும் இருவேறு பாசறைகளைக் குறிப்பதாகக் கொண்டு இருபத்தெட்டாவது வரிக்கண் வரும் ''படுநீர்ப் புணரியிற் பரந்தபாடி'' என்ற தொடரால் குறிக்கப்படும் பாசறையைப், பகையரசர் பாசறையாக மாற்றிவிட்டது மட்டுமல்லாமல், போரில் புண்பட்ட வேழம் குதிரை வீரர் ஆகியோர் நிலை குறித்துச் சிந்திக்கும், வினைமேற்சென்ற வேந்தன் செயல் களையும், பகையரசர் செயலாக மாற்றி, மருள் கொண்டுள்ளார்.

எழுபத்தேழு எழுபத்தெட்டு வரிகளாக வரும் ''நோன்விரல் நகை தாழ் கண்ணி நல்வலம் திருத்தி'' என்ற தொடர்க்கண் காணப்படும் விரலின் செயல், கண்ணியைத் திருத்தியதேயாகவும், நச்சினார்க்கினியர், அதன் செயல், பகைவரை வெட்டி, வெற்றிகோடலாகக் கொண்டு, அச்சொல்லை எண்பத்தொன்பதாவது வரிக்கண் வரும் ''வென்று'' என்ற சொல்லின் முன்கொண்டுபோய் நிறுத்திவிட்டு மூலத்தில் இல்லாத ''வெட்டி'' என்ற சொல்லை, ''விரல்'' ''வென்று'' என்ற இரு சொற்களுக்கும் இடையே நுழைத்து இடர்ப்பட்டுள்ளனர்.

இவ்வாறு ஒரே பாசறையை, இருவேறு பாசறைகளாகக் கொண்டு விட்ட காரணத்தால், பாசறை நிலை குறித்த சொல் முடிவு ''பரந்தபாடி (2) காவல்நின்ற (30) யானை (31) இளையர் கவளம் கைப்ப (36) பெரும் படை நாப்பண் (43) வேறு ஓர் அகம்நேர்பு (44) விளக்கம் மாட்ட (49) மூதாளர் ஏமம் சூழ (54)மாக்கள் குறுநீர்க்கன்னல் இனைத்து என்று இசைப்ப (58) நல் இல்லில் (62) பள்ளியுள் (64) மிலேச்சர் உழையராக (66) கண்படை பெறாது (67) வேழம் உள்ளியும் (69) ஒழிந்தோர் உள்ளியும் (72) மாசிந்திந்தும் (74) நெடிது நினைந்து (76) கண்ணி நல்வலம் திருத்தி (78) அரசிருந்து பனிக்கும் முரசு முழங்கு பாசறை (79) இன்துயில் வதியுநன் (80) ''என இயல்பாக முடியும், சொல் முடிபைக் கைவிட்டு, நச்சினார்க்கினியர்'' பரந்தபாடியில் (28) அரசிருந்து (29) வேழத்தை (69) உள்ளியும் (72) மாவைச்சிந்தித்தும் (74) ஒழிந்தோரை உள்ளியும் (72) நினைந்து (76) பாசறையில் (79) பெரும்படை நாப்பண் வேறோர் (43) அகம் நேர்பு (44) நல் இல்லில் (62) கன்னல் இனைத்து என்று இசைக்க (58) பள்ளியில் (64) இளையர் கவளம் கைப்ப (36) அரையர் மாட்ட (49) மூதாளர் ஏமம் சூழ (54) மிலேச்சர் உழையர் ஆக (66) நடுநாள் (50) கண்படை பெறாது (67) விரலால் (77) வென்று (89) கண்ணிவலம் திருத்தி (78) என முன்னுள்ள வரிகளைப் பின்னாகவும். பின்னுள்ள வரிகளை முன்னாகவும் வேண்டியவாறெல்லாம் சிதைத்துச் சொல் முடிவு செய்துள்ளார்.

என்பதாவது வரிக்கண் வரும் ''பாசறை இன் துயில் வதியுநன் காணாள்'' என்ற தொடரில் வரும் ''துயில் வதியுநன்'' என்ற தொடருக்கு, வினைமேற் சென்று வினை முடித்து அக்களிப்பு மிகுதியால் பாசறைக்கண் தனித்துத் துயில் கொள்வோன் என்றும், ''காணாள்'' என்ற சொல்லுக்கு, வினை முடித்த பின்னரும் குறித்துச் சென்ற கார்ப்பருவ வரவு கண்டும் வரக் காணாதவள்

என்றும் கொள்வதே பொருந்தும் பொருளாகவும், நச்சினார்க்கினியர், அந்தொடருக்குவினைமேற்கொண்டு செல்வதற்கு முனபு, தன் மனையில் தலைவியுடன் இன்துயில் கொள்வோன் என்றும், அச்சொல்லுக்குத் தன்னிடத்தே தங்குகின்றவனை இனிய துயில் கொள்ளு தலைக் காணாளாய் என்றும், பொருள் கூறி, உறங்கும் இடத்தையும், காலத்தையும், காணாமைக்காம் காரணத்தையும் மாற்றிப் போட்டு மயக்கியுள்ளார்.

அதுபோலவே பெருமுது பெண்டிர் (11) காட்டவும் காட்டவும் காணாள் (22) கண்புலம்பு முத்துறைப்ப (2°) பரந்தபாடியில் (28) ஈரறைப் பள்ளியுள் (64) இன்துயில் வதியுநன் காணாள் துயர் உழந்து (80) புலம்பொடு (81) தேற்றியும் திருத்தியும் (82) உயிர்த்தும் (83) நடுங்கி நெகிழ்ந்து (84) மாடத்து (86) அருவி (87) இசை ஓர்ப்பனள் கிடந்தோள் (88) அஞ்செவி நிறைய (89) தேர் பூண்டமா (103) ஆலின (89) என்பதே பாட்டு முழுமைக்குமானா இயல்பொடு கூடிய சொல் முடிபாக வும், நச்சினார்க்கினியர். தன்னிடத்தே வதிகின்றவனை இன்துயிலைக் காணாளாய் (80) புலம்பாலே (81) வளை திருத்தியும் (82) உயிர்த்தும் (83) நெகிழ்ந்து (84) கண்முத்து உறைப்ப (35) துயர் உழந்து (80) தேற்றியும் திருத்தியும் (82) வற்புறுத்திப் பிரிதல் வேண்டும் எனக் கருதிக் காட்டவும் காட்டவும் காணாதவள் (22) பெருமுது பெண்டிர் (11) எவ்வங்களை எனக் கூற (21) அதுகேட்டு நீடு நினைந்து (82) சிறுபுன் மாலையில் (6) இசை ஓர்ப்பனள் கிடந்தோள் (88) செவிநிறைய (89) தேர்பூண்டமா (103) ஆலின (89) என முன்னுக்குப் பின் முரணான சொல்முடிபு செய்துள்ளார்.

பத்துப்பாட்டு, எட்டுத்தொகையில், கலித்தொகை, ஐம்பெரும் காப்பியத்தில், சீவகசிந்தாமணி ஆகியவற்றின் செய்யுட் பொருளைத், தெளிவாக உணரச், சிறந்த உரை

வகுத்த நச்சினார்க்கினியர், செய்யுட்களில் சொற்களைக் கிடந்தவாறே கொண்டு பொருள் கூறியிருப்பாராயின், அவர் உரை, பிற உரை ஆசிரியர்களின் கண்டனத்திற்கு உள்ளாகாத தனிசிறப்புடையதாக நன்கு மதிக்கப் பட்டிருக்கும். ஆனால் செய்யுட்களில் சொற்களைக் கிடந்தவாறு பொருள் கொள்ளாது, சொற்களைத் தாம் விரும்பியவாறெல்லாம் எங்கெங்கோ கொண்டு சென்று அதற்கேற்ப பொருள் கொள்வதில் பேரார்வம் காட்டும் இயல்புடையவர் நச்சினார்க்கினியர்.

தாம் உரை எழுத மேற்கொண்ட நூல்களில் அவர் இயல்பாகக் கையாளும்முறை இது என்றாலும், முல்லைப் பாட்டு உரையில் அவர் இம்முறையினைக் கையாண்ட தற்குக் காரணம், முல்லைப்பாட்டிற்குரிய துறைப் பொருளை, அவர் பிழையாகக் கொண்டதே ஆகும்:

கார்ப்பருவத் தொடக்கத்தே வந்து சேர்வேன் என உறுதி கூறிப் பிரிந்து சென்ற தலைவன், கார்ப்பருவம் வந்து எய்திய பின்னரும் வாராமை கண்டு, அதுகாறும் அவன் சொல்வழி ஆற்றியிருந்த தலைவி, ஆற்றாமைக்கு வருந்து நிலைகண்டு, பெருமுது பெண்டிர் விரிச்சி கேட்டு வந்து, காரணம் பலகாட்டி "தலைவர் வருதல் உறுதி" எனக் கூறவும், ஆற்றாமைத் துயர் தணியாதாகக் கண்ணீர் உகுத்து நின்ற அந்நிலையில், ஆற்றியிருத்தலே அறிவுடைமை என உள்ளுணர்வு உணர்த்த, தன் துயரைப் பிறர் காணாவாறு மறைத்துக் கொண்டு, அருவி இன்னிசை மயக்கத்தில் தன்னை மறந்து கிடந்தவள் காதுகளில், புகுந்து ஒலிக்குமாறு, தலைவன் தேரில் பூண்ட குதிரைகள், அவள் மனை முன்றிற்கண் வந்து நின்று, குரல் எழுப்பியதை, அவள் தோழியர் கூறி அகமகிழ்ந்தது என்பதே, இம் முல்லைப்பாட்டில் துறையாகும்:

ஆனால் நச்சினார்க்கினியர், முறையான இத்துறைப் பொருளை ஏற்றுக் கொள்ளாது, தலைவன் வினை வயிற் பிரியக் கருதியதனைக், குறிப்பால் உணர்ந்து ஆற்றாளாய தலைவியது நிலைகண்டு, அவன் வற்புறுப்பவும் உடம்படாளாக, அவன் அவள் அறியாவாறே பிரிந்து சென்று விட்டானாக, தன்னிடத்தே வதிகின்றவன் இன்துயிலைக் காணாளாய், அவள் துயர் உழந்தவழி, பிரிதல் ஆடவர் கடன், என்பன போலும் காரணம் பல காட்டவும், கருத்தில் கொள்ளாளாக, பெருமுது பெண்டிர் விரிச்சி கேட்டுவந்து, தலைவர் வருதல் உறுதி, துயர் களைக என, அதுகேட்டு அருவி இன்னிசை கேட்டுக் கிடந்தோள் காது நிறைய, குதிரைகள் குரல் எழுப்பியதை அவள் தோழியர் கூறி மகிழ்ந்தது என்பதாக வேறு துறை கொடுத்துள்ளார்.

அவ்வாறு துறை கொண்டதற்கு அவர் கூறும் காரணம் இது: ''இங்ஙனம் பொருள் கூறாமல் தலைவியது இரக்க மிகுதி கண்டு பெருமுது பெண்டிர் விரிச்சி கேட்டுவந்து ''தலைவர் வருதல் வாய்வது; நின் எவ்வம் களை'' என்று பல்காலும் ஆற்றிவிக்கவும், ஆற்றாளாய்த் துயர் உழந்து, புலம்பொடு தேற்றியும் திருத்தியும், மையல் கொண்டும், உயிர்த்தும் நடுங்கி நெகிழ்ந்து கிடந்தோள் எனப் பொருள் கூறியக்கால், நெய்தற்குரிய இரங்கல் பொருட்டன்றி, முல்லைக்குரிய இருத்தற் பொருட்டு ஆகாமை உணர்க. அன்றியும், தலைவன் காலம் குறித்தல்லது பிரியான் என்பதாலும், அவன் குறித்தகாலம் கண்டால் தலைவிக்கு வருத்தம் மிகும் என்பதாலும், அது பாலையாம் என்பதாலும், அவ்வாற்றாமைக்கு இரங்கல் நிகழ்ந்தால் நெய்தலாம் என்பதூஉம் நூல் கருத்தாதல் உணர்க.

நச்சினார்க்கினியர் கூறும் துறையினையே இப்பாட்டின் துறையாகக் கொண்டக்கால் எழும் முரண்பாடுகளை முதற்கண் விளக்கிவிட்டு, ஏனையோர்

கூறும் துறை குறித்தும் அவர் எழுப்பும் தடை குறித்தும் பின்னர் ஆராய்வோம்.

தலைவனைக் காணாளாய்த் தலைவி துயர் உற்றவழி, ''பிரிதல் ஆடவர் கடன்'' என்பன போலும் காரணம் பல காட்டவும் கருத்தில் கொள்ளாதபோது, பெருமுது பெண்டிர் விரிச்சி கேட்டு வந்து ''தலைவர் வருதல் உறுதி; நீ நின் வருத்தம் நீங்குக'' என, அது கேட்டு அவள் நீடு நினைந்து ஆற்றியிருந்த வழி என்பதே இப்பாட்டின் துறைப் பொருளாம் எனக் கொண்டால், பெருமுது பெண்டிர் விரிச்சி கேட்டது தலைவன் பிரிவின் போது ஆதல் வேண்டும். ஆனால், அவர்கள் விரிச்சி கேட்டது மழை பொழிந்த மாலைப் போதில் என்கிறது செய்யுள். அவ்வாறாயின், அது கார்காலத்து மாலைப் போதாதல் வேண்டும். அங்ஙனம் கொண்டால் தலைவன் பிரிந்து சென்றது கார்காலம் என்றாகிவிடும். தலைவன் திரும்பி வருவதாகக் கூறிச்செல்லும் காலந்தான் கார்காலமேயல்லாது, அவன் பிரிந்து செல்லும் காலம், கார்காலம் ஆகாது. ஆகவே, பெருமுது பெண்டிர் விரிச்சி கேட்டது, தலைவன் பிரிவின் போது அன்று; மீளும் போதே ஆகும். ஆகவே, அவர்கள் விரிச்சி கேட்டது பிரியும்போது எனக் கொண்டு, அதற்கேற்ப கூறும் துறை, முல்லைப் பாட்டின் துறையாகாது.

மேலும், வர இருப்பது நல்லதா கெட்டதா என்பதை அறிந்துகொள்ள மாட்டாது கவலை மிகும் நேரத்தில்தான் விரிச்சி கேட்டு நிற்பர். கார்காலத் தொடக்கத்தே வருவதாகக், காலம் குறித்துச்சென்றவன், அக்காலம் வந்துறவும், வாராமை கண்டு, காரணம் அறிய மாட்டாது கலக்கம் மிக்க வழி, விரிச்சி கேட்க வேண்டிவருமேயல்லாது, அவன் பிரியக் கருதிய வழி, விரிச்சி கேட்க வேண்டியிராது. ஆகவே பெண்டிர் விரிச்சி கேட்டு நின்றது, கணவன் பிரிவிற்கு உடன்

ப்டாதவளை உடன்படுத்த உறுதி மொழி அளிக்க, பிரிவின் தொடக்கத்தில் எனக்கொண்டு அதற்கேற்ப அமைத்துக் கொண்ட துறை, உண்மை துறை ஆகாது.

ஓதல், உறுபொருள் தேடல், உற்றுழி உதவல் போலும் முயற்சி குறித்துத் தலைவன் பிரிவு மேற்கொள்ள, பிரிவுத் துயர் ஆற்றமாட்டாது தலைவி அவன் பிரிவிற்கு உடன்படாதபோது, தலைவனும் தோழியும் பிரிவால் உளவாகும் பெருமை, பிரியா வழி உளவாம் சிறுமைகளை விளங்கக் கூறிப், பிரிய வேண்டிய இன்றியமையாமையினை வற்புறுத்தி அவளை உடன் படுத்திய பின்னரே பிரிவு நிகழும்.

பிரிவின்கண் தலைவன் கூற்று நிகழும் இடம் குறித்துக் கூறும் தொல்காப்பியம்—

''நாளது சின்மையும், இளமையது அருமையும்,
தாளாண்பக்கமும், தகுதியது அமைதியும்,
இன்மையது இளிவும், உடைமையது உயர்ச்சியும்
அன்பினது அகலமும், அகற்சியது அருமையும்,
ஒன்றாப் பொருள்வயின் ஊக்கிய பாலினும்
வாயினும் கையினும் வகுத்த பக்கமொடு
ஊதியம் கருதிய ஒரு திறத்தானும்,
புகழும் மானமும் எடுத்து வற்புறுத்தலும்''
—தொ, பொ. 41.

எனப், பிரிவின் இன்றியமையாமை குறித்துத் தலைவன் விளக்கும் பல்வேறு பொருட் காரணங்களைப் பட்டியல் போட்டுக் காட்டுவது உணர்க.

இவ்வாறு தலைவியைப் பல்லாற்றானும் தேற்றி, அவள் உடன்பாடு பெற்றுப் பிரிவதே பண்பும் மரபும் ஆம். ஆகவும், தலைவன் தலைவியறியாவாறே பிரிந்து விட்டானாகவும், அவள் தன்னோடு இருந்தவ

னுடைய இன்துயிலைக் காணாது கலங்கினாளாகவும் நச்சினார்க்கினியர் கூறுவது அகத்திணை மரபொடு முரணிய குற்றம் உடையதாம்.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழக வெளியீடாக 1954ல் வெளியிடப்பட்ட, சங்கத் தமிழ்ப் புலவர் வரிசை என்ற வரிசையில் ஒன்பதாவது வரிசையான "வணிகரிற்புலவர்" என்ற நூலில், முல்லைப்பாட்டு ஆசிரியர், காவிரிப்பூம்பட்டினத்துப் பொன்வாணிகனார் மகனான நப்பூதனார் பற்றிய வரலாற்றுக் குறிப்பில், முல்லைப் பாட்டின் துறையாக, நச்சினார்க்கினியர் கூறிய துறையையே நானும் கூறியுள்ளேன் என்பது சங்க இலக்கியங்களுக்கு நச்சினார்க்கினியர் கொள்ளும் உண்மை. பொருளே உச்சிமேல் கொள்ளும் பொருளாம் என்ற உணர்வுடைய பருவத்தே கூறியது அது. ஆகவே, அது ஏற்புடையதாகாது.

பிரிவுத் துயர்க்காம் காரணம் நிலந்தோறும் வேறுபடும் என்றாலும், தலைவன் பிரியத் தனித்திருக்கும் நிலையில் அப்பிரிவுத் துயர் பொறாது வருந்துவது ஐந்நிலைத் தலைவிகளுக்குமே உரிய ஒன்று.

குறிஞ்சியில், தலைவன் வரும் மலைக்காட்டு வழியின் கொடுமை, அவ்வழியில் இரவிடை வரும் தலைவனுக்கு நேரலாம் கேடுகளை நினைந்து வருந்துவாள்.

பாலையில், தலைவன் செல்லும் வழியில் கோடையின் கொடுமை நினைந்தும், ஆங்குக் காணலாம் விலங்குகளின் காதல் காட்சிகள் காரணமாகத் தன்னை நினைந்து, வினை மேற்கொள்வது விடுத்து, மீண்டு விடுவனோ என அஞ்சியும் வருந்துவாள்.

மருதத்தில், தலைவன் சென்றிருக்கும் இடம் பரத்தையர் இல்லமாதல் அறிந்து வருந்துவாள்.

நெய்தலில், குறித்துச் சென்ற காலம் வரவும் தலைவன் வாராமை கண்டு வருத்தம் மிக்கு, நிலவோடும், அன்றில் முதலாம் உயிர்களோடும் வாய்விட்டுப், பிறர் அறியப் புலம்புவாள்.

முல்லையில், குறித்துச் சென்ற காலம் வரவும், தலைவன் வாராமை கண்டு வருந்துவாள். அவ்வருத்தம் பிறர்க்குப் புலனாகா வண்ணம், தன் மனத்திற் குள்ளாகவே மருகி மாழ்குவாள்.

பிரிவாற்றாத தலைவி வருந்தும் பொருள் பொதிந்த முல்லைத் திணை குறித்த செய்யுட்கள், சங்க இலக்கியங் களில் எண்ணில உள. எடுத்துக் காட்டுக்கு ஒருசில.

''காடுகவின் எதிரக் கனைபெயல் பொழிதலின்
பொறிவரி இனவண்டு ஆர்ப்பப் பலவுடன்
நறுவீ முல்லையொடு தோன்றி தோன்ற
வெறியேன்றன்றே வீகமழ் கானம்;
எவன்கொல் மற்றவர் நிலை என மயங்கி
இகுபனி உறைக்கும் கண்ணொடு இனைபாங்கு
இன்னாது உறைவி'' —அகம் : 164.

''அரசு பகை தணிய முரசுபடச் சினைஇ
ஆர்குரல் எழிலி கார் தொடங்கின்றே;
அளியவோ அளியதாமே, ஒளி பசந்து
மின்னிழை நெகிழச் சாஅய்த்
தொன்னலம் இழந்த என் தடமென்தோளே''
—ஐங்குறுநூறு : 455.

''ஏதில பெய்மழை காரென மயங்கிய
பேதையங்கொன்றைக் கோதைநிலை நோக்கி
எவன்இனி மடந்தை நின்கவிழ்வே?''
ஐங்குறுநூறு : 462

"புனை இழை நெகிழச் சாஅய் நொந்துநொந்து
இனையல் வாழியோ இகுளை!"

—ஐங்குறுநூறு : 467

காட்டுவளம் காணச் சென்ற இடத்தில் கண்ணகி, தாம்காணக் கணவனோடு வானாடு புகுந்த காட்சியைக், குன்றக் குறுவர் கூறியகாலை, உடனிருந்த சாத்தன் கண்ணகி வரலாற்றை விளங்கக் கூறக் கேட்ட செங்குட்டுவன், "தன்னுயிர் கொண்டு கணவன் உயிர் தேடுவாள்போல் உயிர்விட்ட பாண்டிமாதேவி, கணவன் கள்வனல்லன் என்பதை நிலைநாட்டி, ஆராயாது கொன்ற பாண்டியன் உயிர் இழந்துபோகவும், அவன் மாநகர் எரியுண்டு போகவும் செய்து, கணவனோடு வானாடடைந்த கண்ணகி ஆகிய இருவரில், பாராட்டிற் குரியவர் யாவர்?" என்று கேட்க, "பாண்டிமாதேவி வானாடு அடைந்து விட்டாள்; நம்நாடு வந்தடைந்த கண்ணகி நல்லாளுக்குக் கோயில் எழுப்பி, வழிபாடு ஆற்ற வேண்டும் என்று கூறி, சிலை அமைக்கக் கல் கொணர்வான் வேண்டி கணவனை வடநாடு போக, விரும்பி வழிவிடுத்த சேரன்மாதேவி, சென்ற கணவன் வருகை நீட்டித்தவழிப் பிரிவுத் துயர்மிக்கு உறக்கமும் இழந்து வருந்துவாள், பிரிவுத் துயர் எத்துணைதான் கொடியதாயினும், அதைப் பிறர்காண விடுதல், இல்லற மகளிர்க்கு இயல்பாகாது என்ற உணர்வு வரப்பெற்றதும், செங்குட்டுவன் தலைநகர் வந்தடைந்த செய்தியைச் செவிலியரும், கூனும், குறளும் போலும் குற்றேவலரும் வந்து தெரிவிக்கும்வரை, தன் துயர் மறந்திருக்க, குறிஞ்சிப்பண், உழவர் பாட்டு, குழலிசை, குரல் இசை போலும் பல்வேறு இசையில் மயங்கிக் கிடந்த நிகழ்ச்சியை இளங்கோவடிகளாரும் பாடியுள்ளார்.

'உயிருடன் சென்ற ஒருமகள் தன்னினும்
செயிருடன் வந்தஇச் சேயிழை தன்னிலும்

நன்னுதல் வியக்கும் நலத்தோர் யாரென,
மன்னவன் உரைப்ப, மாபெரும் தேவி,
காதலன் துன்பம் காணாது கழிந்த
மாதரோ பெருந்திரு உறுக; வானகத்து
அத்திரம் நிற்க; நம் அகனாடு அடைந்த இப்
பத்தினிக் கடவுளைப் பரசல் வேண்டும்என''

—25: காட்சிக்காதை: 107-114.

''இணைபுணர் எகினத்து இளமயிர் செறித்த
துணையணைப் பள்ளித் துயிலாற்றுப் படுத்தாங்கு
எறிந்து களம்கொண்ட இயல்தேர்க் கொற்றம்
அறிந்துரை பயின்ற ஆயச் செவிலியர்,
தோள்துணை துறந்த துயர் ஈங்கு ஒழிகெனப்,
பாட்டொடு தொடுத்துப் பல்லாண்டு வாழ்த்தச்
சிறுகுறும் கூனும் குறளும் சென்று
பெறுக நின் செவ்வி, பெருமகன் வந்தான்;
நறுமலர்க் கூந்தல் நாளணி பெறுகென...

..........................................................

குறத்தியர் பாடிய குறிஞ்சிப் பாணியும்,

..........................................................

தொடுப்போர் உழவர் ஓதைப் பாணியும்,

..........................................................

கோவலர் ஊதும் குழலின் பாணியும்,

..........................................................

அஞ்சொல்கிளவியர் அந்தீப் பாணியும்
ஓர்த்துடன் இருந்த கோப்பெருந்தேவி
வால்வளை செறிய''

—நீர்ப்படைகாதை: 208-252.

பிரிவால் வருந்தும் தலைவியர் இயல்பு இதுவாகவும், பெருமுது பெண்டிர் ஆற்றுவிக்கவும் ஆற்றாளாய்த் துயர் உழந்தாள் என்றால், அது நெய்தற்குரிய இரங்கல் ஆகுமே அல்லது, முல்லைக்கு உரிய இருத்தல் ஆகாது எனப் பிறழக் கொண்டு, அதற்கு ஏற்பப் பொருள் கொள்வான் வேண்டி, சொற்களைக் கிடந்தாங்குக் கொள்ளாது வேண்டியவாறெல்லாம் கொண்டு சென்று கூட்டிப் பொருள் முடிக்கும் நச்சினார்க்கினியர் போக்கு ஏற்புடையதொன்றன்று.

நெடுநல்வாடைக்கு உரிய திணை பாலைக்குப் புறனான வாகை எனத் தம்முடைய துவக்க உரையில் கூறும் நச்சினார்க்கினியர், "பொய்யாவானம் புதுப்பெயல் பொழிந்தென" என்ற வரிக்கண்(2)வரும் "புதுப்பெயல்" என்பதற்குக் "கார்காலத்து மழை" என்றே பொருள் கூறியுள்ளார். கார்காலம் முல்லைக்கு உரியது. "காரும் மாலையும் முல்லை" என்பது தொல்காப்பியம்.

மேலும் அதே நெடுநல்வாடையில் தன் கணவனாம் பாண்டிய மன்னர் போர் மேற்கொண்டு பிரிந்து செல்லுங்கால், வினை முடித்து வருவதாகக் குறித்துச் சென்ற காலம் வந்துறவும் வந்திலனாக, அரசமாதேவி வருந்திக் கிடந்தாள். நரைதிறையுற்ற பெருமுது பெண்டிராம் செவிலித்தாயர் எளிய அரிய சான்றுகளை அடுக்கடுக்காகக் கூறித் தேற்ற முனைந்தனர். அவர்கள் தேற்றவும் அவள் தெளிவு பெற்றுத் துயர் தணிந்தாளல்லள். அவ்வாறு வருந்திக் கிடந்தவள், இறுதியில் துயர் உறுவது தகாது எனத் தானே உணர்ந்தாள். உணர்ந்தவள், பிரிவுத் துயர் மறந்து இருத்தற் பொருட்டுத் தன் சிந்தனையைக், கட்டிலின் விதானத்தில் கட்டப்பட்டிருந்த திரைச்சீலையில் தீட்டப்பட்டிருந்த, உரோகிணியைப் பிரியாத் திங்களின், ஓவியக் காட்சியில்

செலுத்தியிருந்தாள். இந்தக் காட்சியைப் புலவர் பார்த்துப் பாராட்டிப் பாடியுள்ளார்.

''நரை விராவுற்ற நறுமென் கூந்தல்
செம்முகச் செவிலியர் கைம்மிகக் குழீஇக்
குறியவும் நெடியவும் உரைபல பயிற்றி
இன்னே வருகுவர் இன்துணையோர் என
உகத்தவை மொழியவும் ஒல்லாள்; மிகக் கலுழ்ந்து
.........................................................
புதுவது இயன்ற மெழுகுசெய் படமிசைத்
திண்ணில மருப்பின் ஆடுதலையாக
விண்ணூர்பு திரிதரும் வீங்குசெலல் மண்டிலத்து
முரண்மிகு சிறப்பின் செல்வனோடு நிலஇய
உரோகிணி நினைவனள் நோக்கி நெடிதுயிரா
.........................................................
புலம்பொடு வதியும் நலங்கிளர் அரிவை''

—நெடுநல்வாடை: 152-166.

ஆகவே, ''தலைவியது வருத்தம் கண்டு, முதுபெண்டிர், விரிச்சி கேட்டு வந்து, ''தலைவர் வருவராதல் வாய்வது நின் எவ்வம்களை'' என்று பல்காலும் ஆற்றுவிக்கவும் ஆற்றாளாய்த் துயருழந்து கிடந்தாள் எனப் பொருள் கூறுதல் நெய்தற்குரிய இரங்கற் பொருட்டன்றி முல்லைக்குரிய இருத்தற் பொருட்டாகாது'' எனக் கூறி, அதற்காக, விரிச்சி கேட்டவர் படைவீரர் எனவும், காரணம் பல காட்டித் தேறியவன் தலைவன் எனவும், தேற்றிய காலம் பிரிந்து போவதற்கு முன் எனவும் மாற்றி நச்சினார்க்கினியர் பொருள் கூறியிருப்பது முறையாகாது என்பது நெடுநல்வாடைப்பாட்டில் காணலாம், இப்பகுதியாலும் உறுதியாதல் அறிக.

''சொல்முடிபு-சிறுவிளக்கம்'' என்ற தலைப்பின் கீழ், முல்லைப் பாட்டிற்கு உரை எழுதிய, உச்சிமேற் புலவர் கொள் நச்சினார்க்குஇனியர் அவர்கள். பாட்டைத், தமக்கு வேண்டியவாறெல்லாம், முன்னுள்ள சிலசொற்களைச் சில தொடர்களைப் பலவரிகளுக்குப் பின் கொண்டு சென்று கூட்டியும், அதே போல், பின் உள்ள சொற்களை, வரிகளைப் பலவரிகளுக்கு முன் கொணர்ந்து வைத்தும் பொருள் கூறியிருப்பதின் பொருந்தாமையினை விளக்கியுள்ளேன். நச்சினார்க்கினியர் உரை வகுத்திருக்கும் முறை பற்றி, நான் கூறியிருக்கும் கருத்தையே, பல்லாவரம் பொதுநிலைக்கழக ஆசிரியர் மறைத்திரு. சுவாமி வேதாசலம் என்னும் மறைமலை அடிகளார். 1903ல் ஆராய்ந்து வெளியிட்ட ''முல்லைப் பாட்டு ஆராய்ச்சி'' என்ற தம் நூலிலும், ''முல்லைப் பாட்டின்மேல் நச்சினார்க்குரை'' என்ற தலைப்புள்ள பகுதியில் கூறியுள்ளார்: ஆகவே அதை, எடுத்துக் காட்டாகத் தருவது முறை என்பதால், அவர் கருத்தை அப்படியே கொடுத்துள்ளேன்! அது, இதோ:

## முல்லைப் பாட்டின்மேல் நச்சினார்க்கினியருரை

இனி, இதுவே 'மாட்டு' என்னுஞ் செய்யுளுறுப்பின் பயனாமென்பது நுண்ணறிவுடையார்க்கெல்லாம் இனிது விளங்கிக் கிடப்பவும், இதன் கருத்துப் பொருள் இது வாதல் அறியமாட்டாத நச்சினார்க்கினியர், செய்யுளில் இடையற்று ஒழுகும் பொருள் ஒழுக்கம் அறிந்து உரை எழுதாராய், ஓர் அடியில் ஒரு சொல்லையுந் தொலைவிற் கிடக்கும் வேறோர் அடியில் வேறொரு சொல்லையுந் தமக்குத் தோன்றிய வாறெல்லாம் எடுத்து இணைத்துத் தாமோர் உரை உரைக்கின்றார். நச்சினார்க்கினியர்க்கு முன்னேயிருந்த நக்கீரர், இளம் பூரணர், பேராசிரியர், சேனாவரையர், பரிமேலழகியார், அடியார்க்கு நல்லார் முதலான உரையாசிரியன் மாராதல், பின்னேயிருந்த சிவஞான யோகிகள் முதலியோராதல் இவ்வாறு

செய்யுட்களைக் கண்டவாரெல்லாம் அலைத்து உரை எழுதக் கண்டிலம். மேலும் நச்சினார்க்கினியர் இங்ஙனஞ் செய்யுட்களை அலைத்து நலிந்து பொருள் சொல்லு முறையை ஆசிரியர் சிவஞானயோகிகள் தாம் இயற்றிய தொல்காப்பியச் சூத்திரவிருத்தியில் ஆங்காங்கு மறுத்தருளியவாறுங் காண்க. அகன்று கிடக்குஞ் செய்யுட் பொருளை அணுக வைத்துப் பொருத்திச் சொல்வதே தொல்காப்பியனார் கூறிய மாட்டு என்னும் உறுப்பாவதன்றிச் செய்யுள் ஒருபக்கமும் உரை ஒரு பக்கமுமாக வைத்து உரைப்பது அஃது அன்றாம் என்பது கடைப்பிடிக்க. அன்றன்று, நச்சினார்க்கினியர் உரைக்கும் வரைப்பொருள் சிறந்ததாகலின், அவர் அவ்வாறு செய்யுட்களை அலைத்துப் பொருள் கூறுதல் குற்றமாகாதெனின்; நன்று சொன்னாய், அவர் எவ்வளவுதான் சிறந்த உரை உரைப்பினும் அது செய்யுட் பொருளைக் கௌவிக் கொண்டு செல்லாமல் வேறுபடு மாயின் அது கொள்ளற்பாலதன்று என மறுக்க, செய்யுளுக்கு இசைய உரை எழுதுதல் வேண்டுமேயன்றி உரைக்கு ஏற்பச் செய்யுளை அலைத்து மாற்றல் வேண்டுமென்றல் ''முடிக்குத் தக்க தலை செய்து கொள்வேம்'' என்பார் சொற்போல் நகையாடுதற்கே ஏது வாமென்றொழிக. அற்றன்று, செய்யுளியற்றிய புலவரே ஓர் ஒழுங்குமின்றி அவ்வாறு சொற்களையும் பொருள்களையுஞ் சிதற வைத்துப் பாடினாராகலின் அக்கருத்தறிந்து நச்சினார்க்கினியர் அங்ஙனம் பொருள் உரைத்துக் கொண்டாரீ என்னாமோவெனின்; அறியாது கடாயினாய், உலகவியற்கையும் மக்களியற்கையும் அறிந்து வரிசை வரிசையாக அரும்பொருள் விளங்கித் தோன்றப் பாடும் நல்லிசைப் புலவர் அவ்வாறு ஒரொழுங்குமின்றிப் பாடினாரென்றல் உலகில் எங்குங் காணப்படாமையானும், அது நல்லிசைப் புலமை ஆகாமையானும் அங்ஙனம் சொல்லுதல் பெரியதோர் இழுக்காய் முடியும் என்றுணர்க.

ஆற்றாயின், மிக்க செந்தமிழ் நூற் புலமையும் நுணுகிய அறிவுமுடைய நச்சினிர்க்கினியர் அவ்வாறு இணங்காவுரை எழுதியதுதான் என்னையோவெனின்; வடமொழியில் இங்ஙனமே செய்யுட்களை அலைத்துப் பாட்டு ஒருபக்கமும் உரை ஒரு பக்கமுமாக இணங்காவுரை எழுதிய சங்கராசிரியர் காலத்திற்குப் பின்னேயிருந்த நச்சினார்க்கினியர், வடமொழியில் அவர் எழுதிய உரைகளைப் பின் முறைபார்த்து அவை போற்றமிழிலும் உரை வகுக்கப் புகுந்து தமிழ்ச் செய்யுள் வழக்கின் வரம்பழித்து விட்டாரென்றுணர்க: வேதாந்தசூத்திரத்திற்குச் சங்கராசிரியர் இயற்றிய பாடியவுரை அச்சூத்திரத்திற்குச் சிறிதும் ஏலாவுரை என்பது, ஆசிரியர் இராமாநுசர் பாடிய உரையானும் திபா (Thibaut) பண்டிதர் திருப்பிய ஆங்கிலமொழி பெயர்ப்பானும் உணர்க.

இனி ஆசிரியர் நச்சினார்க்கினியர் உரை பொருந்துமிடங்களிலெல்லாம் ஏற்றுக்கோடற் பாலதேயாம் என்பதும், அரிய பெரிய பழந்தமிழ் நூல்கள் விளங்குமாறு விளக்கவுரை விரித்த நச்சினார்க்கினியர் இவ்வாறு ஒரோ விடங்களில் நலிந்துரை எழுதுதல்பற்றி இகழப் படுவாரல்ல ரென்பதும் ஈண்டு வற்புறுத்துகின்றோம்.

தலைமை நிலையம் :

154, டி. டி. கே. சாலை, ஆழ்வார்பேட்டை,
சென்னை-18.

கிளை நிலையங்கள் :

79, பிரகாசம் சாலை (பிராட்வே),
சென்னை-108.

திருநெல்வேலி-6. மதுரை-1.
கோயமுத்தூர்-1. கும்பகோணம்-1
திருச்சிராப்பள்ளி-2. சேலம்-1.

**விலை ரூ. 12-00**

அப்பர் அச்சகம், சென்னை-108.